
# மனங்களின் ஊசல்கள்

கோபம்

சிந்தனை

பரிதாபம்



அன்பு

நெருக்கடி

கருணை

சிக்கல்

பார்வை

பாசம்

திருமதி. தாரிக்கா மர்ஸூக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனங்களின் ஊசல்கள்

(உணர்வூட்டும் கட்டுரைத் தொகுதி)

தாரிக்கா மர்ஸூக்

வெளியீடு:
வரையறுக்கப்பட்ட 'சிந்தனை வட்டம்' வெளியீட்டாளர்கள்
(தனியார்) கம்பனி
இல 14 உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை 20802, ஸ்ரீலங்கா
தொலைபேசி 081- 2493746
தொலைநகல் 081- 2497246

'சிந்தனை வட்டத்தின் ௨௫ வது வெளியீடு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனங்களின் ஊசல்கள்**

ஆசிரியை : திருமதி தாரிக்கா மர்ஸூக்
பதிப்பு : முதலாம் பதிப்பு - ஜனவரி 2006
வெளியீடு : *சிந்தனை வட்டம்.*
14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை,
ஸ்ரீலங்கா.
அச்சுப்பதிப்பு : ஜிபா பிரிண்டர்ஸ்
A10, இன்டஸ்ரியல் எஸ்டேட்
பல்லேகலை, கண்டி, ஸ்ரீலங்கா.
கணனிப்பதிப்பு : ஸீனத் நவாஸ்
ISBN : 955-8913-18-9
விலை : 200/-

**Manangalin Oosalkhal**

Subject : The Summary of the articles published and broadcasted in the Newspapers and Radio regarding the problems come across in human life

Title : **Manangalin Oosalkhal**
Author : **Mrs. Tharikka Marzook**
Published by : **Chinthanai Vattam**
**CV Publishers (Pvt) Ltd, 14, Udatalawinna Madige, Udatalawinna 20802, Sri Lanka.**
Edition : **1st Edition, January 2006.**
Language : **Tamil**
Type setted by: **Zeenath Nawaz**
ISBN : **955-8913-18-9**
Price : **200/-**
Printed by : **GIBA PRINTERS**
**A10, Industrial Estate,**
**Pallekele, Kandy, Sri Lanka**

**© Mrs. Tharikka Marzook 2006**

All Rights Reserved. No part of this Documentation may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.



இலக்கியத்தரையில்
நான் -
செழித்து வளர வித்திட்ட
என் அன்புப் பெற்றோர்க்கு
என் இதயம் நிறைந்த

# காணிக்கை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியையுடனான சகல
தொடர்புகளுக்கும்

Mrs. Tharika Marzook
No. 32/2, Lake Side Estate,
Kurunegala.
T.P. 0372231849



## பதிப்புரை

இலங்கை; வடமேல் மாகாணம், குருநாகலையை வசிப்பிட மாகக் கொண்ட தாரிகா மர்ஸுக் அவர்களின் "மனங்களில் ஊசல்கள்" எனும் உணர்வூட்டல் கட்டுரைத் தொகுதியினை சிந்தனை வட்டத்தின் 215 ஆவது வெளியீடாக வெளியிடுவது குறித்து மிகவும் மகிழச்சியடைகின்றேன்.

1988 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 'சிந்தனை வட்டம்' 2005 டிசம்பர் வரை மொத்தமாக 214 நூல்களை வெளியிட்டுள்ளது. 2005ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 'சிந்தனை வட்ட' வெளியீடுகளை சர்வதேசமயப்படுத்தும் பூர்வாங்க ஒப்பந்தங்களை நாம் செய்துகொண்டுள்ளோம். இந்த அடிப்படையில் சர்வதேச ரீதியில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் எழுத்தாளர்களின் நூல்களை 'சிந்தனை வட்ட'த்தின் மூலம் இலங்கையில் வெளியிடவும், இலங்கை எழுத்தாளர்களின் நூல்களை சிந்தனை வட்டத்தின் மூலம் வெளியிடும் போது அவற்றை சர்வதேச ரீதியில் விநியோகிக்கவும், சர்வதேச ஊடகங்களின் விமர்சனங்களுக்கு உட்படுத்தவும், சர்வதேச ஆவணக் காப்பகங்களில் ஆவணப்படுத்தவும் ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் எந்தவொரு வெளியீட்டு நிறுவனமும் மேற்கொள்ளாத இந்த ஏற்பாடுகளை 'சிந்தனை வட்டம்' பல்வேறுபட்ட பிரச்சினைகளின் மத்தியில் மேற்கொண்டமைக்கு மூல காரணம் எமது இலங்கை எழுத்தாளர்களின் ஆக்கங்களை சர்வதேச ரீதியில் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகவே

எமது இந்த திட்டத்தினை அமுல்படுத்தியதன் பின்பு முதல்கட்டமாக ஐக்கிய இராச்சியத்தில் வசித்து வரும் பிரபல எழுத்தாளரும், நூலகவியலாளரும், பன்னூலாசிரியருமான திருவாளர். என். செல்வராஜா அவர்களின் 'நூலியல் பதிவுகள்'எனும் நூலினை, ஐக்கிய இராச்சிய 'அயோத்தி' நூலக சேவைகளுடன் இணைந்து வெளியிட்டோம். சர்வதேசமயப்படுத்தல் திட்டத்தின் கீழ் 'சிந்தனை வட்டம்' முதல் வெளியிடும் இலங்கை எழுத்தாளரின் நூல் தாரிகா மர்ஸூக் எழுதிய 'மனங்களின் ஊசல்கள்' எனும் இந்நூலாகும்.

சிந்தனை வட்டத்தின் ஏனைய வெளியீடுகளுக்கு ஆதரவு தரும் வாசக நெஞ்சங்கள் இந்த நூலுக்கும் ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

மிக்க நன்றி.

***கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன்***
*(முகாமைத்துவப் பணிப்பாளர்)*

வரையறுக்கப்பட்ட 'சிந்தனை வட்டம்'
வெளியீட்டாளர்கள் (தனியார்) கம்பனி
இல 14 உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை 20802, ஸ்ரீலங்கா
தொலைபேசி 081- 2493746
தொலைநகல் 081- 2497246

*20-01-2006*



## மக்கள் தொடர்பாடல், தகவல், மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் அவர்களின்

# ஆசிச் செய்தி

தாரிக்கா மர்ஸூக்கின் 'மனங்களின் ஊசல்கள்' என்ற சிந்தனைத் தொகுப்புக்கு வாழ்த்துச் செய்தி வழங்க எனக்குக் கிடைத்த வாய்ப்பில் நான் மகிழ்ச்சியடைபவனாய் இருக்கிறேன்.

'செந்தூரத்திலும்', தென்றலிலும் அவ்வப்போது கண்ட, கேட்ட பெயராக தாரிக்கா மர்ஸூக் என்னுள் அறிமுகமாகி இருந்தார்

தினகரன் வாரமஞ்சரியின் செந்தூரமும், இலங்கை வானொலியின் தென்றல் நிகழ்ச்சியும் மெருகுபூசி அறிவுலகுக்கு அளித்துள்ள ஒரு அழகிய படைப்பே தாரிக்கா மர்ஸூக்கும், அவரது கருத்துக் களஞ்சிய நூலும்.

அரச ஊடகங்களின் அனுசரணையோடு படைப்பிலக்கியத்தில் கருத்தியல் துறையில் அமைதியாக அடியெடுத்து வைத்து உறுதியான ஒரு இடத்தை எட்டிக்கொள்வதற்கு தாரிக்கா மர்ஸூக் அனுப்பியிருக்கும் ஒரு தூதாகவே 'மனங்களின் ஊசல்கள்' எனும் இந்தத் தொகுப்பை நான் கருதுகிறேன்.

தாரிக்கா மர்ஸூக்கின் எழுத்தாழத்தையும், எண்ணச் செழிப்பையும் நான் ரசித்துப் பாராட்டுகிறேன்.

விரைந்து செல்லும் உலகத்தில் விரிந்து செல்லும் அனுபவ நூதனங்களில் திசைகளைத் தொலைத்து, திருப்தி இழந்து வரும் மனிதர்களின் வாழ்வுக்கு ஒரு தெம்பைத்தர முயற்சித்துள்ள அத்தனை மனிதநேயப் புத்திஜீவிகளின் தாகத்தைப்போல, தாரிக்கா மர்ஸூக்கும் ஒரு தாகத்தில் தவிப்பதை 'மனங்களின் ஊசல்கள்' மறு பதிப்புச் செய்கிறது.

படைப்பிலக்கியம் மனித வாழ்க்கைக்குப் பயனளிப்பதாய் இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற நம்பிக்கையோடு தாரிக்கா மர்ஸுக் எழுதுவதை அவரது சிந்தனையோட்டத்திலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. இந்த உலகத்தின் எந்த ஒரு மூலையிலாவது, அடையாளம் தெரியாத யாராவது சிலராவது தாரிக்கா மர்ஸுக்கின் மனங்களின் ஊசல்களால் மறுபிறவி எடுக்கக்கூடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இலங்கையின் ஒரு கரையோரத்தில் யாரும் அறியாத ஒரு மூலையில் இருந்து கொண்டு மானிட நேயத்தின் உந்துதலால் போதனைக்கென்று புறப்பட்டிருக்கும் இந்தப் பெண்ணின் மீது பிரியமே அதிகரிக்கிறது

அதுவும் ஒரு முஸ்லிம் பெண் எனும் போது பிரமிப்பு இரட்டிப்பாகிறது.

உலகத்தைச்சுற்றிச் சிறகடித்துப் பறந்து உயிர்களின் அவஸ்தைகளோடு உறவாடும் சந்தர்ப்பங்கள் இந்தப் பெண்ணுக்குச் சுதந்திரமாக்கப்பட்
டிருக்குமானால், நாடு போற்றும் ஒரு சிந்தனைப் பெண்போராளியை நாம் தரிசித்திருக்க முடியும்.

தாரிக்கா மர்ஸுக்கின் படைப்புகளும், பங்களிப்புகளும் மக்களிடம் மதிப்பும் வரவேற்பும் பெறும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

இந்த 'மனங்களின் ஊசல்களில் தத்தி மிதித்துப் பாய்ந்து இந்தத் தேசத்தின் சிகரத்தை எளிதில் எட்டுவதற்கு தாரிக்காவை நான் ஆர்வத்தோடு வாழ்த்துகிறேன்.

அவரை ஒரு சிறந்த எழுத்தாளராக்க உதவிக் கொண்டிருக்கும் அவரது கணவர் மர்ஸுக் அவர்களையும் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகி றேன்.

என்றைக்கும்

கவிஞர் எம்.எச். சேகு இஸ்ஸதீன் (வேதாந்தி)



# அணிந்துரை

மனித மனங்கள் தொடர்புபடும் வாழ்வின் எல்லா நிலைகளையும் படம் பிடித்துக்காட்டும் ''மனங்களின் ஊசல்கள்'' எனும் இந்த நூலின் ஆசிரியையான திருமதி தாரிக்கா மர்ஸுக் மாவனல்லையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பள்ளிப்பருவத்திலிருந்தே கலையாற்றலிலும் எழுத்தாற்றலிலும் அதிக ஆர்வம் மிக்கவர். தனது திருமண பந்தத்தால் பல்கலைக்கழக கல்வியை பாதியில் நிறுத்திவிட்டு கணவனுடன் குருநாகல் நகரில் குடிபுகுந்தாலும் தனது கலையாற்றலை எழுத்தாற்றலால் தொடர்ந்தும் வெளிப்படுத்தி வந்திருக்கிறார். பிரபல பத்திரிகைகளிலும், வானொலிகளிலும் தொடர்ந்தும் தனது பங்களிப்பைச் செய்துவரும் திருமதி மர்ஸுக் அவர்கள் குடும்பப் பொறுப்புக்களுக்கு மத்தியிலும் வாழ்வின் பல நிலைகளில் உள்ள விடயங்களைச் சிறு சிறு கட்டுரைகளாக எழுதி தொகுத்து நூலுருவாக வெளியிடுவதையிட்டு மிகவும் பெருமைப்படவேண்டியிருக்கிறது. பாடசாலைக் கல்வியை மட்டும் பூர்த்திசெய்திருக்கும் இவரின் ஆக்கங்கள் ஆழ்ந்த கருத்துக்களையும் பரந்த அனுபவங்களையும் சிறந்த ஆலோசனைகளையும் வெளிப்ப டுத்துவதையிட்டு இவரைப் பாராட்டாமலிருக்க முடியவில்லை.

இவரது இந்தத் தொகுதியில் உள்ள அனைத்துக் கட்டுரைகளும் ஏதோ ஒருவகையில் மனித உள்ளங்களுடன் தொடர்புபட்டு அவற்றின் ஊசல்களை வெளிப்படுத்துவதாய் அமைவதனால் நூலுக்கு அவர் கொடுத்திருக்கும் தலைப்பு சிறப்பாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்வில் அடிப்படையாக ஏற்படும் பிரச்சினைகளை யதார்த்த கோணத்தில் நோக்குவது ஆசிரியரின் ஆழ்ந்த சிந்தனையையும் இளமையிலும் அனுபவ முதுமையையும் எடுத்துக் காட்டுகிறது. எல்லா நிலைகளிலும் உள்ள பிரச்சினைகளை சுட்டிக்காட்டுவதோடு மட்டும் நில்லாமல் அவற்றுக்கு சிறந்த தீர்வுகளையும் தகுந்த ஆலோசனைகளையும் முன்வைத்திருப்பது வரவேற்கத்தக்கது. நூலை முழுமையாக வாசித்து முடிக்கும் போது மனதில் ஒரு அமைதிக்காற்று வீசுவதை உணர முடிகிறது.

உண்மையில் இந்த நூலில் உள்ள அனைத்து விடயங்களும் தனித்தனியே ஆய்வு செய்யக்கூடிய விடயங்கள் என்பதில் ஐயமில்லை. அவ்வாறு ஆய்வு செய்து நூலுருவாக்கும் ஆளுமை இந்நூலாசிரியருக்கு உண்டு என்பதை அவரது இந்த ஆரம்ப முயற்சி எடுத்துக் காட்டுகிறது. வாசகர்களாகிய நீங்கள் தான் அவரது முயற்சிக்கு ஊன்றுகோலாக இருக்க வேண்டும். உண்மையில் இன்றைய அவசர உலகில் இவ்வாறாக அரிய, சிறந்த கருத்துக்களைக் கொண்ட நூலை வாசிக்கக் கிடைப்பவர்கள் அதிஷ்டசாலிகளே.

நூலாரிசிரியர் எனது மாணவி என்பதையிட்டும் அவரது முதல் நூலுக்கு அணிந்துரை வழங்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டும் மனம் நிறைவடைவதோடு அவரது எழுத்துப்பணி சலிக்காமல் தொடரவும் பல நூல்களாக அவை வெளிவரவும் எனது ஆசிகளைச் சொரிவதோடு இளம் தலைமுறையினர் இந்நூலைப் படித்து வாழ்க்கையை இன்பமாக்க என் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன்.

நன்றி.

**எம்.ஐ.எம். கலீல்**
பீடாதிபதி,
கலைகலாசார பீடம்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்.



## நேசத்துடன்...

இலங்கையின் கலை இலக்கியப்பூங்காவில் நறுமணம் வீசும் கலைப் பூக்கள் மிக....மிக.... அரிதாக பூக்கும் இடம் தான் குருநாகல் பிரதேசம்.

இந்த இடத்தில் தென்றலோடு கலந்து நறுமணம் வீசும் ஒரு சில பூக்களில் ஒன்று தான் இந்த தாரிக்கா மர்சூக்.

கவிதை, கதை என்று எம் மத்தியில் பல நூல்கள் பூத்தாலும் கூட, கட்டுரை நூல்கள் பூப்பது மிகக் குறைவானதேயாகும்.

ஏழுவயதிற் கவிபாடிய சுப்பிரமணிய பாரதியை ஞானக்கண்ணாற் பார்க்கும் நம்மில் சிலர், ஏனோ இன்று பதினைந்து - இருபது வயதுகளில் கலை இலக்கியம் படைக்கும் எம் யுவதிகளை, வாலிபர்களை ஊனக் கண்ணாற் பார்ப்பது நாணக் கூடிய செயலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரும் புகழும் வரவேண்டுமென்று எழுதுகின்றார்களே என்று எம் மத்தியில் தரமான கலையுள்ளங்களை வளரவிடாது தடுக்கும் இவர்கள் *ஏன் சமூகத்துக்குச் செய்யும் தூய்மையான பல காரியங்களுள் இலக்கியம் படைப்பதும் ஒன்றாகும்* என்பதை மறந்து விடுகிறார்கள்.

இங்கே தாரிக்கா இலக்கியமே, இலட்சியமாய், இலட்சியமே இலக்கியமாய் கருதுகின்றார். தனது நெஞ்சக் கனலில் நீராகி -தன்னைத் தானே நீராக்கிக் கொண்ட அனுபவத்தைத்தான் மனங்களின் ஊசல்கள்" மூலமாக உணர்வோவியமாக்கித் தந்துள்ளார்.

பல குடும்பப் பொறுப்புகளுக்கு மத்தியிலும் தன் சிந்தனை துளிகளை கதை, கவிதை, நாடகம், கட்டுரை, விமர்சனமென்று தூவுகின்றார். இவரது சிந்தனை தன்னைப் பற்றியதுதான் அன்றி, மனித வாழ்வின் சகல நிலைகளிலும் உள்ளவர்களின் மனவெழுச்சிகள் பற்றியதாக, அவற்றுக்கான தீர்வுகளாக பரிணமித்திருப்பதை 'மனங்களின் ஊசல்கள்' என்ற இந்நூல் கோடிட்டுக் காட்டுகிறது. இவரது இளம் சிந்தனைகள் கட்டுரைகளாகி இங்கே நூலுருப் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கது. தாரிக்காவின் ஆழ்ந்த ஆளுமையையும், சிந்தனையாற்றலையும் நிச்சயமாக வாசகர்கள் பாராட்டாமல் இருக்கமாட்டார்களென்று நம்புகின்றேன்.

இன்றைய கலையுலகில் தமிழ்மொழி இலக்கியத்தின் எல்லைகளை விஸ்தரித்துக் கொண்டிருக்கும் பெருமிதம் மிக்க கட்டுரைகளை தாரிக்காவைப் போன்றோர் நூலாகத் தருவார்களென்று எதிர்பார்க்க முடிகிறது.

பூமிக்கடியில் ஈரம் இருக்கின்ற இடமெல்லாம் தன் வேர்விரல்களை நீட்டும் அடிமரம் போல் தாரிக்காவின் சிந்தனைகளும் நீண்டு செல்ல வாழ்த்துக்கள்.

**கலைமகள் ஹிதாயா ரிஸ்வி**

இல-677: அஹ்மட் வீதி,
சாய்ந்தமருது - 14. (கி.மா.) 077-6599556



# தென்றலில் கலந்த துளி

தாரிக்காவின்
சிந்தனை ஊற்றில்
கசிந்த...,
இந்த துளிகள்
தென்றலோடு கலந்தவைகள்!
வரட்சியாகிப் போன
கலை நாவுகளுக்கு
தாகம் தீர்த்தவைகள்!

'சிந்தனை வட்ட'பதிப்பில் மலரும்
'மனங்களின் ஊசல்களை'
கலையுள்ளங்கள்
தரங்கண்டு
மதிப்பீர்
மகிழ்வீர்!!
தாரிக்காவின் இந்நூலை
படிக்கவும்.....
மகிழவும்......
உணரவும்....
நெஞ்சு உரமும் வேண்டும்!
ஆமாம்.
தென்றலோடு கலந்தவை அல்லவா
அதனால்-
சுகமும் உண்டு!
நேசவுள்ளங்கள்
தடவிக்கொள்ளட்டும்!!

*பிரியமுடன்*
**கே. நாகபூஷணி**
அறிவிப்பாளர்
இலங்கை வானொலி
கொழும்பு -07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

திருமதி தாரிக்கா மர்ஸுக் எழுதியுள்ள ''மனங்களின் ஊசல்கள்'' எனும் இந்த நூலானது வாழ்க்கையின் பல யதார்த்தங்களைத் தொட்டுச் செல்கிறது. இந்த அவசர யுகத்தில் மனிதர்கள் படும் அவஸ்தைகளையும் மனங்களின் கோலங்களையும் படம் பிடித்துக் காட்டுவதாய் இதிலுள்ள கட்டுரைகள் அமைகின்றன. இளம் தலைமுறையினரும் வாழ்க்கைக்குத் தேவையான சீரிய சிந்தனைகளை முன்வைக்க முடியும். முன்வைக்கிறார்கள் என்பதற்கு இந்த நூலாசிரியரே ஒரு முன்மாதிரி.

ஒரு பெண்ணாக இருந்த போதும் சமூகத்தில் நிலவும் துஷ்பிரயோகங்களையும் உரிமை மீறல்களையும் சமூக அவலங்களையும் பக்கம் சாராது தைரியமாகக் கூறியிருக்கிறார் என்பது பெண் இனத்திற்கே பெருமை சேர்க்கிறது. இன்றைய இயந்திர வாழ்க்கையில் இரும்புகளாகிவிட்ட உள்ளங்களை சற்று கனியச் செய்வதற்கு இவ்வாறான சிந்தனைக் கருத்துக்கள், ஆலோசனைகள் ஆயுதங்களாக அமையும் என்பதையிட்டு இந்நூலாசிரியரைப் பாராட்டுகிறேன்.

இவரது இந்தச் முயற்சிக்காகவும், இது மென்மேலும் தொடரவும் ஆசிப்பதோடு, இந்நூலினால் மானிடம் பயன் பெறவும் இவ்வாறான முயற்சிகள் இளம் தலைமுறையினரிடமிருந்து அதிகம் வெளிக்கிளம்பவும் ஆசிக்கிறேன்.

**''ஒரு சிட்டுக்குருவி இப்பொழுதுதான் சிறகு முளைத்துப் பறக்கத் துவங்குகிறது. அது உயரப்பறக்க வழிவிடுங்கள்!''**

*பேராசிரியர்* **வை. நந்தகுமார்**

புவியியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை



# என்னுரை

இந்தப் பரந்த கலையுலகில் எனது முதற் பாதத்தை ''மனங்களின் ஊசல்கள்'' நூல் மூலமாக பதிக்கிறேன்.

சிறுகதை, கவிதை என்று பல நூல்கள் எம் மத்தியில் வெளிவரும் இந்த கலையுலகில் கட்டுரை எழுதுவதே எனக்கு மிகமிக விருப்பமாகும். அதனால் எழுதுவதே எனது இலட்சியமாகும்.

எம் தேசத்தில் எத்தனையோ தரமான படைப்பாளர்கள் மத்தியில் நானும் ஒரு சிறு வித்தாகவுள்ளேன். எனது இந்த வளர்ச்சி எதிர் காலத்தில் ஓங்கிக் கிளை பரப்பும் என்ற நம்பிக்கையுண்டு.

இந்த நூலை வெளியிட எனக்கு ஊக்கத்தை ஏற்படுத்தியதுடன், இந்த நூல் வெளிவரக்காரணமாயிருந்த அன்புச் சகோதரி கலைமகள் ஹிதாயா ரிஸ்வியை என்றென்றும் குளிர்ந்த மனதோடு நினைவு கூரத் தயங்கமாட்டேன்.

என்னுள் மலர்ந்த இந்த கட்டுரைப் பூக்களை அழகான முறையில் மாலையாக பதிப்பாக்கித் தரும் சிந்தனை வட்டத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாபூஷணம் புன்னியாமீன் சகோதரர் அவர்களுக்கு என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது ஆக்கத்தையெல்லாம் தரம் கண்டு களம் தந்து உதவிய அத்தனை அறிவிப்பாளர்களும் எனது வளர்ச்சிக்கு உரமிட்டவர்களே! அவர்களையும் எனது ஆக்கங்களை பிரசுரித்த பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறுபட்ட பணிகளின் மத்தியிலும் எனது இந்த நூலுக்கு ஆசிச்செய்தி தந்த மக்கள் தொடர்பாடல், தகவல், நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சரும், கவிஞருமான கௌரவ எம். எச். சேகு இஸ்ஸதீன (வேதாந்தி) அவர்களுக்கு என்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

அத்துடன் அணிந்துரை தந்த எனது கௌரவ ஆசிரியர் எம்.ஐ.எம். கலீல் பீடாதிபதி (தென் கிழக்கு பல்கலைக்கழகம்) அவர்களுக்கும் ஆசியுரை தந்த பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வை. நந்தகுமார் அவர்களுக்கும் எனது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய அக்கா நாகபூஷணி (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) மற்றும் என்னை சேர்ந்தவர்களுக்கும் எனது நன்றிகள் என்றும் நிழலாக தொடர்ந்து செல்லும்

எனது இந்த முயற்சி தொடர அன்பு நெஞ்சங்களின் ஆதரவையும் விமர்சனங்களையும் நாடி நிற்கிறேன்.


## தாரிக்கா மர்ஸூக்

இல 32/2 லேக்சைட் ஸ்டேட்
குருநாகல்.
20- 01 - 2006




## உள்ளே....


1. கடமையற்றவனுக்கு உரிமை இல்லை
2. பிரச்சினைகளில் நாம்
3. அனுபவமே அறிவு
4. நீர்வாகி நீங்களே..
5. வேண்டாமே பொறாமை!
6. அவசரயுகம்
7. வெற்றியின் இரகசியம்
8. யோசனைகளை கூர்மையாக்கும் விமர்சனங்கள்..!
9. முயற்சியே முதற்படி
10. வெற்றி ஒரு பாடத்திட்டம்
11. நீங்களும் தலைவராகலாம்.
12. ஊனமுற்ற சிறுவர்கள்
13. வாழ்க்கை வாழ்வதற்கே
14. குடும்பப் பிரச்சினைகளின் தீர்வு இதுதான்
15. ஆசிரியர்களின் தவறு
16. மனங்களிடையே நட்புறவு
17. தாயின் தவறு
18. விவாகரத்தின் விபரீதம்
19. நான் என்கின்ற மையம்
20. தொழில் ஒரு தூக்குக் கயிறாய்...
21. சிறகை விரித்தால் சிகரம் தொடலாம்.
22. வீட்டுப்பிரச்சினைக்கு மருந்து வீட்டுக்குள்ளேயே
23. பிள்ளைகளைத் துன்புறுத்தும் தாய்
24. ஏழைகளுக்கு உதவுங்கள்
25. முதுமை
26. இல்லறத்தில் அமைதி நிலவ
27. திருமணம் பெற்றோர் சம்மதம் தேவையா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. வார்த்தைகளிலே வாழ்க்கை
29. நன்றி சொல்ல வேண்டும்.
30. திறமை புறக்கணிக்கப்படுகிறதா?
31. இன்றைய இளைஞர்கள்
32. படிப்பே பாரமா?
33. வாழ நினைத்தால் வாழலாம்
34. கசப்பா? துப்பி விடுங்கள்
35. நட்பு ஏன்?
36. எங்கே தேடுகிறீர்கள்
37. விதியை நம்பாதீர்கள்
38. மனம் விட்டுப் பேசுதல்
39. காலம் கடந்த கை சேதம்
40. வாழ்க்கைக்கு ஒரு ஏவுகணை
41. வேலை செய்யும் பெண்களின் பிரச்சினைகள்
42. தோல்விகளுக்கு நியாயம் இல்லை
43. நாம் நமக்குள் முழுமையானால்...
44. வாழ்க்கை என்பது
45 அந்த நாள் ஞாபகம்
46. ஆசை அலை போல...
47. மன்னிப்பும் மருந்தாகும்
48. மன நிம்மதிக்கு என்ன விலை?
49. ஆளுமை இன்றேல் தாழ்மை தான்!
50. படித்தால் மட்டும் போதுமா?
51. யார் பரிபூரணவாதி?
52. மாசற்ற மனமே
53. பலமும் பலவீனமும்
54. அன்பான பேச்சு
55. பெற்றோரின் நலன் பேணல்



# மனங்களின் ஊசல்கள்

(உணர்வூட்டும் கட்டுரைத் தொகுதி)

தாரிக்கா மர்ஸுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CV PUBLISHERS (PVT) LTD.
*Printers & Publishers*
**14, Udatalawinna Madige, Udatalawinna. 20802**
Tel: 081-2493746, 081-2493892, Fax: 081-2497246
e-mail:puniyame@sltnet.lk



01

# கடமையற்றவனுக்கு உரிமையில்லை!

இந்த உலகில் பிறந்திருக்கும் ஒவ்வொரு மனிதர்களுக்கும் உரிமைகள் பல இருப்பது போல, கடமைகளும் உண்டு, கடமைகளைச் சரியாகச் செய்யாதவர்களுக்கு உரிமையும் இல்லை என்றால் அது மிகையாகாது!

ஒவ்வொரு மனிதனும் அவனுக்குரிய தரத்தில் கடமைகளைக் கொண்டிருக்கின்றான். சிலருடைய கடமைகள் தன்னளவிலும், சிலருடைய கடமைகள் சமூக அளவிலும் சார்ந்தவைகளாக அமைகின்றன.

இந்தக் கடமையுணர்ச்சிகளானது எவருக்குமே தானாகச் சுமத்தப்பட்டவையல்ல. மாறாக அது சிறு பராயத்திலிருந்தே உருவாகி உச்சத்திற்கு வந்தவைகளே. யதார்த்த வாழ்க்கையில் தாயிடமிருந்து தான் இந்தக் கடமையுணர்வுகள் கடத்தப்படுகின்றன. பிள்ளைகளை எத்தகைய கடமையுணர்வுடன் தாய் வளர்க்கிறாளோ அதே கடமையால் வந்தது தான் பிள்ளை மீது தனக்குள்ள உரிமையாகும். பாரிய கடமையோடு தன்னை வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்கள் மீதும் அவர்களின் சொத்துக்களின் மீதும் எவ்வளவு உரிமை உள்ளதோ அதையும் விட மேலான பெற்றோரைப் பராமரிக்க வேண்டிய கடமைகள் பிள்ளைகளுக்கு உண்டு. வெறுமனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையை மட்டும் தனதாக்கிக் கொண்டு கடமையிலிருந்து தவறுபவர்களுக்கு உரிமையும் இல்லை என்பது தான் இயற்கையின் நியதி!

இளமையில் இருந்து வெளிப்படும் கடமைகள். இறுதி வரையும் நிலைத்திருப்பவை. தாய், தந்தையரின் கடமைகள் அவர்கள் இருக்கும் வரை உண்டு. குடும்பத்திற்கு மூத்த மக்களின் கடமைகள் அவர்கள் இருக்கும் வரை உண்டு நாட்டின் தலைவனின் கடமைகள் அவரின் பதவி இருக்கும் வரை தான் உண்டு. உண்மை, நேர்மை, நம்பிக்கை இவைகள் குறித்து கரிசனையும் அச்சமும் உள்ளவர்கள் தனது கடமையிலிருந்து தவற மாட்டார்கள். இன்று உலகில் பெரும் பாலான மனிதர்கள் கடமையிலிருந்து தவறிவிட்டு உரிமைக்காக மட்டும் போராடுபவர்களே. பிறரிடமிருந்து நாம் கண்டு கொள்ளும் முன் மாதிரிகளே கடமைகளைத் திருந்தச் செய்ய உதவுவன. பெற்றோரின் முன்மாதிரி பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்டாகும். ஆசிரியர்களின் முன்மாதிரி மாணவர்களுக்கு எடுத்துக் காட்டாகும் இங்கே பலருக்கு பல உரிமைகள் இருப்பது போல அதற்கு சமனான கடமைகளும் உண்டு. கணவன் மனைவி மீது உரிமைகள் இருப்பது போல கடமைகளும் உண்டு. கடமைகளிலிருந்து தவறுபவர்களுக்கு உரிமையற்ற நிலையில் வாழ்க்கையே தவறிவிடும். பொறுப்புக்களும், கடமைகளும் ஒன்றோடொன்று தொடர்புடையது. சில கடமைகள் பொறுப்புக்காகச் சுமத்தப்படுபவை. இது உரிமை கொடுக்காமல் கடமையை வழங்குவதாக அமையும். கடமைகள் ஆண்களுக்கு வேறு பெண்களுக்கு வேறானதல்ல. உரிமைகள் இருக்குமிடத்தில் நிச்சயமாகக் கடமைகளும் உண்டு. ஆனால் சமூகத்தில் ஆண்களை விடவும் கடமையானவர்கள் பெண்கள். காரணம் சமுதாயத்தின் கண்களாகப் பெண்கள் விளங்குகிறார்கள். கண்கள் தடுமாறினால் முழு சமதாயமுமே சீரழிந்துவிடும்.

தாய் என்கின்ற தலைமைத்துவ உரிமை சமுதாயத்திற்காக பல கடமைகளைச் சுமந்து வருகின்றது.



பெரியவர்கள் சிறியவர்கள் மீது பல உரிமைகளையும், அதிகாரத்தையும் காட்டுகிறார்கள். ஆனால் பிள்ளைகளுக்கு ஆரம்பத்தில் செய்ய வேண்டிய அடிப்படைக் கடமைகளை மறந்துவிட்டு ஒரு கட்டிடத்தின் அத்திவாரம் சரியாக அமைந்தால் தான் அந்தக் கட்டிடம் உறுதியாக அமையும். பிள்ளைகள் வளர்ந்த பிறகு அவர்களின் கடமைகளை மறந்துவிட்டு உரிமைக்காக மட்டும் போராடுவது புதுமையல்ல.

கடமையும் - உரிமையும் மாறி மாறி வருவதனால் அதனை கைவிடாது ஏற்க வேண்டிய பொறுப்பு உலகில் பிறந்திருக்கும் ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு. கடமை தவறினால் உரிமையைத் தவற நேரிடும். ஜாக்கிரதை!

...............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02

## பிரச்சினைகளில் நாம்...

நமக்குள் ஏற்படும் வருத்தங்கள், குழப்பங்கள், மனக்கசப் புக்கள் அனைத்துக்கும் நாமே காரணமாகின்றோம். நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டியது நம்மால் நமக்கே பிரச்சினைகள் உருவாவது எப்படி என்பதைத்தான். அந்தத் தடுப்பை அகற்றினால் நிச்சயமாக எப்பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும்.

இயற்கையிலேயே மனிதன் கரடுமுரடான குணங்களையு டையவனாக இருக்கின்றான். பேராசை, பொறாமை, பதவிவேட்கை, மதிப்பு போன்றவைகளால் ஒருவரோடு ஒருவர் குரோத மனப்பான் மையை வளர்த்துக்கொண்டும், போட்டியிட்டுக்கொண்டும் சண்டை யிட்டுக் கொள்கிறார்கள். இந்த சண்டைகளால் வரும் பிரச்சினைகளே உலக சண்டையாகவும், யுத்தங்களாகவும் மாறுகின்றது. ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே நோக்கினால் இந்த உண்மையை உணர்ந்து கொள்ளலாம். நம்முடைய பிரச்சினைகள் வெளியே இல்லை. நமக்குள்ளே நம்மால் உருவானவை என்றால் அது மிகையில்லை.

நமக்குள் உருவான பிரச்சினைகளே நாம் அகப்பட்டுக் கொண்டிருக்கும் பொறி. அதிலிருந்து விடுபட எல்லோராலும் முடியும். அந்தப் பொறியை உருவாக்கியது மனிதன் தான். எனவே



ஒவ்வொரு மனிதனும் அதிலிருந்து விடுதலைபெற முயற்சிக்க வேண்டும். மனிதன் உருவாக்கிய சமுதாயம் மனிதனாலே சீரழியக் கூடாது.

வாழ்க்கையில் ஏற்படும் முழுப் பிரச்சினைகளும் உறவாலும், தொழிலாலும் உருவானவைகளாகும். உறவுகள் புனிதமாகவும், தொழில்கள் நீதியாகவும் இருந்தால் பிரச்சினைகள் வருமா? வாழ்க்கையில் ஒருவரை ஒருவர் புரிதலே செயலாக மாறுகின்றது. நாம் போகிற வழியில் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டும். மொத்தத்தில் ஒருவரின் பிரச்சினையில் இன்னொருவர் தலையிடாமல் இருந்தால் அதனைத் தீர்ப்பது சுலபம்.

உலகில் இருக்கும் ஒவ்வொரு மனிதர்களையும் நோக்கிப் பாருங்கள், அவர்கள் உருவத்தால் வேறுபட்டவர்களாகவும், நடை. உடை, பாவனைகளில் வேறுபட்டவர்களாகவும் இருக்கலாம். ஆனால் உள்ளுக்குள் இருக்கும் பிரச்சினைகள் எல்லா மனிதர்களுக்கும் பொதுவானவையாகவே இருக்கின்றன. எனவே, எல்லாப் பிரச்சினை களுக்கும் தீர்வு பொதுவாக அமைதல் வேண்டும். அதற்காக பல உத்திகளைக் கையாள முடியும். நாம் நம்முடைய பொறுப்பை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். நம்முடைய பிரச்சினை வெளியே இல்லை. உள்ளே தான் இருக்கின்றது. பிரச்சினை எதுவோ அதிலே தான் தீர்வும் இருக்கின்றது. முதலில் நீங்கள் எப்படியான மனிதன் என்பதை நீங்களே ஒரு சுயவிமர்சனம் செய்து பாருங்கள்.

ஒவ்வொருவரினது பிரச்சினையும் இன்னொருவருடன் தொடர்பு பட்டதாய் இருக்கும். உதாணமாக அன்பை எடுத்து நோக்கினால் நாம் இன்னொருவர் மீது வைப்பது அன்பு இது ஆசையோ மகிழ்ச்சியோ அல்ல அது ஒரு புரிந்துணர்தல் ஆகும். அதன் வேதனையையும், மகிழ்ச்சியையும் மனிதன் புரிந்தால் தான் அது அன்பாக அமையும், இல்லாதவிடத்தில் வீண் வம்புகள் விளையும்.

மனிதனுக்குப் பிரச்சினைகள் ஏற்படும் போது ஒரு உளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த புரட்சி ஏற்படுகின்றது. இதுவே மனிதனின் வாழ்வை திசை திருப்புகின்றது. பலர் நமது பிரச்சினைகளுக்கு ஆயிரம் கதைகள் கூறுவார்கள். அதற்கெல்லாம் நாம் அடிபணியக் கூடாது. நாமே தான் நமது பிரச்சினையை கண்டறிந்து தீர்வைக்காண வேண்டும். பிரச்சினைகளுக்கு சரியான தீர்வை எதிர்பார்ப்பவன் தவறான மனிதனிடம் ஆலோசனை பெறக்கூடாது. சிலரின் தவறான ஆலோசனைகள் முழு வாழ்வையும் சஞ்சலங்களுக்கு உட்படுத்தி விடக் கூடியது. குடும்ப வாழ்வு புனிதமானது, தொழிலும் புனிதமானது, நட்பும் புனிதமானது, இதன் புனிதத் தன்மை பிரச்சினைகள் வரும் போது கெட்டு விடக்கூடியது.

மனிதனுக்கு வரும் பிரச்சினைகள் யாவும் நிலைத்து நிற்பவையல்ல. அது ஓடும் தண்ணீரைப் போன்று ஓடிச் செல்பவை அன்று நாம் பட்ட பிரச்சினைகளை இன்று நாம் யோசித்தால் சிரிப்பு வரும். மனதின் கிளர்ச்சி குறையும் போது பிரச்சினைகள் இலகுவாகி விடும். வேதனைகள் குறைந்துவிடும்.

எனவே, பிரச்சினைகளிலிருந்து நாம் ஒதுங்கிவிடக்கூடாது. அதற்கு முகம் கொடுக்க வேண்டும். இது எமது வாழ்வின் ஒரு பகுதியாகும். இவைகள் தான் எமது அனுபவங்கள். அனுபவங்கள் தரும் புத்தியை அறிவு தருவதில்லை.



03

# அனுபவமே அறிவு

மனித வாழ்க்கையில் துன்பம் ஒரு தொடர்கதையாகவும், இன்பம் ஒரு விடுகதையாகவுமே அமைகின்றது.

பிறப்பதும் துன்பம், இறப்பதும் துன்பம் அரிதாய் கொஞ்சம் மகிழ்ச்சி, இவ்வளவு தான்மிகுதி.

இந்தத் துன்பங்களை மட்டும் தீர்க்கும் வழியை மனிதன் அறிந்துவிட்டால்.. ஆனால் அதனைக் கண்டறியும் வகையில் அவனது இதயத்தையோ, மனதையோ, மூளையையோ பயன்படுத்துவதில்லை.

துன்ப நிலையிலிருந்து விடுபட முதலில் மனிதன் தன் மனதை தானே நேசிக்க வேண்டும். தன் மனதின் தன்மையை தானே அறிவதற்கு அது பெற்ற அனுபவங்களைப் பாடமாக மீட்ட வேண்டும். அப்போதுதான் தன் மனதின் தன்மை தனக்குத் தெரியும்.

இளமை முதல் முதுமை வரை ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு கணத்திலும் ஆயிரம் அனுபவங்களைப் பெறுகிறான். அவனால் அனுபவங்களைத் தவிர்க்க முடியவில்லை. அவன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அது தொடர்கிறது. அவைகளை அவன் உணர்ந்தாலும் உணராவிட்டாலும் நிகழ்ந்தே தீரும். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவங்களிலிருந்து மனிதன் கற்றுக்கொள்ளும் பாடத்தை அறிவால் அடைய முடியாது. மனத்தெளிவுக்கு அனுபவமே மிகமிக இன்றியமை யாதது.

சிறுபராயத்தில் பெற்ற அனுபவம், டீன்ஏஜ் வயதில் பெற்ற அனுபவங்கள் என ஒவ்வொரு பருவத்திலும் பெற்ற அனுபவங்கள் ஒவ்வொரு மனிதனின் மூளையிலும் கல்லில் செதுக்கிய எழுத்துபோல் மறையாமல் இருக்கும்.

சில வேளை அவைகள் பெரிய அனுபவமாகவோ, சிறிய அனுபவமாகவோ, துன்பம் கொடுக்கும் அனுபவமாகவோ, இன்பமான அனுபவமாகவோ அமையலாம். ஆனால் இரண்டையும் மறக்க முடியாதது மனம் ஒன்றால் மாத்திரமே.

அனுபவத்துடனே மனிதனுக்கு ஒப்பிடும்போக்கு ஏற்படுகின்றது. துன்பப்படும் ஒருவன் இன்பமான ஒருவனைப்பார்த்து தன்னோடு ஒப்பிடுவது சகஜமான நிலையாகும்.

அனுபவங்களற்ற மனம் எளிய மனத்துக்கே ஒப்பாகின்றது. அனுபவங்கள் அதிகரிக்க அதிகரிக்க மனபலம் அதிகரிக்கின்றது. இதயம் வலிமை பெறுகின்றது. அனுபவம் நிறைந்த மனமானது அதிருப்திக்குள்ளாகி இருந்தாலும் அதில் தான் வேகமும் - விவேகமும் நிறைந்திருக்கும். மனிதனின் சிக்கலான ஒவ்வொரு அனுபவமும் மனதில் பக்தியை விட்டுச் செல்கின்றது.

ஒவ்வொரு அனுபவமும் ஒவ்வொரு அடையாளக் குறியை பதிய வைத்துவிட்டுச் செல்கின்றது. பாடசாலையில் பல அனுபவங்கள்,நட்பால் சில அனுபவங்கள், காதலால் சில அனுபவம் என மனித வாழ்வில் எண்ணற்ற அனுபவங்கள் ஏற்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு அனுபவமும் முன்னைய அனுபவத்துடன் இணை வதில்லை. அவைகள் விலகியே மறைகின்றன.



ஒரு மனிதன் இன்னொரு மனிதனை அவமதித்தால் அந்த அவமதிப்பும் அதற்கான எதிர்வினையும் நினைவாய்த் தங்கிவிடுகின்றது. அடுத்த முறை எதிர்கொள்வதென்றால் அந்த அனுபவம் தான் எதிர் கொள் கின்றது.

எனவே அனுபவம் விட்டுச் சென்ற சில பதிவுகள் விரும்பத்தக்க தாகவும் இருக்கும். சில வேளை வெறுக்கத்தக்கதாகவும் இருக்கும். ஆனால் இரண்டுமே அறிவையும் ஆற்றலையும் வளர்த்துவிட்டுத் தான் விலகும்.

புகழ்ச்சியோ இகழ்ச்சியோ அதனை ஏற்றுக்கொண்டு விடுகிற போது அது மனதில் பதிவதில்லை. ஏற்றுக்கொள்ளாவிடத்தில் தான் அடையாளக் குறி ஏற்படுகின்றது. ஏழையாக வாழ்பவர்களும் நம்பிக்கை இழந்தவர்களும், அர்த்தமற்ற வாழ்வு வாழ்பவர்களும் தன்னகத்தே மிகப்பெரிய அனுபவ மூட்டைகளை எதிர்காலம் நோக்கிச் சுமந்து வருகிறார்கள். யாரோ இறக்கிற போது மனிதன் அழுகின்றான். தன்னால் எதையும் சாதிக்க முடியாத போதும் கவலையுறுகிறான். தனக்கு உதவி யாரும் இல்லையே என்றும் வருந்துகின்றான். அகம்பாவம் கொண்டவனுக்கு இத்தகைய அனுபவங்கள் இல்லை.

மனிதர்களின் வார்த்தைகளை விரிக்கின்ற போது அனுபவங் களை அறிந்துகொள்ளலாம். மரணத்தின் அனுபவத்தைத் தவிர மற்ற அனுபவங்கள் யாவற்றையும் மனிதனால் சிந்தித்து விபரிக்கலாம். காலத்தைப் போல அனுபவங்களும் போகின்றன.

மனிதனின் சிந்தனைகளே அனுபவமாகவும், அறிவாகவும் நினைவுகளைச் சேமிக்கின்றது. வாழ்வை நாம் அறிவோம் அனுபவத்தின் மூலம் அதனைத் தொகுப்போம். அனுபவமே அறிவின் திருவிளையாடல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04

## நீர்வாகி நீங்களே....

வாழ்க்கை என்பது நாம் எதிர்கொள்ளும் நிமிடங்களின் தொகுப்பாகும். அது உங்களுடையது. அதை நீங்கள் தான் திட்டமிட்டு, கட்டுப்படுத்தி நீங்கள் தேர்ந்தெடுத்த இலட்சியங்களால் அதை திறம்பட உருவாக்கிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அது உங்களை நிர்வாகித்துவிடும் அதனால் வாழ்க்கையில் பல பிரச்சினைகளும், தொல்லைகளும், கஷ்டங்களும் வாக்குவாதங்களும் மாறுபாடுகளும் ஏற்படும்.

உங்கள் வாழ்க்கையை நீங்கள் விரும்புகிற முறையைக் கொண்டு அமைத்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் அடுத்தவர்கள் தூக்கி எறிந்த மிகுதியைத் தான் நாம் ஏற்றுக்கொள்ள நேரிடும். வாழ்க்கையை மனிதன் நிர்வகிப்பது எப்படியென்றால்.. நாளை விடியும் வரை அது பற்றிய கவலை வேண்டாம். அடுத்த நாளைப் பற்றி இன்றே எண்ணத்தொடங்கினால் அதாவது, நாளைய வாழ்வை இன்றே வாழத்தொடங்கினால் நேற்றைய பிரச்சினைகளுடன் இன்றைய பிரச்சினைகளும் நாளைய பிரச்சினைகளும் சேர்ந்து மனதளவிலும், உடலளவிலும் அதிக சுமைகளையே சுமக்க நேரிடும்.

மனிதீன் ஒரு நாளில் ஒரு நாளைய வாழ்வை வாழ்ந்தால் தான் வாழ்வை வெற்றிகரமாக நிர்வகிக்க முடியும். நேற்றைய சுமையுடன் இன்றைய சுமையையும் நாளைய சுமையையும் சுமந்



தால் தள்ளாட நேரிடும். உடல் அளவிலும் சரி, மனதளவிலும் சரி, உணர்வு பூர்வமாகவும் சரி அதிக சுமையை மனிதன் சுமக்கக் கூடாது என்று மருத்துவ நிபுணர்களும் எச்சரிக்கின்றார்கள்.

மின்சார இயந்திரங்களுக்கு அளவோடு தான் மின்சாரத்தைப் பாய்ச்சுகிறார்கள். அதில் அளவுக்கு மீறினால் அது பழுதாகி விடும். அது போன்றது தான் மனிதனின் அவயவங்கள். இதயம் கூட அதிகம் வேலை செய்தால் நின்று விடும். நுரையீரல்களால் கூட அளவுக்கதிகமான காற்றை சுவாசிக்க முடியாது மூளையால் தனது வயதுக்கு மிஞ்சிய எதையுமே கிரகிக்க முடியாது. நரம்புகளில் கூட அளவான இரத்தமே ஓடுகிறது. இதன் அளவில் அளவு மீறப்பட்டால் அதன் விளைவாக ஆபத்தான நோய்களே உருவாகின்றது.

நேரத்தைத் திட்டமிடுவதன் மூலம் மனிதன் வாழ்க்கையை நிர்வகிக்க வேண்டும். அந்தந்த நேரத்தில் அந்தந்த வேலையைச் செய்து முடிக்க வேண்டும். எவ்வளவு பிரச்சினையானாலும் அதை இரவு முடிவதற்குள் தீர்த்து விடுங்கள்.

''இருள்படிந்த நாளாக இருந்தாலும், மழை நாளாக இருந்தாலும் நாளைய விடிவு உங்களுக்கு வெளிச்சத்தையே தரும். நேற்று நிமிர்ந்து நின்ற நீங்கள் நாளையும் அவ்வாறே இருக்க முயற்சி செய்ய வேண்டும்.

காலம் தான் மனிதனின் வாழ்க்கையாகின்றது. காலத்துக்கு ஏற்றவாறு நீங்கள் வாழாது, உங்களுக்கு ஏற்றவாறு காலத்தை திட்டமிட்டும், கட்டுப்படுத்தியும் உருவாக்கிக் கொள்ளுங்கள். அதை நீங்கள் நிர்வகியுங்கள். துன்பங்கள் இன்றி வாழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05

# வேண்டாமே பொறாமை!

ஒவ்வொரு மனிதர்களும் ஜீரணிக்க முடியாத அளவு ஆசைகளை தன்னகத்தே சுமந்து கொண்டிருக்கிறார்கள். நாமும் அடுத்தவர்களைப் போல் மேம்பட வேண்டும். அதிக பணம் சம்பாதிக்க வேண்டும். எண்ணற்ற சொத்துக்களை வாங்க வேண்டும். அதிகமான அறிவையும் அனுபவத்தையும் பெற வேண்டும். நாமும் சமூகத்தில் முக்கியத்துவமுடையவராக வேண்டும் என்பதே எல்லோர் மனதிலுமுள்ள பொதுவான ஆசைகள். இத்தகைய ஆசைகளை மனிதர்கள் நிறைவேற்றிக் கொள்ள முயன்று அடையும் போராட்டத்திலே மனிதனின் பொறாமை அதிகரிக்கின்றது. அதன் விளைவாக மனிதன் மற்ற மனிதனைத் துன்புறுத்துகிறான்.

ஒவ்வொரு மனிதனும் தனது சிந்தனைகளை நோக்கினால்.. தன்னை இன்னொருவரோடு ஒப்பிடாமல் எந்த மனமும் சிந்திப்ப துண்டா? ஒவ்வொரு சிந்தனையின் பின்னணியிலும் பொறாமைத் தீ மறைந்திருக்கும். 'நான் தான் இப்படி இருக்கிறேன் அவன் எப்படி வாழ்கிறான்' என்ற சிந்தனையானது அவனது மனதை அதிருப்திக் குள்ளாக்கி அமைதியையிழக்கச் செய்து விடுகின்றது.

மனதிருப்தியடைதல் பற்றி பல மதங்களும் பேசினாலும், அதில் எந்தவிதமான திருப்தியும் மனிதனுக்கு ஏற்படவில்லை. பொறாமை காரணமாகவே மனிதன் கூறுகூறாகப் பிரிகின்றான்.



அதே வேகத்தில் சீர்கெட்டும் போகின்றான். ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் முயற்சித்தவையேயன்றி வேறில்லை என்று இறைவனே திடமாகக் கூறியுள்ளான். இக்கூற்றை யாராவது ஞாபகப்படுத்திப் பார்க்கிறார்களா? அதுதான் இல்லை நாம் விரும்புவதெல்லாம் கிடைத்து விட்டால் தான் நமக்குத் திருப்தி. ஆனால் இன்று மனிதன் இல்லாததையும் பொல்லாததையுமே தேட முயற்சி செய்கிறான். எமக்குக் கிடைக்கிறது தான் கிடைக்கும், கிடைக்காதது இறுதிவரையும் கிடைக்காது. நாம் நினைக்கிறது நமக்குக் கிடைக்கவில்லை யென்றால் கிடைத்ததாக நாம் நினைக்க வேண்டும். அதன் மூலமே திருப்தியடைய முயற்சிக்க வேண்டும்.

உண்மையான மன நிறைவு நாம் எப்படி இருக்கிறோம் என்பதை அறிந்து கொள்வதில் தான் தங்கியிருப்பதல்லாமல், திருப்தியில் அல்ல. ஒவ்வொருவரினதும் வாழ்க்கையமைப்புக்கள் அவரவரின் சிந்திக்கும் முறையில் தங்கியுள்ளது. நல்ல சிந்தனைகளே செயல்களாக மாறுகின்றன. சிந்தனைகள் சீர்கெட்டால் அங்கே பொறாமையே எதிர் விளைவாக இருக்கும் இறைபக்தி உள்ளவர்களிடம் பொறமைக்குணம் இருக்காது. பொறாமையுள்ள மனிதர்களிடம் இறைபக்தி இருக்காது. செல்வங்களும், உறவுகளும், பதவிகளும் நிலைத்திருக்க வேண்டும் என்று மனிதன் ஆசைப்படுகிறான். மனித மனமானது நிலையற்றவைகளையே பெரிதும் விரும்புவதனால் ஒருவரின் கஷ்டத்தில் இன்னொருவன் இன்பம் காண்கின்றான்.

நான் பேராசைக்காரனா என்று ஒவ்வொருவரும் கண்டறிய வேண்டும். பேராசை பிடித்தவர்கள் யாவரும் பிச்சைக்காரர்களே... உங்களுக்கு வெளியே இருக்கும் வஸ்துக்களை நீங்கள் கண்டு கொள்வது போன்று உங்களுக்குள் இருக்கும் குணாதிசயங்கள். பற்றியும் அறிய முடியும். மனதிலிருக்கும் எண்ணங்கள், உந்துதல்கள், தவறான அபிப்பிராயங்கள், பொறாமைகள் இவைகளை அறிந்தால் தான் உங்கள் நிலை பற்றிய உண்மையை நீங்கள் அறிந்து கொள்ளலாம் நீங்கள் சுகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் போது உங்கள் உடல் பற்றிக் கவலைப்பட மாட்டீர்கள். ஆனால் நோய் ஏதும் ஏற்பட்டால் அது பற்றி ஆராய முற்படுவீர்கள். அதே போன்றது தான் வாழ்க்கையும். இருக்கிற போது அடுத்தவரை மறந்துவிடுகிறீர்கள் இல்லாத போது அடுத்தவரில் பொறாமைப் படுகின்றீர்கள்.

எனக்கு நான் விரும்பும் தொழில் வேண்டும். இல்லாவிட்டால் தொழிலே வேண்டாம். எனக்கு நான் விரும்பும் காதலி வேண்டும் இல்லாவிட்டால் எனக்குக் கல்யாணமே வேண்டாம். இவைகள் தான் வெறும் வக்கிரமனம் ஆகும். இத்தகைய வக்கிரமனம் படைத்தவர்களே பொறாமையின் விளைவாகப் பல கிளர்ச்சிகளை ஏற்படுத்தி விடுகிறார்கள்.

சும்மா இருப்பவனுக்கு அடுத்தவன் தொழில் செய்யும் போது பொறாமை ஏற்படுகின்றது. தன்னைப் பற்றி தான் உணர்ந்து முயற்சி செய்யாத விடத்திலே மனிதன் இத்தகைய நிலைக்கு தள்ளப்படு கின்றான். கல்வியில் ஆர்வம் குறைந்தவனுக்கு கற்பவனைக் கண்டால் பொறாமை ஏற்படுகின்றது. தனக்குள் தான் முயற்சித்தால் தானும் தரமான பெறுபேறுகளை எடுக்க முடியும் என்பதைச் சிந்திக்க தவறுகிறான்.

மனதின் தந்திரம் பொறாமையாக இருக்கக் கூடாது அது முயற்சியாக இருக்க வேண்டும். துன்பத்திலிருந்து விடுபட மனிதன் முயற்சிக்க வேண்டும். அதுதான் மகிழ்ச்சிக்கு வழி.

தெய்வத்தாலாகா தெனினும் - முயற்சி
மெய்வருந்தக் கூலி தரும்.

என்ற வாக்கை மனதில் நிறுத்தி பொறாமைத் தீயை அணைத்தால் மனிதன் ஒற்றுமையாக வாழலாம். மேலும் மேலும் வெற்றியடையலாம்.



## 06 அவசரயுகம்

இன்று உலகம் எவ்வளவு தான் இயந்திரமானாலும் அதே வேகத்தில் இயந்திரம் போல மனிதனால் இயங்க முடியாது. இன்றைய அவசரயுக வாழ்க்கையில் பெண்களின் வேலைகளை இலகுவாக்கு வதற்காக வேண்டிப் பல இயந்திர சாதனங்கள் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கின்றன. கேஸ் மிக்ஸி, அவன், உடுப்புத் துவைக்கும் இயந்திரம், பிரசர் குக்கர்,ரைஸ்குக்கர் இன்னும் பல இயந்திரங்களை நடைமுறை வாழ்வில் அன்றாடம் பெண்கள் அவசர அவசரமாகப் பாவிப்பதால் பல ஆபத்துக்களையே எதிர்நோக்கி வருகி றார்கள்.

இன்று பெரியாஸ்பத்திரியில் 80% வீதமான பெண்கள் எரிகாயங்களுக்கும், மின்தாக்குதலுக்கும் ஆளாகி அவதிப்படுகி றார்கள் என்று புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

இது மட்டுமல்லாது அவசர அவசரமாகப் பெருகிவரும் சனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக வேண்டி, பல கருத்தடை மாத்திரைகள் பல பெண்கள் மத்தியில் நேரடியாகவும், மறைமுகமாகவும் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. அதனால் ஏற்படும் கருச்சிதைவுகள் சிலவேளை அப்பெண்களை அகால மரணத்திற்கே இட்டுச்செல்கின்றன. இது இவ்வாறிருக்க, முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறிப் பாவிக்கப்படும் மாத்திரைகளால் இன்று பெரும்பாலான கர்ப்பிணிகள் நமதுநாட்டிலும் கூட அங்கவீனக் குழந்தைகளைப் பெற்றெடுத்து, தீராத மனச்சஞ்சலங்களுக்கும் ஆளாகி வருகிறார்கள்.

மேலும் பெண்கள் எதிர்நோக்கும் தீராத வேலைப்பளு, குடும்பச்சுமை காரணமாக மனநோயாளர்களாகவும், இருதய நோயாளர்களாகவும் பாதிக்கப்பட்டு மருத்துவ மனைகளில் அதிகமாகப் பெண்களே நிறைந்து இருக்கின்றனர்.

இது மட்டுமல்லாது, அவசரயுக வாழ்வில் அதிகரித்துவரும் சீதனக் கொடுமை காரணமாக வீடொன்றுக்கு தலா 3 பெண்கள் வீதம் திருமணமாகாமலே மனவிரக்தியோடு காத்திருக்கிறார்கள்.

இன்று தற்கொலை வீதத்தை எடுத்து நோக்கினாலும் எமது நாட்டில் தற்கொலை செய்து கொள்பவர்களும் அதிகம் பெண்களாகவே இருப்பது வேதனைக்குரிய விடயம்.

இன்று நமது நாட்டில் கூட பாலியல் வன்முறைகளால் சின்னஞ்சிறுமிகள் கூட கொல்லப்பட்டு வருவதும் கண்கூடு. இது மட்டுமல்லாது, போதை வஸ்துப் பாவனைகளும் இன்று பெண்கள் மத்தியில் புகுத்தப்பட்டு வருவது மிகவும் விபரீதமான விடயங்களாகும். இன்று சிறைச்சாலைக் கைதிகளை எடுத்து நோக்கினால் பெண்களும் சராசரியாகக் குற்றவாளிகளாக இருப்பதும் குறிப்பிட்டுக் கூற வேண்டிய விடயமாகும்.

பெண்களின் சுதந்திரம் அதிகரிக்க அதிகரிக்க சமுதாயச் சீர்கேடுகளும் அதிகரிப்பதென்றால் அது மிகையில்லை. குற்றங்களோடு சேர்த்து பெண்கொடுமைகளும் அதிகரித்து வருவது வேதனைக்குரிய விடயம். இறைவன் பெண்களை இவ்வளவு மென்மையாகப் படைத்து இத்தகைய அவசரயுக வாழ்க்கைக்கு முகம் கொடுத்து வாழ வேண்டும். என்பது அவளது விதியா? அல்லது சதியா?



# 07 வெற்றியின் இரகசியம்.

வாழ்க்கையில் வெற்றி என்பது மனநிறைவோடு கூடிய வாழ்க்கையைக் குறிக்கும். எல்லா மனிதர்களுக்கும் ஒரே தரத்தில் வாழ்க்கை இருப்பதில்லை. சிலர் வசதியானவர்களாக இருக்கிறார்கள், சிலர் நடுத்தரவர்க்கத்தினராக இருக்கிறார்கள். இன்னும் சிலர் ஏழையாகவே இருக்கிறார்கள்.

சிலர் வாழ்க்கையில் சகல துறைகளிலும் முன்னேறி பேரோடும், புகழோடும் இருக்கிறார்கள். சிலர் வாழ்க்கையில் மாறிமாறி தோல்விகளையும், துன்பங்களையும் எதிர்நோக்கிக்கொண்டு இருக்கிறார்கள். இப்படியாகப் பலரது வாழ்க்கையும் பல கோணங்களில் இருப்பதைக் காணலாம்.

இவ்வாறு ஒவ்வொருவரும் தத்தமது வாழ்க்கையின் இன்னல்களைப் பார்த்துக் கொண்டும் அடுத்தவர்களின் உயர்வான வாழ்வைப் பார்த்துக் கொண்டும் அங்கலாய்ப்பார்கள். எனக்குத்தான் அதிர்ஷ்டமில்லை. நான் பிறந்த நேரம் சரியில்லை, எனது கிரகம் சரியில்லை. இன்னும் சிலர் நான் வாழும் சூழல் அப்படி அதுதான் இப்படி எனக்கு துன்பம் வந்தவண்ணம் இருக்கின்றது என்று அங்கலாய்ப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஒருவரின் வாழ்க்கையில் வெற்றியை தீர்மானிப்பது அவனின் பிறப்போ அதிர்ஷ்டமோ, சூழலோ அல்ல. சூழல் என்பது மனிதனின் ஆளுமையைத் தான் தீர்மானிக்கும். அதாவது நல்ல சுமுகமான சூழலில் வாழ்ந்தவன் நடத்தை, அன்பான அணுகுமுறை இவைகளில் சிறந்தவர்களாக இருப்பர். கௌரவமான ஆளுமையுள்ளவர்களாக இருப்பர்.

அடுத்தது அதிர்ஷ்டம், பிறப்பு இவைகள் கூட ஒரு மனிதனின் வெற்றிக்குக் காரணமாக அமையாது. அப்படியெனில் வெற்றியின் இரகசியம் மனிதன் சிந்திக்கும் விதம் அன்றிவேறில்லை. வெற்றிக்காக சிந்திப்பதென்பது தன்னைப்பற்றித் தான் சிந்திக்க வேண்டும். தான் இருக்கும் நிலை பற்றி சிந்திக்க வேண்டும். தனது வாழ்வுபற்றிச் சிந்திக்க வேண்டும். இவ்வாறு சிந்தித்து தனது வாழ்வை தனக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ளும் வல்லமை மனிதனுக்கு உண்டு.

பலரது தோல்விகளுக்கும், இழப்புகளுக்கும், பின்தங்கிய வாழ்வுக்கும் காரணமும் மனிதன் சிந்திக்கத் தவறியது தான். அதனால் தான் வாழ்க்கையில் கீழ்மட்டத்தில் இருக்கிறார்கள். தனது மூளையை சரிவரப்பயன்படுத்தினால் வாழ்க்கையில் தோல்விகள் குறைந்து விடும். ஆனால் முறையாக ஒருமுகப்பட்ட சிந்தனைகளில் ஈடுபடுவது நம்மில் எத்தனை பேர்? சில சிந்தனைகளால் உங்களை நீங்கள் முட்டாளாக்கிக் கொண்டு, தன்னை தானே ஏமாற்றிக் கொண்டு வேறு பலரின் ஆலோசனைகளைக் கேட்டு தன்வாழ்வில் தோல்வியுற்றவர்களும் இருக்கிறார்கள். சிந்திப்பது தான் உலகிலுள்ள மிகப்பெரிய காரியமாகும். இதில் மிகச்சிலரே சிந்தித்து செயற்பட்டு வாழ்வில் உயர்ந்த இடத்தில் இருக்கிறார்கள். உண்டு, களித்து, உறங்கி, மகிழ்ந்து வாழ்பவர்களுடைய வாழ்க்கையில் இரகசியம் அவர்கள் சிந்தித்து செயற்பட்டே சாதனைகள் புரிந்துள்ளார்கள். சிந்தனைகளே வெற்றிக்குக் காரணமாகும். சிந்திக்கத் தவறுபவர்களே சின்னச்சின்ன வட்டங்களில் சிக்கித்தவிக்கிறார்கள்.



# 08 யோசனைகளை கூர்மையாக்கும் விமர்சனங்கள்...!

உங்கள் மனதுக்கு நல்லவைகளாகத் தோன்றுபவைகள் எவையோ அவைகளை நீங்கள் விருப்பமாகச் செய்கிறீர்கள். உங்கள் எண்ணப்படி உங்கள் செயல்கள் அமையும். இதுதான் மறை கூறும் உண்மை.

நாம் செய்வன திருந்தச் செய்தாலும், திருத்தமின்றிச் செய்தாலும் அவைகளுக்கு முன்னிலையிலோ, மறைமுகமாகவோ விமர்சனங்கள் வருவதைத் தவிர்க்க முடியாது. காரணம் மனிதர்களின் எண்ணங்கள் ஒரே மாதிரியல்ல. ஆதலால் விமர்சனங்களும் வெவ்வேறு மாதிரியாயமைவது புதுமையல்ல.

எல்லோருடைய விமர்சனங்களையும் தாராள மனதுடன் வரவேற்றிடுங்கள். விமர்சனங்களுக்கு நீங்களே அழைப்பும் விடுங்கள். நான் செய்வது சரியா? தவறா? என்று கேட்டுப் பார்ப்பது கூட உங்களுடைய நல்ல மனதின் வெளிப்பாடாகும். அதிலிருந்து நல்ல யோசனைகளை அலசி ஆராய்ந்து நல்லவைகளை எடுத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் விமர்சிப்பவர்கள் உங்களை விடவும் சில வேளை அறிவு கூர்மையானவர்களாக இருக்கலாம். அதில் நாணயமான உதவிகரமான விமர்சனங்களுக்கு நன்றி கூறத் தயங்க வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் செய்பவை விமர்சனத்திற்கு ஆளானால்.... உங்கள் மீது மற்றவரின் கவனம் இருப்பது என்பது பொருள். உங்கள் செயல்களை யாருமே கவனிக்காமல் இருப்பதை விட கவனிப்பதே வெற்றிக்கு வழி.

சிலர் இருக்கிறார்கள். தொட்டால் சுருங்கி போன்ற மனப்பான்மையுடன் இவர்களே விமர்சனத்தை வெறுத்து, விமர்சிப்பவர்களையும் ஒதுக்கி விடுகிறார்கள். இது வெற்றிப் பாதையிலிருந்து தான் ஒதுங்கி விடுவதே அர்த்தம் என்று ஆகின்றது. சிலரின் விமர்சனங்கள் பொறாமை காரணமாக இருக்கலாம். இதனால் மனிதனை - மனிதனை சகிக்க முடியாத முறையில் விமர்சிக்கலாம்.

ஒருவரின் குறையைக் கூறிப் பலர் கூடிச் சிரிக்கலாம். கேலி செய்தும் கிண்டல் செய்தும் நச்சரிக்கலாம். அதற்காக வேண்டி உங்கள் கொள்கைகளையோ, எண்ணங்களையோ, முயற்சிகளையோ துண்டாக்கி விட முற்படாதீர்கள்.

ஒருவரைக் கேலி செய்து பார்ப்பது இழிவுபடுத்திப் பார்ப்பது, குறை கூறிப்பார்ப்பது கூட ஒரு பரிசோதனையேயன்றி வேறில்லை. உங்கள் உடலினுள் 60 இலட்சம் உயிரணுக்கள் வாழ்வது எதற்காக? இவைகளுக்குத் தாக்குப்பிடிக்கத்தான் என்றால் அது மிகையில்லை.

பொறாமை என்பது தாராள மனப்பான்மையின் வெளிப்பாடல்ல. இயலாதோரின் உள்ளக் குமுறலாகும். அதை அவர்களுக்காகச் சகித்துக் கொள்ளுங்கள்.பாவம் அவர்களால் எதையும் சாதிக்க முடியாது. ஓயாமல் அடுத்தவரின் செயலிலாவது ஓட்டை பார்ப்பது அவர்களின் பொழுது போக்காக அமையட்டும். யாராவது உங்கள் மீது பொறாமை கொண்டால் உங்கள் முன்னிலையில் ஒரு மாதிரியாகச் சிரிப்பார்கள். அதுவே உங்கள் உயர் தன்மைக்கு வெகுமானமாகவும், புகழ்மாலையாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்.



எங்கு பொறாமை காரணமாக விமர்சனங்கள், அதிலும் தகாத விமர்சனங்கள் எழுகின்றதோ அந்த இடம் மனசாட்சிப்படி மிகவும் தாழ்வான இடம் என்று ரோமானிய முனிவர் ஒருவர் தனது இதழில் எழுதியுள்ளார். இது மட்டுமல்ல, சிட்னி ஸ்மித் என்கின்ற மாமேதை என்ன கூறுகிறார் தெரியுமா? பொறாமை, அவதூறு, கேலி, கிண்டல், புறம் இவற்றுக்கு அஞ்சி வாழும் மனிதர்களுக்கு விவகார அறிவு ஒரு நாளும் வேலை செய்யாது என்கின்றார். எனவே, செம்மைப்படுத்தும் நோக்கில் உங்கள் யோசனையை உங்களை விடவும் கெட்டித்தனமான நபர்களிடம் கூறுங்கள்.

விமர்சனங்களை வரவேற்கப் பழகிக் கொள்ளுங்கள். ஏனையோருக்கு செயலால் காட்டி அசத்திடுங்கள். உங்களுடைய அடக்கம் திறமைகளைப் பார்த்து பலரும் தானாக அடங்கிடுவார்கள்.

இழிவுப்படுத்தியவனாலேயே இழிவுப்படுத்தப்பட்டவனுக்கு புகழ்மாலை சூட்ட நேரிடும் என்பது சான்றோரின் கருத்து. விமர்சனங்கள் தான் உங்கள் வெற்றியின் இலக்கணம். செத்துப் போன நாயை யாரும் உதைக்க மாட்டார்கள். காய்க்காத மரத்துக்கு யாரும் கல்லடிக்க மாட்டார்கள். அதே போன்றுதான் விமர்சனங்கள். திறமைசாலி விமர்சிக்கப்படுவான். திறமையற்றவனை யாரும் கண்டு கொள்ளவே மாட்டார்கள்.

நடைமுறை எனும் சல்லடை வழியாக விமர்சனக்கற்கள் விழுந்துவிடும். இறுதியாக மிகுதியாகும் தங்கக்கற்களை புகழ்மாலையாக்கி அணிவிக்கப்படுவீர்கள்.

இதனால் பெறப்படும் பாடம் தான் பலருக்குத் தெளிவாகவும், பகிரங்கமாகவும் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09 முயற்சியே முதல்படி

முயற்சி என்பது ஒன்றையடைவதற்கான போராட்டமாகும். அதுவே அறிவு, ஆற்றல் அனுபவம், திறமை ஆகியவற்றைக் கொண்டிருக்கும் வழிமுறையுமாகும்.

முயற்சிகளில் தவறான முயற்சி, சரியான முயற்சி என இரு வகைகள் உண்டு. அதில் சரியான முயற்சி மாத்திரமே புகழையும், உயர்வையும் தேடித் தரும் சக்தி வாய்ந்தது.

ஒன்றையடைவதற்காக மனிதன் பல பாதைகளில் பயணிக்கிறான். இறுதியில் களைத்தும் போகிறான். பாதைகள் மாறினாலும் மனிதனின் பயணம் இலக்கை நோக்கியதாக இருந்தால் தான் அவனது முயற்சிகள் திருவினையாகும்.

இன்று மனிதன் பணம் பதவிக்காகப் போராடுகிறான். சிலர் வாழ்க்கைக்காகப் போராடுகிறார்கள். சிலர் பரீட்சைக்காக அயராது போராடுகிறார்கள். இவைகள் யாவுமே இலக்கை நோக்கிய முயற்சிகளாகும். இந்த முயற்சியில் ஏற்படும் தோல்விகள் கூட உயர்வையும், புகழையும், அனுபவத்தையும் தேடித்தர வல்லதென்றால் அது மிகையில்லை. மனிதனது முயற்சிகள் யாவும் முடிவற்றவை. ஒன்றையடைந்தவன் இன்னொன்றையடைய முயற்சிக்கின்றான். அதுவே தனி மனிதனதும் நாட்டினதும் வளர்ச்சியாகும்.



மனிதனது முயற்சிக்கு அறிவென்ற மூலதனம் அவசியமாகின்றது. அதை அறிவு ரீதியாகவோ, அனுபவ ரீதியாகவோ மனிதன் கற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும். ஒரு சிலரின் முயற்சிக்கும், வளர்ச்சிக்கும் தனிமனிதனோ சமூகமோ தடையாக இருக்கலாம் எத்தடையாயினும் முயற்சியுடையவனுக்கு மலையும் ஒரு தூசாகும். ஒவ்வொரு மனிதனிடமும் சுய நலமானதும், பொதுநலமானதுமான முயற்சிகள் உண்டு. முயற்சிகள் எப்படியாக இருந்தாலும் அது நல்லதாக இருப்பின் நன்மைகளே விளையும்.

சிலரது தவறான முயற்சிகள் சமூகத்தில் அதிக புரட்சியை ஏற்படுத்துவதோடு மட்டுமன்றி, தன்னைத்தானே இழிவுபடுத்திக் கொள்ளவும் காரணமாக அமைகின்றது.

உண்மையிலேயே இன்று மனித வாழ்க்கையின் யதார்த்தம் இப்படித்தான் அமைகின்றது. ஒருவர் முயற்சி செய்து வளர்ந்து வருகையில் பல பக்கமிருந்தும் தடைவரும் போது அவன் கீழே விழுகின்றான். அதனைப் பார்த்து மகிழ ஒரு கூட்டமே காத்திருக்கின்றது. முயற்சியின் போது எந்தவொரு மனிதனுக்கும் எதிர்ப்பு, முரண்பாடு இவைகள் வருவது தவிர்க்க முடியாதது தான். ஆனால், எத்தகைய எதிர்ப்பிலும் நல்ல முயற்சியாளன் தோல்வி காண்பது அரிது.

நமது முயற்சியின் விளைவுகள் சிலபோது புகழ்ச்சியாகவும், சிலவேளை இகழ்ச்சியாகவும் அமையலாம். இலக்கு தவறான முயற்சிகள் யாவும் சமூகத்தில் ஈர்ப்பு அற்றதாகவே அமையும். இலக்குக்கு ஏற்றவாறு மனிதன் முயற்சிக்க வேண்டும்.

மனிதன் தனது இலட்சியத்தையடைய முயற்சிப்பது பாரியதொரு செயலாக இருக்கலாம். ஆனால், இலட்சியத்தை அடைந்துவிட்டால் அதன் வெகுமதியை பணத்தால் கூட அளவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் ஆற்றல் என்பது முயற்சியை அடையப் பிரயோகிக்கும் வலிமையாகும். இந்த வலிமையை இறைவன் ஒவ்வொரு மனிதனுக்கும் வழங்கியிருக்கின்றான். அதை அவர்கள் பிரயோகிக்காமல் இருப்பது தான் புதுமை. உலகில் பிறந்திருக்கும் ஒவ்வொரு மனிதனும் பூரணத்துவம் அடைய முயற்சிகளுடன் ஜீவிப்பதைக் காண முடிகின்றது. இதற்கான காரணம் என்னவென்றால், அவர்கள் தனது ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்தாமல் தீய முயற்சிகளுக்கு துஷ்பிரயோகம் செய்வதேயாகும்.

கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற பாரிய குற்றங்களைச் செய்வதற்காக முயற்சித்த மனிதர்கள் வாழ்க்கையில் இகழ்ச்சியடைந்தவர்களாகத் தள்ளப்படுகின்றார்கள். மேலும், சிலரின் நல்ல முயற்சிகளைத் தடுக்க மனிதர்களை தன்வினை தன்னையே சுட்டதாக கூறிக்கொள்கிறார்கள். சிலரின் தவறான முயற்சிகளால் வந்த கிளர்ச்சி சமூகத்தையே நெறிபிறழ வைத்தது. நல்ல முயற்சிகளால் மனிதனது உள்ளம் தூய்மையடைகின்றது. ஆளுமை வளர்கிறது. தான் முயற்சி செய்து தானும் வளர்ந்து, தன்னால் ஏனையோரையும் வளர்த்து விடுவது எத்தகைய புகழ்ச்சி என்றால் ஒவ்வொருவரினதும் மதிப்பும், மரியாதையும் அதனால் வளர்கின்றது.

ஒன்றையடைவதற்காக நாம் பல நல்ல மனிதர்களோடு தொடர்பு கொள்கின்றோம். அதனதால் புனிதமான நட்புகள் உருவாகின்றன.

அது போன்று தீய முயற்சிகளால் உருவான தீய நட்புக்கள் என்றும் இழிவையே தேடித்தரும். எனவே, முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். நல்ல முயற்சியே புகழ்ச்சியைத் தேடித்தரவல்லது.



## 10 வெற்றி ஒரு பாடத்திட்டம்

வெற்றியென்பது ஒரு பாடத்திட்டம். இதை அனுபவ ரீதியாகவோ, அறிவு ரீதியாகவோ முறையாகக் கற்றுக் கொண்ட மனிதனே வாழ்க்கையில் வெற்றிபெற்றுள்ளான். வெற்றிக்கென்று தனித்தன்மை வாய்ந்த இரண்டு விதிமுறைகள் உள்ளன. இது மிகவும் சுலபமான வழிதான். ஒன்று - அது என்ன வழி? அதாவது உங்கள் பாதையை நீங்கள் தான் தெரிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் பல தொழில்களைத் தெரிந்திருக்கலாம். ஆனால் குறிப்பிட்ட ஒரு தொழிலைச் செய்வதுதான் வெற்றிக்கு தெரிவு செய்ய வேண்டிய முதல் பாதை. பின்பு அதை புத்திசாதுரியத்துடன் தொடர்ந்து செல்லுதல். இரண்டாவது - நீங்கள் சென்று கொண்டிருக்கும் பாதையில் பல தடைகள் வரலாம். எத்தனை தடைகளைத் தாண்டவும் மனதில் உறுதியும் தியாக மனப்பான்மையும் இருப்பது அவசியமாகும். இதுதான் ஆரம்பப்படிகள்.

இதைத்தொடர்ந்து நீங்கள் வெற்றிக்காகச் செய்ய வேண்டியது நாளைய வேலையை சிறப்பாக்குவது பற்றி ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம் சிந்திக்கவேண்டும். நல்ல சிந்தனைகள்தான் மனிதனை வெற்றியின் பக்கம் கொண்டு செல்லும் சக்திகளாகும். இந்த சிந்தனையில் வரும் ஒவ்வாமைத்தாக்குதல்களான அன்பு, பாசம், நட்பு உணர்வுகள் இவை நாம் சிலபோது தியாகம் செய்ய வேண்டும். அப்படி செய்பவன்தான் வெற்றியாளன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் கற்கும் அறிவுதான் வெற்றியின் சக்தி என்று எண்ணி விடாதீர். அறிவே சக்தியாக ஆகிவிடாது. எந்தவொருவேலைக்கும் அதைப்பயன்படுத்தும் விதம்தான் சக்தி ஆகின்றது. உங்கள் அறிவை வெற்றிக்காகப் பயன்படுத்தும் முறைகள் எப்படியென்றால் வெற்றியை சக்தி என்கிற ஒவ்வொருபடியாலும் ஏறவேண்டும். ஓரேயடியாகப் பல படிகளைத் தாண்டி வெற்றி பெற்றவனின் செல்வங்கள் நிலையா னதல்ல. கஷ்டப்படாமல் பெற்ற எந்த செல்வமும் நிலைப்பதில்லை என்பது நியதி. எனவே அனுபவங்களே நிலையான வெற்றிக்கு வழி வகுக்கும் என்றால் அது மிகையில்லை.

தனது அனுபவங்களைப் பயன்படுத்துவது எங்ஙனம் என்றால் நாம் பிறருக்காக அதைப்பயன்படுத்த வேண்டும். மற்றவர்களுடைய விருப்பத்தையறிந்து செயற்பட வேண்டும். ஒரு தொழிலாளி முதலாளியின் தேவை உணர்ந்து தொழிற்பட வேண்டும்.

அதேபோல ஒரு முதலாளி சமூகத்தின் தேவையை உணர்ந்து செயற்பட வேண்டும். அப்படிச் செய்யும் மனிதனே வெற்றியாளன். சமூகத்தின் தேவைகளை அறிவது எப்படி? மற்றவரின் விருப்பத்தை நாம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் மற்றவருடைய விருப்பத்தை உணர்ந்து எவ்வளவு கொடுக்கிறோமோ அவ்வளவும் நமக்குக் கிடைப்பதாகும்.

நமக்குத் தேவையானதை மற்றவர்கள் செய்யட்டுமே என எதிர்பார்ப்பவன் தோல்வியாளனே. இத்தகையவனின் வாழ்க்கையில் எதிர்ப்புக்கள் விளையும்போது ஏமாற்றமே நிகழும்.

நமக்கு யார் முக்கியமோ அவர்களுக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். எப்படி அறிவது.. என் வெற்றிக்கு இன்னும் நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டாலே போதும் - அது வெற்றியின் ஆரம்பப்படிதான். அப்போதுதான் நீங்கள் நடக்க வேண்டிய விதம்பற்றி ஆவலுடன் கூறுவார்கள். இது மட்டுமல்லாது உங்கள் மீது மதிப்பும்



மரியாதையும் வளரும். உங்கள் செயல்களில் பிழையின்றி பொய்யின்றி நிறைவேற்றினால் நீங்களே வெற்றியாளன்.

நீங்கள் செய்யும் நிகழ் கால விடயங்களே எதிர்காலத்தின் பக்கவிளைவுகளாகும். கோடி கோடியாக உழைப்பவர்கள் கையாளும் விதமும் இதுவாகும். மக்கள் விருப்பத்தைப் புறக்கணித்து விட்டு கர்வமாக இருக்கும் மனிதர்களின் பதவிகள் நிலைக்காது. மனித வாழ்க்கையின் அபிவிருத்தி என்பது எதேச்சையாக நிகழவேண்டும். அதிர்ஷ்டவசமாக நிகழக்கூடாது.

ஒரே குறிக்கோளை சவாலாக நினைத்து வலுக்கட்டாயமாக முயற்சி செய்வதே வெற்றியின் இரகசியம்.

மனித உடலினுள் பல சக்திகள் மறைந்திருப்பது எடுத்த விடயத்தில் தோல்வி காண்பதற்கல்ல. தோல்வி கண்டவர்களெல்லாம் தன் சக்தியை முறையாகக் கையாண்டவர்களல்ல.

எனவே வாழ்க்கையில் நிரந்தர வெற்றி அதை நீங்கள் பிரயோக்கின்ற விதத்தில் தான் தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

# நீங்களும் தலைவராகலாம்.

ஆயிரம் உதவியாளர்களைத் தேடிக்கொள்ளலாம். ஆனால் ஒரு நல்ல தலைவரைத் தேடுவது தான் கடினம். எந்தவொரு நிறுவனமானாலும் சரி அதற்கு மிகவும் அத்தியவசியமானவர் தலைவர் என்பவரே. தலைவர் என்பவர் பட்டத்துக்கும், பதவிக்கும் அதிகாரத்திற்கும் ஆசைப்பட்டவராக இருக்கக் கூடாது. வெற்றிக்கான நிருபிக்கப்பட்ட வழிகளைக் கையாண்டு வெற்றிகரமான முயற்சியில் ஈடுபடுபவர்களே உண்மையான தலைவர்களாகக் கருதப்படுவர்.

புத்திசாலித்தனத்துடன் முகஸ்துதியற்ற ஒரு தலைவரைத் தெரிவு செய்தால் அவர் ஆயிரக்கணக்கான சக தோழர்களைக் கவர்ந்து விடுவார். வெற்றிப்பாதையிலே அனைவரையும் அழைத்துச் செல்வார். எந்தவொரு முயற்சியினதும் வெற்றியும், தோல்வியும் அதன் தலைவரைப் பொறுத்ததே. வர்த்தக உலகம் என்பது முரண் பாடுகளைக் கொண்ட உலகமாகும். அங்குதான்; இலாபம், நட்டம் உயர்வு, தாழ்வு ஆகியவை ஏற்படும். இவைகளை செவ்வனே முயற்சிசெய்ய முரண்பாடுகளற்ற தலைவர் ஒருவர் இருப்பது அவசியமாகும்.

ஒரு நல்ல தலைவரைத்தெரிவு செய்யும் முறையானது விசுவாசம், ஒத்துழைப்பு, ஒழுங்குமுறை இவற்றில் தான் தங்கியுள்ளது.



ஒத்துழைப்பு, விசுவாசம் இவை இரண்டையும் நாம் தான் தகுதியாக்கிக் கொள்ள வேண்டும். மற்றவர்களுடைய கனவுகளை நனவாக்கும் பணியில் ஒரு தலைவன் தன்னை ஒப்படைத்துக் கொள்ள வேண்டும். கனவுகளிலிருந்து தலைவனே தொடங்க வேண்டும். தலைவனுக்காக மற்றவர் உழைக்காமல் அனைவரையும் தோழர்களாக இயங்க வைப்பது தலைவனின் கடமை.

உண்மையான தலைவன் புகழ்ச்சியை நாடமாட்டான். இகழ்ச்சி களை எதிர்க்க மாட்டான். பிறரையே வெளிப்படையாகப் புகழ்வான். மிகவும் உற்சாகத்துடனும், உத்வேகத்துடனும் ஒரு தலைவன் இயங்கினால் தான் தொண்டர்களும் அவ்வழியே தலைவனின் சவால்களை நிறைவேற்ற முழுமனதுடன் இயங்குவர். தாராள மனப்பான்மையானது தலைவனிடம் இருக்க வேண்டிய அழிக்க முடியாத அடையாளமாகும். இத்தகைய பண்புடையவனே தனது அழுத்தமான பெயரைச் சம்பாதிப்பவன். விமர்சனத்தைப் போலவே நல்ல திருத்தமான கொள்கைகள் ஒருவரை உச்ச இடத்திலே கொண்டு போய் அமர்த்திவிடும்.

உங்களை நீங்களே தலைவனாக்கிக் கொள்ள முடியாது. உங்களின் தரம் அறிந்து ஸ்தாபனம் தான் உங்களை உயர்ந்த இடத்தில் அமர்த்த வேண்டும். அதற்காக நீங்கள் இயங்க வேண்டும். உங்கள் ஸ்தாபனம் இருக்கும் இடத்தை விடவும் உயர்ந்த முறையில் நீங்கள் உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சிறந்த யோசனைகளை முன்வைக்க வேண்டியது தலைவனின் கடமையல்ல. யோசனைகளை கூறுமாறு தொழிலாளர்களை ஊக்குவிப்பது தான் தலைவருடைய வேலை. அவ்வாறு அவர்கள் கூறிய யோசனைகளை சீர்தூக்கிப் பார்த்து சிறந்தவற்றைத் தேர்ந் தெடுத்து அவற்றைச் செயல்படுத்துவதே தலைவனின் பொறுப்பு.

சில தலைவர்களால் நீண்ட காலம் தாக்குப்பிடிக்க முடியாமல் போகின்றது. இதற்குக் காரணம் உத்தரவு போடுவது, தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவன் என்று கூறி ஏனையோரை அடிமைப்படுத்துவது தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்படுவது. இதனாலேயே வேலை நிறுத்தம் போன்றன ஏற்படுகின்றன.

ஆக, தலைமை என்பது தன்னுடைய சுய நலத்திலோ, பெருமையிலோ தங்கியிராமல், தலைமை தாங்கியாக அமைந்தால் தான் அவரே உண்மையான தலைமைப் பதவிக்குத் தகுதிவாய்ந் தவராகக் கருதப்படுவார். அடிக்கடி நீங்கள் வேலை மாறுபவராக இருந்தாலும் உண்மையான விசுவாசியாகவும், ஒத்துழைப்பா ளராகவும் அடிக்கடி விடுமுறைகள் வாங்காதவராகவும் செயற்பட்டால் நீங்கள் தலைவராகலாம்.

நீங்கள் வேலை செய்யும் இடத்தில் நீங்கள்தான் தவிர்க்க முடியாதவராக இருக்க வேண்டும்.

இன்று எந்த நிறுவனத்திலும் கம்பியூட்டரே முதன்மை பெறுகின்றது. ஆனால் ஒரு தலைவன் செய்கின்ற வேலையைக் கம்பியூட்டரால் செய்ய முடியாது. கம்பியூட்டரை ஒருவர் இயக்கினால் தான் அது இயங்கும். ஆனால் தலைவனால் சிந்திக்க முடியும். பேசவும் முடியும், செயற்படவும் முடியும். கம்பியூட்டரை நிர்வகிப்பது மனிதன்தான். மனிதனை கம்பியூட்டரால் நிர்வகிக்க முடியாது.

எப்போதுமே உச்சியில்தான் காலி இடம் இருக்கும். ஆயிரம் உதவியாளர்களைத் தேடிக் கொள்ளலாம்.

ஆனால் ஒரு உண்மை யான தலைவனை பவ வருடங்கள் அவதானித்த பின்பு தான் தெரிவு செய்ய முடியும் என்பது திண்ணம்.



12

# ஊனமுற்ற சிறுவர்கள்

இறைவன் எந்தவொரு ஆத்மாவையும் நோக்கமின்றிப் படைக்கவில்லை. தீமையான நாட்டத்துக்குள்ளும் ஏதோ ஒரு நன்மையிருக்கலாம் என மனிதன் மனதைத் திருப்திப்படுத்திக் கொள்ளல் வேண்டும். ஊனமுற்ற குழந்தைகள் சில பெற்றோருக்குப் பிறப்பது அவர்கள் செய்த தவறின் வினையே அன்றி வேறில்லை. பெற்றோர் செய்த தவறின் தண்டனைகளைப் பிள்ளைகள் அனுபவிக்கிறார்கள், இதைக்கண்டு உள்ளம் வருந்தி திருந்த வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே இவ்வாறு ஊனமுற்ற சிறுவர்களை இறைவன் இவ்வுலகுக்கு அளித்துள்ளான்.

இவ்வாறு அங்கவீனமாகவும், மூளைவளர்ச்சி குன்றியதாகவும். பிறந்துள்ள குழந்தைகளுக்கு பெற்றோர்கள் தாம் வாழக்கூடிய நல்ல சூழலை அமைத்துக் கொடுக்க வேண்டும். ஊனமுற்ற குழந்தைகளை எக்காரணம் கொண்டும் ஏனைய பிள்ளைகளில் இருந்து புறக்கணிக்கக் கூடாது. அப்போது அப்பிள்ளைகளின் மனநிலை மிகவும் பாதிப்படைகின்றது, சில பெற்றோர்கள் தமக்குப் பிறந்த அங்கவீனமான குழந்தைகளை சுமை என்றும், சனியன் என்றும், சமூகத்தில் பெயரைக்கெடுக்கப் பிறந்தது என்றும் கூறி சதா அப்பிள்ளையை நச்சரித்துக்கொண்டே இருப்பார்கள். அந்தப் பிள்ளையை ஒதுக்கியே வைக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில குடும்பங்களில் அங்கவீனமுற்ற குழந்தைகளால் பாரிய அழுத்தங்கள் கூட ஏற்படுகின்றன. தங்களோடு கூடப்பிறந்த சகோதரர்கள் கூட ஊனமுற்ற தன் சகோதரர்களை ஒதுக்கி வைக்கிறார்கள். விளையாட்டில் கூட ஒன்று சேர்ப்பதில்லை. குழப்பிவிட்டு இவ்வாறான சிறுவர்களை வேடிக்கை பார்க்கிறார்கள். பாவம் இவர்கள். பரிதாபத்துக்குரிய துர்ப்பாக்கியசாலிகள். இவ்வாறு பிறக்க இவர்கள் ஒரு பாவமுமே செய்யவில்லை. இத்தகைய சிறுவர்களுக்கு பணிவிடை செய்வதிலும், சுமந்து பராமரிப்பதிலும் பாரிய நன்மைகள் உண்டு.

ஊனமுற்றவர்கள் தனது உடலில் ஊனம் இருந்தாலும் மனதால் நல்லவர்கள். இவர்களின் மனம் தூய்மையானது. மனதளவில் ஊனமுள்ள மனிதர்களை விடவும் இவர்களே மிக மிக மேலானவர்கள். இவர்களின் வாழ்வுக்காக இயன்றளவு நாம் எம்மை அர்ப்பணம் செய்தல் வேண்டும்.

எந்த சந்தர்ப்பத்திலும் குழந்தையை இழிவு படுத்தி மனம் நோகப் பேசக்கூடாது. அன்பான அழகிய வார்த்தைகளால் இவர்களை அணுகுங்கள். இவர்களை எக்காரணம் கொண்டும் அனாதைச் சிறுவர்கள் பராமரிப்பு இல்லங்களுக்குக் கொண்டு போய் விடாதீர்கள்.

இறைவன் யாவற்றையும் அறிந்தவன். அவனது படைப்புகளுக்கு நோவினை செய்பவர்களை அவன் சபிக்கிறான். இதைவிடவும் மேலான சோதனைகளைத் தந்து நம்மை சோதிப்பான். ஊனமுற்ற சிறுவர்களிடம் முகம் சலிக்காது. அவர்களுடன் அன்புடன் நடந்து கொள்வதில்தான் அந்தப் பிள்ளை மனஆறுதல் அடைகிறது. அவ்வாறு அப்பிள்ளைக்கு ஆறுதல் இல்லையெனில் இம்மையிலும், மறுமையிலும் இறைவன் பெற்றோரைப் பல வழிகளில் சோதிப்பான்.

ஊனமுற்ற குழந்தைகளை ஒதுக்கிவைக்காது மற்றவர்களுடன் கலந்துவிளையாட சந்தர்ப்பம் கொடுங்கள். தனக்கு நேர்ந்துள்ள துன்ப உணர்வை சமாளிக்க பல திறமைகளைக் கற்றுக் கொடுங்கள்.



நான் ஏன் பிறந்தேன் என்ற குற்ற உணர்வு ஒருதுளியளவும் அவர்களுக்கு ஏற்படாதிருக்க பெற்றோர் முழுமூச்சாக செயற்படல் வேண்டும்.

வெளிநாடுகளில் இத்தகைய சிறுவர்களைப் பெரிதாக மதித்து அவர்களின் சேம நலனுக்காக பல நிறுவனங்கள் உதவி செய்கின்றன.

இந்த நிலையை நமது நாட்டிலும் உருவாக்க வேண்டும். ஊனமுற்றோர் புறக்கணிக்காது வேலைவாய்ப்பு வழங்கப்படுதல் வேண்டும். இவ்வாறு சமூகமும் கூடிய ஆதரவுகளை ஊனமுற்ற சிறுவர்களுக்கு வழங்க வேண்டும். இதையே இறைவனும் விரும்புகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

# வாழ்க்கை வாழ்வதற்கே...!

வாழ்க்கை என்பது வாழ்வதற்கு. சேமிப்பதற்காகவல்ல. நேற்றைய பூவின் இன்றைய நிலை பரிதாபத்துக்குரியது. இன்றைய மொட்டின் நாளைய நிலை உத்தரவாதமற்றது. இன்றைய பூவின் இன்றை நிலை மிகவும் சுகமானது. மனித வாழ்க்கையும் இவ்வாறு தான். நேற்று நன்றாக சுகதேகியாக செல்வச் சிறப்போடு வாழ்ந்த மனிதன் இன்று பிணமாகக் கிடக்கிறான். நேற்று கூடிக்குலாவிய காதல் ஜோடி இன்று வெவ்வேறு துருவங்களாகிவிட்டார்கள். ஒரே கூரையின் கீழ் இருந்த சகோதரர்கள் இன்று வெவ்வேறு திசைகளில் எதிரிகளாகி விட்டார்கள். தான் பெற்ற சின்னஞ் சிறார்களை இலட்சியத்தோடு ஊட்டி வளர்த்த பெற்றோர்களின் நிலை, பிள்ளைகள் பெற்றோர்களுக்கே உதவாக்கரையாகி விட்டார்கள். எனவே இன்று உள்ளது தான் மனிதனுக்கு இன்பமான வாழ்க்கை. நாளை என்பது பதவிகளுக்கோ, சொத்துக்களுக்கோ, உறவுகளுக்கோ, நட்புக்கோ நிலையானதல்ல.

மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் இன்று உள்ளதை இன்றே அனுபவித்து விட வேண்டும். உணவைச் சேமித்து வைத்தால் அது பழுதடைந்து விடும். பணத்தைச் சேமித்து வைத்தால் அதன் பெறுமதி குறைந்து விடும். சேமித்த நட்பு கூட ஒருநாளில் விரோதமாகிவிடு கின்றது. எனவே இன்றைய வாழ்வு மட்டும் தான் நிஜமானது.



இன்றே உண்டு களித்து மகிழுங்கள்.

நாளை உங்கள் வாழ்வு நிலையானதல்ல.

சொத்துக்களும் உங்களுக்கு உத்தரவாதமில்லை. சூழவுள்ள உறவுகளையும் நீங்கள் நம்பி விடாதீர்கள்.

உங்கள் உழைப்பு உங்கள் வாழ்க்கை அது நீங்கள் இருக்கும் வரை உங்களுக்கே. அது நாளை இன்னொருவருக்குச் சொந்தமாகிவிடும். மற்றொரு நாள் வேறு ஒருவருக்கு சொந்தமாகி விடும்.

வாழ்க்கை வாழ்வதற்கே. நீங்கள் செய்யும் நன்மை தீமைகள் மட்டுமே உங்களோடு சேர்ந்து வரும்.

எனவே இவ்வுலகில் நல்லது செய்யுங்கள். வாழ்க்கை உங்களுக்கு இன்பமாக இருக்கும். மறுமை வாழ்வு சுகமாகவும், நிரந்தரமாகவும் கிடைக்குமென்பது உறுதி.

.....................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

# குடும்பப் பிரச்சினைகளின் தீர்வு இதுதான்.

பொதுவாகப் பெண்களின் பிரச்சினைகள் என்றால் எல்லாப் பெண்களினதும் பிரச்சினையைக் குறிக்கும்.

ஆனால் பிரச்சினைகள் என்று வரும் போது பெண்ணுக்குப் பெண் பிரச்சினைகள் வேறுபடுகின்றன. நாட்டுப்புறப் பெண்களுக்கு வேறு பிரச்சினைகள். நகர்ப்புறப் பெண்களுக்கு வேறு பிரச்சினைகள். என அவரவரின் வாழ்க்கைத் தரத்தினைப் பொறுத்து பிரச்சினைகள் வேறுபடுகின்றன.

இதை ஆண் தனது பார்வையில் ஆண்களுக்கு சார்பாகவும், பெண் என்பவள் தன்னுடைய அனுபவத்தால் பெண்களுக்குச் சார்பாகவும் நோக்கலாம்.

எது எவ்வாறாயினும் ஒரு பெண்ணின் பிரச்சினையைப் பெண்ணால் தான் தீர புரிந்துகொள்ள முடியும்.

பெண் என்பவள் தன்னைப் பலசாலி என எவ்வளவு கூறிக்கொண்டாலும், பெண் என்பவள் உள்ளத்தாலும். உடலாலும் பலவீனமானவள் என்பதைப் பெண்கள் ஒத்துக்கொள்ள வேண்டும்.



ஆதலால் குடும்பத் தலைவனுக்கோ அல்லது தகப்பனுக்கோ பெண்கள் கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும். குடும்பத் தலைவருடன், தலைவியும் குடும்பம் என்றான பிறகு குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துத் தான் ஆக வேண்டும். இது ஒருவர் இன்னொருவருக்குச் சுமத்தும் சுமையல்ல. தத்தமக்கு வந்த கடமைகள். ஒருவருக்கொருவர் தன் கடமையிலிருந்து மீறினால் அங்கே குடும்ப அமைதி என்பது பூச்சியமே. இன்று பெண்களை விடவும் ஆண்களே அதிகமான பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றார்கள். காரணம் நம் நாட்டில் வீழ்ச்சியடைந்துவரும் பொருளாதார நிலையாகும். ஆண் உழைப்பதால் வரும் வருமானம் இன்று அத்தியாவசியத் தேவைக்கே போதாமை என்பதால் பண நெருக்கடியால் பல குடும்பங்களில் ஏகப்பட்ட பிரச்சினைகள் உருவாகின்றன. இந்த இடத்தில் பெண் என்பவள் கட்டாயம் உழைத்துத் தான் ஆக வேண்டும்.

உழைப்பு என்று வெளிக்கிட்டால் பெண்களுக்கு ஏகப்பட்ட பிரச்சினைகள் தாமாக உருவாகும்.. இதைக் கருத்திற் கொண்டுதான் ஆண்கள் பெண்களை வேலைக்குச் செல்ல வேண்டாமென ஆதிக்கம் செலுத்துகிறார்களே தவிர இது ஓர் அடக்கு முறையல்ல என்பதைப் பெண்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பெண்ணுக்கு வாழ்வு என்று வந்தால் கட்டிய புருஷனுக்குக் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும். பெண்களுக்கு கட்டுக்கடங்காத சுதந்திரம் என்பது தம்மைத் தாமே அழித்துக் கொள்ளும் தற்கொலை போன்றது. தன் கர்ப்பத்தை தன் இஷ்டப்படி கலைத்துக்கொள்ளும் உரிமை கூட பெண்ணுக்கு எப்படி வர முடியும்? தன் கர்ப்பத்திலுள்ள குழந்தை தன்னுடையதாக இருந்தாலும் இது இந்த உலக வாரிசு. அதைத் தாயே அழித்தாலும் அதற்குப் பெயர் கொலைதான். கணவனின் அனுமதி கிடைத்தபோது கூட இத்தகைய கொலையைச் செய்ய பெண்களுக்கு உரிமையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களாலும் சிந்திக்க முடியும். முடிவெடுக்கவும் முடியும். ஆனால் நல்ல சிந்தனையாகவும். நல்ல முடிவாகவும் இருப்பதோடு கணவனின் ஆலோசனைக்கேற்பவும் அமையவேண்டும். விஞ்ஞான விதிப்படி பெண்களுக்கு (இன்டட்யூஸ் பவர்) அதாவது உள்ளுணர்வு அதிகம் என்பதால் அதாவது ஆணுடைய மூளையுடன் ஒப்பிடும் போது 60:40 என்ற விகிதாசாரத்தில் அமைவதால் பெண்ணிடம் அதிகப்படியாகவுள்ள உள்ளுணர்வுகள் அவசர முடிவையே எடுக்கின் றன. ஆனால் ஆணின் சிந்தனையே இந்த இடத்தில் பெண்ணின் வெற்றிக்குக் காரணமாக அமைவதைப் பெண்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆண்கள் ஆழ்ந்த சிந்தனையில் எடுக்கும் முடிவுக்கும் பெண்கள் அவசரப்பட்டு எடுக்கும் முடிவுக்கும் பல வித்தியாசமான விளைவுகள் இருக்கின்றன. சமூகம் என்பது நீ எனக்கு உதவு. நான் உனக்கு உதவுவேன் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. எமது உடல் உறுப்புக்களைப் பாருங்கள் வாய் உண்ணக் கை உதவுகிறது. நுரையீரல் சுவாசிக்க மூக்கு உதவுகிறது உடம்புக்கும் இதயம் இரத்தம் பாய்ச்சுகிறது. இவ்வாறு உடல் உறுப்புகள் ஒத்துழைப்பதாலே மனிதனுக்கு மனிதனாய் வாழ முடிகின்றது. அவ்வாறே பெண் ஆணுக்கு ஒத்துழைத்தால் தான் குடும்பப் பிரச்சினைகள் இன்றி ஒற்றுமையாக வாழமுடியும். இரண்டு காலும் இரண்டு திசையில் தான் இஷ்டப்படி போனால் பயணம் ஏது?

....................



15

## ஆசிரியர்களின் தவறு....!

ஆசிரியர்கள் சமுதாயத்தில் மிக உயர்ந்த அந்தஸ்துள்ள வர்கள் மாணவர்கள் வாழ்வில் ஆரம்பப்படிகள். ஆசிரியர்கள் இல்லையேல் இந்த உலகமே எவ்வாறு இருந்திருக்கும் என்பது கற்பனைக்குரிய விஷயம். இந்த உன்னதமான தொழிலைச் செய்பவர்களின் மனமும் உன்னதமாகவும் அருள் நிறைந்ததாகவும் இருத்தல் மிகமிக அவசியமாகும். இத்தகையோர் இல்லாமலும் இல்லை. ஆங்காங்கே சில விதிவிலக்குகள் நம் சமுதாயத்தில் இருக்கவும் செய்கிறார்கள் என்றால் இதை யாராலும் மறுக்கவும் முடியாது.

பெற்றோர்கள், ஆசிரியர்களை நம்பித்தான் தன் பிள்ளையை அவர்களிடம் ஒப்படைப்பது. அந்தப் பிள்ளையின் எதிர்காலத்தின் பாரிய பொறுப்பு அந்த ஆசிரியர் கையிலே தான் உள்ளது. பல அறிஞர்களையும், மேதைகளையும், இன்னும் பல உயர்ந்த இடத்திலுள்ள அத்தனை பேரையும் உருவாக்கியவர்கள் ஆசிரியர்களே. இவ்வாறு உலகத்திற்கு உயர்ந்த அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுத்து விட்ட ஆசிரியர்கள் அதைவிடவும் எவ்வளவு உயர்ந்தவர்கள்?

சில ஆசிரியர்களால் சமூகத்திற்கு பல பாதகங்கள் ஏற்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதைக் காண்கிறோம். ஒவ்வொரு ஆசிரியரும் தன் மாணவர்களை சரிசமனாக மதிக்க வேண்டும். ஒரு வகுப்பை எடுத்து நோக்கினால் அதில் ஏழை, பணக்காரன், நடுத்தர வர்க்கம், படிப்பவன், படிக்காதவன், சுமாராகப் படிப்பவன் என பல வித்தியாசமான பிள்ளைகள் ஒன்றாக இருக்கிறார்கள் நண்பர்களாக. ஆனால் ஆசிரியர்கள் தான் மாணாக்கர்களை வெவ்வேறு விதமாக நோக்கிறார்கள். சில ஆசிரியர்கள் படிக்கிற பிள்ளைகளை மட்டும் தான் கவனத்திற்கொள்கிறார்கள். படிக்கிற பிள்ளைகளை மாத்திரமே இன்னும் தட்டிக் கொடுப்பதைக் காண்கிறோம். மாணவத் தலைவர்களைத் தெரிவுசெய்யும் போது கூட திறமையான மாணவர்களுக்கு மாத்திரமே பதவி வழங்கப்படுகின்றது. உண்மையிலே இதை ஆழ்ந்து சிந்திப்போமானால் ஆசிரியர்களின் இத்தகைய நடவடிக்கைகள் தவறானது. உண்மையில் வகுப்பில் அடாவடித்தனமுள்ளவனுக்கு பொறுப்புக்களை வழங்கிப் பாருங்கள். அவனது அடாவடித்தனங்கள் தானாகக் குறைவதைக் கண்குளிரக் காண்பீர்கள். அதே போல பாடத்தில் பின் தங்கிய மாணவர்களை இனங்கண்டு அவர்களை அன்புடன் அணுகி அவர்களை ஆர்வப்படுத்துங்கள். இயன்றளவு அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

சில ஆசிரியர்கள் இருக்கிறார்கள் , தங்களது பிள்ளைகளுக்கு மட்டுமே கூடிய சந்தர்ப்பத்தை அளிக்கிறார்கள். இதனால் ஏனைய மாணவர்களின் விரக்திக்கு நீங்கள் காரணமாக இருக்கிறீர்கள். உண்மையில் உங்களது பிள்ளைக் கெட்டிக்காரர்களாக இருக்கலாம். ஆனால் இத்தகைய செயலில் உங்களுக்கு பெருமையில்லை. சமூகம் இதைப் பாரபட்சம் என்று தான் கருதுகின்றது. சில ஆசிரியர்களின் அணுகுமுறைகள் மிகவும் தவறானவையாகும். கடுகடுப்பு, நச்சரிப்பு இவைகள் நிச்சயமாக ஒரு ஆசிரியரிடம் இருக்கக் கூடாத பண்புகளாகும். எனவே நீங்கள் உருவாக்கும் சமூகம் நல்லபடியாக அமைய வேண்டும் என்றால் நீங்கள் முதலில் உங்களைத் திருத்தி, இத்தகைய உன்னதமான உயர்ந்த தொழிலுக்கு பெருமை தேடிக் கொடுங்கள்.



# 16 மனங்களிடையே நட்புறவு

தன்னைத்தானே மட்டுமே நேசிக்கப்பக்குவம் கொண்ட உள்ளமானது அடுத்தவரையும் நேசிக்கத் தலைப்படுவதினாலேயே மனங்களிடையே நட்புறவு ஏற்படுகின்றது. இந்த நட்புறவு என்னும் வார்த்தையானது ஆதிமுதல் அந்தம் வரை தொடரக் கூடியது. இது உள்ளத்தில் உருவாகும் ஒரு நல்ல பண்பாகும். குடும்பவாழ்க்கையில் கணவன்-மனைவிக்கு இடையில் ஒருவரை ஒருவர் உள்ளத்தால் புரிந்து கொண்டு ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்து ஒருவரின் தேவையை மற்றவர் புரிந்து கொண்டு ஒத்துழைத்து வாழ்வதாலேயே குடும்பவாழ்வில் நட்புறவாகக் கருதப்படுகின்றது. கணவன் மனைவிக்கு இடையில் ஏற்படும் இந்த நட்புறவானது பிள்ளைகளின் வாழ்விலும் பிரதிபலிக்கின்றன. பெற்றோர்களின் நட்புறவான வாழ்வைக் கண்டு பிள்ளைகளும் அது போல வாழப்பழகிக் கொள்கிறார்கள்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுடன் மிகவும் நட்புறவுடன் நடந்து கொள்ளவேண்டும். தோளுக்கு மேல் வளர்ந்துவிட்டால் ஆண்பிள்ளைகளைத் தோழனாகவும், பெண்பிள்ளைகளை தோழியாகவும் நினைத்தல் வேண்டும். பெற்றோர் நட்புறவுடன் நெருங்கி பிள்ளைகளின் தேவைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளுடன் மிகவும் நட்புடன் பேசுதல் வேண்டும். சில பெற்றோர்கள் காட்டும் அதிகாரங்கள் பிள்ளைகளின் அறிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தமாக்கி விடுகின்றது. பெற்றோர்கள் அன்புடனும், பண்புடனும் பிள்ளைகளை அணுகினால் தான் அவர்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு அவர்கள் தீய வழியில் செல்லாது நல்ல வழிமுறைகளைக் காட்டிக் கொடுக்க முடிகின்றது. சில பெற்றோர்கள் பிள்ளைகளுடன் நட்புறவு கொள்வதில்லை. இதனாலேயே பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே பல விரிசல்கள் ஏற்பட்டு பிள்ளைகள் பெற்றோர்களுக்கு உதவாக்கரையாகி விடுகிறார்கள். தான் தோன்றித் தனமாகச் செயற்படுகிறார்கள். அஞ்சாமல் தனிவழியே செல்கிறார் கள்.

அதிகமாகப் பிள்ளைகள் இருக்கும் வீட்டில் பிள்ளைகளுக்கிடையே பெற்றோர்கள் பாரபட்சம் காட்டுகிறார்கள். சில பிள்ளைகளைப் பெற்றோர்கள் ஆதரிக்கிறார்கள். சில பிள்ளைகளை நச்சரித்த வண்ணம் இருக்கிறார்கள். இது அப்பிள்ளைக ளின் போக்கைப் பொறுத்து நேர்எதிராக அமைகின்றது. பெற்றோர்கள் தன்பிள்ளைகள் ஆணோ, பெண்ணோ எப்பிள்ளையானாலும் அப்பிள்ளைகளைச் சரிசமமாக மதித்தல் அவசியமாகும். பெற்றோர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு நேசித்துக் கொள்கிறார்களோ அவ்வாறே தன்பிள்ளைகளையும் நேசிப்பது அவசியமாகின்றது. இப்படி பெற்றோர்களின் அணுகுமுறைகள் மிகுந்த நட்புறவு உள்ளதாக இருந்தால் பெற்றோர்கள் பிள்ளைகளுக்குப் பாலமாக இருபார்கள். பிள்ளைகளுக்கிடையே நீ, நான் என் பாகுபாடு நிலவமாட்டாது.

சமூகமானது பல குடும்பங்கள் சேர்ந்ததாகும். இவ்வாறு ஒவ்வொரு குடும்பத்திலும் நட்புறவு இருந்தால்: சமூகத்தில் நட்புறவு இருந்தால் தான் நாட்டிலும், வீட்டிலும் அமைதி நிலவும். மனித உள்ளங்கள் சுயநலமுள்ளதாக இருக்கக் கூடாது. தன்னைப்போல பிறரையும் நேசிக்கப்பழகுதல் அவசியமாகின்றது. மாணவர்களிடையே மனிதர்கள் எல்லோரும் மற்றவரின் அங்கம். ஒருவருக்கு ஒன்றென்றால் அடுத்தவருக்கு வலிக்க வேண்டும். அவ்வாறு சிந்திப்போமேயானால் மனித வாழ்வே நட்புறவில் தான் நிம்மதியடைகின்றது, ஆறுதலடைகின்றது எனலாம்.



# 17 தாயின் தவறு....!

பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே நிலவும் மேலதிக நட்புறவானது பிள்ளைகளின் வழிதவறல்களுக்கு ஏதுவாக அமைகின்றது. தோளுக்கு மேல் உயர்ந்து விட்டால் பெண் பிள்ளைகள் தாய்க்கு தோழி போல என்பர். ஆனால் இந்தத் தோழமையானது சிலநேரங்களில் தகாத விளைவுகளையும் ஏற்படுத்தலாம்.

பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் விடயத்தில் மிகுந்த அக்கறையுடனும், முன்மாதிரியாகவும் இருத்தல் மிகமிக அவசியமாகின்றது ''நூலைப்போல சேலை தாயைப்போல பிள்ளை" என்று ஒரு உவமை உண்டு. இது முற்றிலும் உண்மையான கருத்தாகும். பொதுவாகப் பெண்பிள்ளைகள் தாயைப் பின்பற்றுகிறார்கள். சிறுவயது முதல் தாயின் நாகரிகங்கள் வலுக்கட்டாயப்படுத்தி பிள்ளைகளுக்கு புகுத்தப்படுகின்றன. ஓர் உடையை உடுக்க பிள்ளை விரும்பாத போது கூட அந்த உடை வற்புறுத்தி அணிவிக்கப்படுகின்றது. தனக்கு இஷ்டமில்லாத சீவிச்சிங்காரிப்புகள் தாயாலே ஏற்படுத்தப்பட்டு பெண்பிள்ளைகள் வெளியில் அனுப்பப்படுகின்றனர். இதனால் தன் பிள்ளைகளுக்கு வெளியில் ஏற்படும் விபரீதங்களை தாய்மார்கள் உணரத் தவறுவது தான் வேதனைக்குரிய விடயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்பிள்ளைகளின் காதல் விவகாரங்களுக்கு தாயே உடந்தையாகின்றாள். பெண்பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும், கண்ணீருக்கும் தாய் என்பவளே மறை முகமான காரணியாகின்றாள். எனவே பெண்பிள்ளைகளை மிக மிகப் பொறுப்போடு வளர்க்க வேண்டியது தாயின் கடமையாகும்.

மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட பெண் பிள்ளைகளுள்ள வீடுகளில் மூத்த மகளை சமையலறைக்கே சமாதியாக்கி விடுகின்றார்கள். நடுவயது மகளை நாகரிகத்திற்கே பழக்கிவிடுகின்றார்கள். இளைய மகளை செல்லப்பிள்ளையாக்கிக் கொள்கிறார்கள். இத்தகைய பாரபட்சங்கள் யாவும் தாயாலே உருவாக்கப்படும் விடயங்களாகும். இதனால் பல குடும்பங்களில் விரிசல்கள் ஏற்பட்டு விடுகின்றன.

ஆண் பிள்ளைகளுக்குப்-பெண்பிள்ளைகள் சமநிகர் என்று கூறப்படும் இந்தக்காலத்தில் கூட பெண்பிள்ளைகளை ஆண் பிள்ளைகளின் வேலைக்காரிகளாக பயன்படுத்திவருவதும் தாயின் தவறாகும்.

எனவே பெண் அடிமை என்ற அடக்குமுறையானது தீர ஆராய்ந்தால் பெண்ணுக்குப் பெண்ணாலே உருவாக்கப்பட்டதன்றி ஆண்களால் உருவாக்கப்பட்டதல்ல. எனவே ஒவ்வொரு தாயும் இவ்வாறு சிந்தித்தால் ஆதிமுதல் அந்தம்வரை பெண் பிள்ளைகளாலும் தலை நிமிர்ந்து வாழலாம்.



18

# விவாகரத்தின் விபரீதம்.....!

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். ஆதலால் தான் அது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டு, ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவனால் வழங்கப்பட்ட வரமாகும்.

எண்ணம் போல வாழ்வு அமையாவிட்டால்... வாழ்வு போல எண்ணங்களை மாற்றியமைத்துக்கொள்ள முடியாத பலவீனமான மனிதர்களே விவாகரத்துப் பெறுகின்றார்கள். விவாகரத்து என்பது பலரை சின்னத்தனப்படுத்தி சிரிக்க வைத்தாலும் ஒரு சிலரை சிந்திக்க வைக்கும் கசப்பான அனுபவமாகும்.

சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட திருமணம் உடைந்து போவதென்றால் இங்கே வானங்களும், பூமிகளும் அதிர்ந்து போகின்றன. உயிரற்ற வானத்துக்கும், பூமிக்கும் உள்ள கலக்கம் அத்தனை வருஷம் ஒன்றாக வாழ்ந்து பிரியும் உங்களுக்கு இல்லையே என்பது தான் வேதனைக்குரிய விடயம். இறைவன் திருமறையில் கூறுகிறான் ''விவாகரத்து என்பது என்னுடைய கசப்பான விருப்பம்" என்று. இதைத் தம்பதிகள் உணரத்தவறுவதுதான் அறிவீனம்.

''இன்னார்க்கு இன்னாரென்று
எழுதி வைத்தானே தேவன் அன்று"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கவிஞன் கூறிய உண்மையான கருத்தை மாற்றியமைக்க முற்படுவோருக்கு வாழ்வு பூராவும் சோதனைகளே யன்றி வேறில்லை. வாழ்க்கை உங்களுடையதாக இருக்கலாம், வாழ்வதும் விவாகரத்துப் பெறுவதும் உங்களுடைய உரிமையாக இருக்கலாம். ஆனால் ஒரு குழந்தையான பிறகு விவாகரத்துப் பெறுதல் என்பது குழந்தையின் வாழ்விற்கு கேள்விக்குறியான அமை வதோடு அதுவே முற்றுப்புள்ளியாகவும் மாறுகின்றது. இதை விவாகரத்துப் பெறும் பெற்றோர்கள் உணரத்தவறுவது தான் வேதனைக்குரிய விடயம்.

''இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சையல்லவா"? ஆதலால் தான் இருக்கும் வாழ்வு கசக்கும் போது புதியதொரு மறுவாழ்விற்காக உள்ளம் கொள்ளை போகின்றது. ஐந்தறிவுள்ள மிருகம் போல ஆறறிவுள்ள மனிதன் மாறுகின்றான் அல்லது சூழவுள்ளவர்களின் உடன்தைகளால் மாற்றப்படுகின்றான். ஆண்களுக்கு மறுவாழ்வு என்பது புத்தம்புதிதாக அமைவது போல பெண்களுக்கு அமையுமா? ஆங்காங்கே கைக் குழந்தையோடு வாழாவெட்டியாகி கண்கலங்கி நிற்பதுதான் பரிதாபகரமான முடிவாக அமையும்.

''வாழ்க்கையென்றால் ஆயிரம் இருக்கும். வாசல் தோறும் வேதனை இருக்கும். பொறுப்பில் தான் வாழ்க்கையில் இன்பம் உண்டு, சகிப்பதில் தான் இறைவனின் அருள் இருக்கும். இரண்டுமே இல்லாத விடத்தில் இறைவனின் கோபப் பார்வைதான் மிஞ்சும்.

இன்று நமது நாட்டில் கூட மேலைத்தேய நாடுகளின் கலாசாரங்கள் புகுந்துவிட்டன. சாதாரணமாகப் பேசி தீர்த்துக் கொள்ளப்பட வேணடியதும், திருத்திக்கொள்ளக் கூடியதுமான சிறுசிறு பிரச்சினைகள் இன்று பெரும்பாலும் விவாகரத்தில் போய் முடிகின்றன. இதனால் ஒரு பாவமும் அறியாத சின்னஞ்சிறு மழலைகளே பாரிய தண்டனைகளை அனுபவிக்கத் தலைப்படுகின்றன ஒரு பாவமும் அறியாத குழந்தையைத் தான் இங்கும், அங்கும் பேரம் பேசி



தாயிடமும், தந்தையிடமும் இருந்து கதரக்கதர பிரிக்கின்றனர்.

இரண்டு இரத்தபாசங்களால் உருவாக்கப்பட்ட அந்த சொர்க்கத்து ஜீவன் தாய், தந்தை என்ற புனித உறவுகளிடமிருந்து விடைபெற்றுச் செல்லும் காட்சி காணபவர் உள்ளங்களையும் கலங்க வைக்கின்றது. எந்தவொரு பிள்ளைக்கும் தாயும், தந்தையும் உருப்படி யாக இருந்தால் தான் வாழ்க்கை பூரணத்துவம் பெற்றதாக அமையும். பிரிந்த போன அந்தக் குழந்தை சித்தியுடனோ, சித்தப்பாவுடனோ, பாட்டியுடனோ வளர்வதென்றால் அதற்கு சின்ன வயதிலே தாய் தந்தையின் பூரணமான அன்பு இல்லாமல் மனவிரக்திக்கு ஆளாகும் போது, சேர்ந்தே கொடுமைகளுக்கும் ஆளாக்கப்படுகின்றது.

குழந்தையின் பழியும், இறைவனின் கோபமும் பெற்றவர்களை சோதிக்காமல் விடுமா? எங்கே போய் வாழ்ந்தாலும் விவாகரத்துப் பெற்றவரின் வாழ்க்கை பூரணத்துவம் அடையாது ஜீவிப்பதைக் காணலாம்.

இன்று புள்ளி விபரங்கள் அடிப்படையில் பெரும்பாலான விபத்துக்களுக்கு ஆளாகி வருபவர்கள் தாயும்-தந்தையும் விவாகரத்துப் பெற்றவர்களின் குழந்தைகளே. பாடசாலைகளில் அதிகம் பின்தங்கிய நிலையில் இருக்கும் பிள்ளைகள் கூட தாயும்-தந்தையும் ஒழுங்காக இல்லாத பிள்ளைகளே. இன்று ஹிஸ்ரீரியா போன்ற பலவகை மன நோய்களுக்கு ஆளாகி இருப்பவர்கள் யார் என்றால் தாய் தந்தை இல்லாமல் வளர்ந்த பிள்ளைகளே.

பெற்றோர்களே! சற்றே சீர்தூக்கிப்பார்த்து சிந்தித்துப் பாருங்கள். பெற்றோர்கள் உயிரோடு இருக்கும் போதே உங்கள் பிள்ளைகளின் தவிப்பு எத்தகையதென. இதைவிடவும் இறந்து போவது சுகம் தானே? அதற்காக தற்கொலை வேண்டாம். இத்தகைய கசப்பான விவகாரத்தை அதன் விபரீதங்களை உணர்ந்து வாழுங்கள். இதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 நான் என்கின்ற மையம்.

மலைகள் தன் எல்லைக்குள் பொறுமையாக இருப்பதனால் அவை அமைதியாக இருக்கின்றன. கடல்கள் தனது எல்லைக்குள் இருப்பதனால் அமைதியாக இருக்கின்றன.

ஆறுகள் தன் திசையிலே போய்க் கொண்டிருப்பதனால் அவையும் குழப்பங்கள் எதுவுமின்றி இருக்கின்றன.

ஆனால்...........

வாழ்க்கையின் சிக்கல்களை நோக்கும் போது ஒவ்வொரு மனிதனும் எப்படிச் செயற்படுகின்றதென்றே தெரியாமல் குழம்பிப் போகின்றான்.

செய்து முடிக்க வேண்டிய செயல்கள் எவ்வளவோ இருக்கின் றன. தம் பிரச்சினைகளை இன்னொருவரிடம் போய் சொல்லி முதலே நம்மை விடவும் அடுத்தவருக்குப் பிரச்சினைகள் அதிகம் உள்ளதென உணர முடிகின்றன.

நம்மைச் சுற்றியுள்ள உலகம் துரிதமாய் மாறிக் கொண்டிருக்கின்றது. நாம் தான் இன்னும் இருக்கும் நிலையிலேயே இருக்கின்றோம்.



இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்?

எதைச் செய்ய வேண்டும் என்று தமக்குள் தாமே ஆராய வேண்டும். நாம் எப்பொழுதுமே எந்தச் செயலானாலும் சரி நான் என்கின்ற மையத்திலிருந்து தான் ஆரம்பிக்க வேண்டும். மையம் என்பது எமது தகுதிக்குத் தகுந்த கட்டுப்பாட்டில் இருந்து சிந்திப்பதாகும்.

இந்தக் கட்டுப்பாடு எப்போதுமே கவலையும், வருத்தத்தையும் தற்காலிகமாக் கொண்டதாய் இருக்கும். அங்கே தான் கடந்த கால வேதனைகளும், நிகழ்க்காலச் சோதனைகளும், எதிர்கால எதிர்ப்பார்ப்புக்களும் இருக்கும்.

நம்முடைய அடித்தள வேர்கள் நமக்குள் இருந்து தான் வளர ஆரம்பிக்க வேண்டும். இப்போது என்ன செய்வது? நாளை என்ன செய்வது? என நமது மையத்திலிருந்தே கண்டறிய வேண்டும்.

ஒரு மாட்டை நீண்டதொரு கயிற்றில் கட்டி மேயவிட்டால் அது தன் கயிற்றுக்கு எட்டும் சுற்றுவட்டாரத்தில் மட்டும் தான் மேயும். இங்கே இந்த மாட்டுக்கு, தான் சிறைப்பட்டது போன்று குழப்பமும் வேதனையும் இருக்கும். என்றாலும், தனது வயிறு நிரப்பும். இதுதான் நான் என்கின்ற மையம். இதில் சுயநலம் இருக்கும். ஆனால், வெகுமதி தண்டனை, சாதனை அல்லது தோல்வியாகவும் அமையும்.

ஆனால், மாடு கயிற்றை அறுத்துவிட்டால் அதன் போக்கு இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சையாகத் தெரியும். மாறா அழிவையும், சேதத்தையும் ஏற்படுத்திவிடும்.

கடல் தன் போக்கில் அமைதியாக இருந்தால் அதன் பிரயோசனங்கள் அதிகம். சுனாமி என்ற பெயரில் கரை கடந்ததால் அதன் பேரழிவு ஆபத்தையே விளைவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்க்கையும் இந்த இயற்கைக்கு ஒத்ததுதான். வாழ்க்கை என்பது செயல்...செயற்படுவதே வாழ்க்கையாக இருந்தாலும் அது நான் என்கின்ற மையத்தில் தனது தகுதிக்கு ஏற்றவாறு கட்டுப்பாட்டுடன் இருத்தல் அவசியமாகும். கட்டுப்பாட்டுடன் வளர்ந்த பிள்ளைக்கும் கட்டுப்பாடற்ற நிலையில் வாளர்ந்த பிள்ளைக்கும் நிறையவே பாகுபாடு இருக்கின்றது.

நான் என்கின்ற மையத்தைத் தாண்டிய வாழ்க்கை மகிழ்ச்சி நிரம்பியதாய் இருந்தாலும் அது முயற்சியின் பலனாலோ, திறமையின் விளைவாலோ அமைந்ததல்ல. எங்கே மையம் முடிகிறதோ அங்கே ஆரம்பிக்கும் கட்டுப்பாடற்ற சுதந்திரம் அணை கடந்த வெள்ளத்திற்கு திசையில்லை என்பது போல விதிவரையாத பாதையிலும் வாழ்வு செல்லக் கூடாது.

நான் என்கின்ற மையத்தில் இருந்து கொண்டு அதைக் கோலமாக வரைவது மனிதனின் கையில் தான் உள்ளது. எப்படியும் வாழலாம் என்பதை விட, இப்படித்தான் வாழ வேண்டும் என்று கற்றுத்தரும் அத்திவாரமே நான் என்கின்ற மையம்.



# 20 தொழில் ஒரு தூக்குக் கயிறாய்...

நீங்கள் செய்யும் தொழில் எதுவாக இருந்தாலும் அதை தெய்வமாக மதியுங்கள். தொழிலை ஒரு தூக்குக் கயிறாய் எண்ணிவிடாதீர். தொழில் இல்லாதவன் இந்த உலகில் வாழத்தகுதியற்றவன் என்றால் அது மிகையில்லை.

நீங்கள் செய்யும் தொழிலில் எந்தமாறுதலும் இல்லாமல் இருக்கலாம். வழக்கமானது என்று கருதி வேறு வழியின்றி அதனை சகித்துக் கொண்டு செய்வீர்கள். செய்யும் தொழில் கசப்பானால் அதன் பொருள் இதுதான். நீங்கள் செய்யும் வேலையை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளாமல் வேலை உங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றது என அர்த்தம் ஆகின்றது.

பலர் இப்படித்தான் தங்களுடைய வேலைக்கு மட்டுமே பயன்படுகிறார்கள். அதிலே தேய்ந்து போய், தளர்ந்து போய், அதை அப்படியே வெறுத்து அதை தூக்கி எறிகிறார்கள்.

நீங்கள் செய்கின்ற வேலை உங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்காமல் அதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அது எவ்வாறென்றால் வேலையை எஞ்சிய திறமை உங்களிடம் இருக்க வேண்டும். இதை விடவும் என்னால் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும் என்ற மனோபலம் வேலையை மிஞ்சிவிடும் சக்தியாகும். இந்த சக்தியும், மனோபலமும் உங்களிடம் இருந்தால் நீங்கள் வேலையைத் தேட வேண்டிய அவசியமில்லை. அது உங்களைத் தேடி வரும்.

நாம் எமது உடம்புக்கு ஏற்ற ஆடையைத் தான் உடுக்க முடியும். எமது உடம்பை விடப் பெரிய ஆடைகளையோ, சிறிய ஆடைகளையோ உடுத்துக் கொண்டு எம்மால் சொகுசாக இருக்க முடியாது. தொழிலும் அவ்வாறே. நாம் அணியும் ஆடைகளைப் போலதான் அமைய வேண்டும்.

தொழில் செய்பவனும் தனது தகுதிக்கும், அறிவுக்கும், தன்னிடமுள்ள மூலதனத்திற்கும் ஏற்றவகையில் அமைந்தால் தான் அதில் தொல்லைகள் இல்லாதிருக்கும்.

நீங்கள் வளர்வதற்குத் தேவையான சந்தர்ப்பங்கள் நிரம்ப இருக்கின்றன. அதனை அடைவதற்கான வழியைத் தான் நீங்கள் கண்டு கொள்ள வேண்டும். அது எவ்வாறென்றால்...

நாம் பிறருக்குக் கொடுப்பது தான் எமக்குக் கிடைப்பது. நாம் எமது தொழிலை தனக்காக அன்றி பிறருக்காகச் செய்ய வேண்டும். ஒரு வியாபாரி விற்பனை செய்வது பிறருக்காக, ஒரு வைத்தியசாலையைக் கட்டுவது பிறருக்காக. இப்படி பிறருக்காக பிறரின் தேவை உணர்ந்து செய்பவன் அவனது தொழிலில் தான் நிறைவும், முன்னேற்றமும் இருக்கும்.

தொழில் செய்பவன் என்றுமே சுயநலவாதியாகாமல் பொது நலவாதியாக இருந்தால் தான் அந்தத் தொழில் தொல்லை இன்றி இருக்கும். தொழிலில் இருக்கும் சுயநல உணர்வுகளே அதைத் தொல்லையாக்கிவிடும். மனிதன் எவன்? மனிதன் பிறருக்காக உழைப்பவனே உண்மையான மனிதன். அவனே வெற்றியாளன். அவனுடைய தொழிலே தொல்லையின்றி இருக்கும்.



21

# சிறகை விரித்தால் சிகரம் தொடலாம்.

இன்று உலகில் நிகழ்ந்துள்ள மகத்தான மாறுதல்கள் யாவுமே மனிதர்களின் உற்சாகத்தின் சின்னங்களாகும். வரம்பெற்ற உற்சாகம் ஒருவரிடம் இருக்குமானால் எப்படிப்பட்ட காரியமானாலும் கூட அவன் அதில் வெற்றி பெறுவான். ஒருவன் ஒரு இலட்சியத்தைக் குறிவைத்து அதை அடைவதில் உண்மையான உற்சாகத்தைக் காட்டினால் அவன் அந்த லட்சியத்தை எட்டுவது நிச்சயம்.

லட்சியத்தில் உற்சாகம் ஊறினால் வெற்றி நிச்சயம் என்று மனோதத்துவ நிபுணர் டாக்டர் வில்லியம் மார்ஸ்டன் என்பவர் கூறினார்.

இளமையிலேயே உற்சாகத்தை இழந்துவிட்டவர்கள் தான் விரைவில் முதுமையடைகிறார்கள். உண்மையில் பார்க்கப் போனால் ஒருவரை அடையாளம் காண அவரது உற்சாகமே சாட்சியாகின்றது.

தனிப்பட்ட காரியங்கள், வாழ்க்கையின் குறிக்கோள் இவற்றில் ஆர்வமுடன் செயல்புரிகின்ற முதிர்ச்சியை உற்சாகம் உள்ளவர்களிடம் காண முடியும். அது இல்லாதவர்கள் மந்தமான முதுமைத் தோற்றத்தில் இருப்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுமை என்பது வயதைப் பொறுத்ததல்ல. மனிதர்களின் உற்சாகத்தைப் பொறுத்ததாகும். உங்கள் வாழ்க்கையில் உற்சாகம் எங்கு தளர்கின்றதோ அன்றே முதுமை வந்து ஒட்டிக் கொள்ளும்.

மனிதர்களில் பல வர்க்கத்தினர்கள் இருக்கிறார்கள். அவர்களில் அரைகுறையாக முயற்சித்துவிட்டு, தவறான வழி காட்டப்பட்ட ஆசாமிகளுடன் அகப்பட்டுக் கொண்டு ஒதுங்கிக் கிடப்பவர்கள். சும்மா இருந்து கொண்டு சாப்பிடுபவர்கள். இவர்களே நாடும், வீடும் வெறுக்கும் நவீனவாதிகள்.

தொழிற்படாத இயந்திரத்தில் கறைபிடித்துவிடும் என்பது போல உற்சாகமற்ற மனம் மந்தநிலையை அடையும்.

மனிதனின் உற்சாகத்தை உற்பத்தி செய்ய எத்தனையோ உத்திகள் இருக்கின்றன. உண்மையிலே உடற்சோர்வும், மனச்சோர்வும் இருந்தாலும் உற்சாகத்தைப் பெற்றுவிட்டது போல நாம் எண்ணிக் கொள்ள வேண்டும். இது உளவியல் ரீதியில் ஒப்புக் கொள்ளப்பட்ட உத்தியாகும்.

கிடைக்காததொன்றைப் பெற்றுவிட்டது போல நடந்து கொள்வது அல்லது நடிப்பது கூட மனவள இயலின் படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நீங்கள் பெற்றுவிட்ட உற்சாகத்தின் வாயிலாக செயலில் சாதித்துக்காட்ட முற்பட வேண்டும். உற்சாகம் அதிகரிக்க உங்களின் முன்னேறும் வேகம் அதிகரிக்கும்.

புகழ்தலும், பாராட்டுதலும் மனிதனின் உற்சாகத்தை அதிகப்படுத்தும் இன்னொரு உத்தியாகும். அதுவே மனிதனின் இதயக் கதவுகளைத் திறக்கவல்லது.



புன்னகை, ஒளி, பிரகாசம் இவைகள் உங்கள் முகத்தில் இருப்பது அவசியமாகும். மகிழ்ச்சியுடன் மற்றவர்களுடன் சேர்ந்து உற்சாகமாக இருங்கள். உற்சாகம் என்பது தொற்றிக் கொள்ளும் தன்மை வாய்ந்தது. உற்சாகமாகத் தொழிற்படும் மனிதனுடன் நீங்களும் சேர்ந்து தொழிற்படுங்கள். உங்கள் பலகீனம் மறைந்துவிடும்.

உற்சாகம் என்பது ஒளிவீசும் தன்மையுடையது. சுயநலமின்றி உற்சாக ஒளிபரவினால் உங்கள் வாழ்க்கைச் சக்கரத்திற்கு அதுவே அச்சாணியாக இருக்கும். உண்மையான உற்சாகத்தை அடக்கி வைக்க முடியாது. அடக்க முடிந்தால் அது உற்சாகமல்ல. அச்சமாகவே அமையும். இது தன்னம்பிக்கையற்றவர்களின் அடையாளமாகும். இதைக் கோழைத்தனம் என்று கூட கூற முடியும்.

எதுவும் உங்கள் முன்னேற்றப் பயணத்தைத் தடுத்து நிறுத்திவிடக் கூடாது. நீங்கள் தடைகளால் பின்வாங்காமல் அதைத் தாண்டும் அளவிற்கு உற்சாகம் உங்களிடம் கரைபுரண்டு ஓட வேண்டும்.

உற்சாகம் என்பது ஒரு சக்தியாகும். அதை என்ஜின் போல எப்போதுமே தொழிற்பட வைக்க வேண்டும். நீங்கள் எதைச் செய்ய விரும்புகின்றீர்களோ அதை ஆரம்பிக்க உற்சாகம் இருந்தால் அதுவே போதுமானது.

மனிதனின் துணிவுதான் வித்தகம். எல்லாம் அடங்கி இருப்பது துணிவில் மாத்திரம்தான்.

உற்சாகம் எதையும் பெருக்கிப்பார்ப்பதல்லாமல், பிரித்துப் பார்க்காது. உற்சாகம் என்கின்ற சக்தியைப் பயன்படுத்தி சிறகை விரித்தால் மனிதனால் சிகரத்தையடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22

# வீட்டுப் பிரச்சினைக்கு மருந்து வீட்டுக்குள்ளேயே

வாழ்க்கை என்கின்ற பரிபூரண சக்கரத்தில் ஆண்பாதி-பெண்பாதி. இந்த இரண்டுபாதியும் ஒன்றாக இணைந்தால் தான். வாழ்க்கை வண்டி சரியாக ஓடும். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட ஆயிரம் காலத்துப் பயிராகும்.

சிலருக்கு வாழ்க்கை விரும்பியவாறு அமைவதில்லை. துரதிர்ஷ்டவசமாக அப்படி அமையாவிட்டாலும் தனக்கு ஏற்றவாறு பொறுமையுடன் தன் வாழ்வை மாற்றியமைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். குடும்ப வாழ்வில் கணவன்-மனைவிக்கு இடையில் மனம் விட்டுப் பேச பிரத்தியேக நேரம் அற்றுப் போவதுதான் பிரச்சினையின் ஆரம்பம். உண்மையான அன்பு கொண்ட கணவன்-மனைவியின் பிரச்சினைகள் கவலைகள் யாவும் நான்கு சுவருக்குள் தீர்க்கப்படுகிறன. ஆனால் வேறு சிலரின் பிரச்சினைகளோ நான்கு சுவருக்குள் தான் ஆரம்பமாகின்றது. அவரவரின் மனநிலை எப்படியோ அதற்கு மறுபக்கமாக வாழ்வு அமைவது நியதி. வாழ்வென்பது சுலபமானதல்ல.

வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கிறாள் ஒரு பெண். அவள் ஆசைப்பட்டு வெளியில் செல்ல கூப்பிட்டால் மறுக்கிறான் கணவன். போராட்டமின்றி அழைத்துச் செல்ல மாட்டான் கணவன். அப்போது அந்தப் பெண்ணின் மனநிலை என்னவாகும்? வெறுப்போடு கூடிய



விரக்தி மனப்பான்மையுருவாகி கணவனோடு கடமைக்காக வாழ்வதை உணரக்கூடியதாக இருக்கும். தொழில் என்றால் மட்டும் உங்களுக்கு உயிராக இருக்கலாம். ஆனால் மனைவியின் ஆசைகளுக்கும் இடம் கொடுக்க வேண்டும். அதற்காக கணவன் சில தியாகங்களைச் செய்துதான் ஆக வேண்டும். சில இழப்புகள் ஏற்படத்தான் செய்யும். பணம் மனிதனுக்கு உயிராக இருக்கலாம். ஆனால் அந்த உயிரின்பாதி . வாழ்க்கையின் பாதி மனைவி என்பதை உணர்ந்து கொள்ளத் தவறக்கூடாது. தன் தவறும் இடத்தில் தான் மனைவி தவறு செய்யவும்,துரோகம் செய்யவும் துணிந்து விடுகிறாள்.

இந்த உலகத்தில் பிரச்சினைகள் அற்ற குடும்பமென உறுதியாக எந்தக் குடும்பத்தையும் கூற முடியாது. கணவன் மனைவியையும், மனைவி - கணவனையும் புரிந்துகொள்ள தவறுவதுதான் இந்தப் பிரச்சினைகளின் மூல காரணங்கள். எப்போதுமே ஆண் என்பவன் தன் தவறுகளையெல்லாம் மறைத்து தான் பரிசுத்தமானவன். என்று நினைக்கிறான். ஆனால் பெண்ணின் ஒரு சிறிய தவறையும் தூக்கிப் பிடித்துக்கொண்டு ஆடுவான். ஊரும் உலகமும் பாராட்டினாலும் தன் மனைவியை கணவன் பாராட்டுவதில்லை.

குடும்ப வாழ்க்கையில் பல பிரச்சினைகள் வரலாம். சில விஷயங்களை மௌன யுத்தங்களின்றி கணவனும்-மனைவியும் மட்டுமே பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். இதை மற்றவர்களிடம் அம்பலப்படுத்தினால் வெறும் வார்த்தைகள் வதந்திகளோடு சேர குடும்ப வாழ்க்கைக்கே வேட்டாக அமையும். மற்றவர்கள் ஒத்துக்கொண்டாலும் இல்லாவிட்டாலும் கணவன்-மனைவிக்கு இடையில் கருத்துப் பரிமாறத் தயக்கம் கூடாது. வார்த்தைகளில் வேண்டாத சொற்பிரயோகங்கள் தவிர்க்கப்பட வேண்டும். முகத்தில் கடுகடுப்பும் கூடாது. இப்படி நிதானமாக இருந்தால் வாழ்க்கையில் எப்பிரச்சினைகளையும் நிதானமாகப் பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்ற வண்டி கணவன்-மனைவி என்ற இரண்டு மாடுகள் பூட்டிய ஒரு ஏர் மாதிரி. இதில் இரண்டு மாடுகளும் இரண்டு பக்கம் ஓடினால் வண்டி ஓடாது. எனவே கணவனும்-மனைவியும் இணைந்துதான் ஓடவேண்டும்.இதற்குத்தான் ஒருத்தருக்கு ஒருத்தர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும், புரிந்துணர்வும் பொறுமையும், சகிப்புத்தன்மையும் இருக்க வேண்டும்.

எவ்வளவு நீங்கள் படித்தவர்களாக இருப்பினும் வாழ்வு என்பது புத்தகப்படிப்பு அல்ல. மனம் கொண்டது தான் மாளிகையாகிறது. படிக்காதவர்கள் இன்று படித்துப் பட்டம் பெற்றவர்களை விடவும் வாழ்வில் நிம்மதியோடு இருக்கிறார்கள். ஏழைகள் இன்று பணக்காரர்களை விடவும் நிம்மதியாக வாழ்கிறார்கள். இதிலிருந்து ஒன்றைத்தான் விளங்கிக் கொள்ள முடியும். வாழ்வென்பது சடப்பொருளுக்கும், பதவிக்கும் அப்பாற்பட்டது. வாழ்க்கையில் ஏற்படும் வியாதிகளுக்கு கைவசம் மருந்து உண்டு. நாமே உருவாக்கிக் கொண்ட வீணான எம் மன நோய்க்கு மருந்து நாமேதான்.

சுலபமாகத் தீர்க்க வேண்டிய குடும்ப பிரச்சினைகளுக்கு தீர்வுகாண மூன்றாமவர் தேவை இல்லை. அந்த மூன்றாம் நபரால் தான் முப்பது பேர் தலையிட வாழ்வு முற்றுப்புள்ளியாகின்றது. எந்தப் பிரச்சினையும் பாரதூரமாவதற்குக் காரணம் நாம்தான்.

சிந்தித்துப் பார்த்தால் இது சின்ன விஷயம்தான். குடும்ப வாழ்வுப் பிரச்சினைகளுக்கு சிந்தித்து தீர்வுகாணுங்கள். சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புகள் குறையும்.



# 23 பிள்ளைகளைத் துன்புறுத்தும் தாய்.

எல்லாச் செல்வங்களை விடவும் பிள்ளைச் செல்வமே மேலெனப் போற்றுவோர் கோடியிருந்த போதும், பிள்ளையைத் தவமிருந்தும் பெறமுடியாமல் தன்னுயிரையே மாய்த்துக்கொள்ளும் தாய்மார்களோ பலரிருந்தும், பிள்ளைகளை தம் இஷ்டப்படி நடத்தும் தாய்மார்களும் அவர்களை அளவிலாது துன்புறுத்தும் தாய்மார்களும் நம்மில் அதிகரித்து வருவது தான் கவலைக்குரிய விடயமாகும். பிள்ளைகள் நாம் விரும்பியும் விரும்பாமலும் இறைவன் நமக்குக் கொடுக்கும் செல்வங்கள். அவர்கள் நம்வாரிசுகளாகவிருந்து நம் பெயரை, புகழை உலகத்திற்கு தொடர்ந்தும் கொண்டு செல்பவர்கள். ஏன் நாமே செய்யாத எத்தனையோ விடயங்களை நம்மையே முந்தி அற்புதமாகச் செய்து காட்டி நமக்கே புகழைத் தேடித்தருபவர்கள்.

எனவே அவர்களை அன்பாக, அறிவு ஊட்டி வளர்ப்பதே எமது கடமை. இதில் அதிகம் பங்கெடுப்பவள் தாய் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் பிள்ளைகளை அன்பூட்டி அரவணைத்து வளர்க்கும் தாய்மார்கள் இன்று அரிதாகிக் கொண்டு வருகின்றார்கள் என்பது தான் உண்மை.

இது அவசர உலகமாகி விட்டதால் குடும்பத்தில் தாய் தந்தை பிள்ளைகள் உணர்வுபூர்வமாக பேசுவதற்கோ, பழகுவதற்கோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரது விடயங்களை மற்றவர் பகிர்வதற்கோ இன்று நேரமில்லாது போய் விட்டது. தாய்தந்தை இருவரும் உழைக்க வேண்டும் இல்லாவிட்டால் குடும்பத்தை ஓட்டுவதில் கஷ்டம் இந்த நிலையே அதிகமான குடும்பங்களில் உள்ளது. இந்நிலையால் தாய்மார்களின் அரவணைப்பை பிள்ளைகள் அதிகம் இழந்து விடுகின்றனர்.

அலுவலகத்தில் பல்வேறு பழக்கங்களுக்கிடையில் வேலை செய்து விட்டு வரும் தாயிடம் பிள்ளைகள் அன்பாக எதையாவது கேட்டால் கூட இன்று பலதாய்மார்கள் சீறிவிடுகிறார்கள். இந்நிலையில் துடிப்பான பிள்ளைகளின் நிலையோ பெரும் பரிதாபம். உண்மையில் இன்று வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் உள்ள அனேக வீடுகளில் காலையிலும் மாலையிலும் குறைந்தது ஒரு குழந்தையாவது துன்புறுத்தப்படுகிறது என்றால் அதை யாரும் மறுத்து விட முடியாது.

வேலைப்பளு மட்டுமல்ல கணவனின் துன்புறுத்தல், அல்லது சுமை என்பனவற்றாலும் குழந்தைகளே தாய்மாரின் நெருங்கிய எதிரிகள். கணவனிடம் நேரடியாக தன்வெறுப்பை காட்ட முடியாத பெண்கள் தம் பிள்ளைகளின் மீதே அவற்றைக் காட்டுகிறார்கள்.

இவை மட்டுமல்ல குழந்தைகளுக்கு அதிகம் வேலைப் பளுக்களைக் கொடுக்கும் அனேக தாய்மார்களும் நம்மில் உள்ளனர்தான். தவிர பிள்ளைகளிடையே வேறுபாடு காட்டும் தாய்மார்களும் அதிகமே.

உண்மையில் இந்த தாய்மார்களின் நடவடிக்கைகளால் அவர்கள் சிறு இன்பம் அடைந்தபோதும் நீண்ட கால பாதிப்பு அடைபவர்கள் பிள்ளைகளே. பிள்ளைகள் அதிக எதிர்பார்ப்புக்களைக் கொண்டவர்கள். தமது தாய்,தந்தை ஊடாக அவற்றை எதிர்காலத்தில் நிறைவேற்றும் ஆவல் அவர்களிடம் ஊறிக்கிடக்கும். ஆனால் அவற்றை இவ்வாறான துன்புறுத்தும் தாய்மார்களின் நடவடிக்கைகள் தகர்த்து எறிந்து விடுகின்றன.



பிள்ளைப் பிராயத்தில் தாய்மார்களின் அன்பும் அரவணைப்பும் பெறாத அனேக குழந்தைகளே பின்னர் சமூகவிரோத செயற்பாடுகளில் ஈடுபாடுள்ளவர்களாக மாறிவிடுகின்றனர் என்று அறியப்பட்டுள்ளது.

எனவே அறிவார்ந்த ஒழுக்காற்று எதிர்கால சமூகத்தை கட்டி எழுப்ப குழந்தைகளை அன்போடு, ஊட்டி வளர்ப்பதே அவசியமாகி றது. பிள்ளைகளைத் துன்புறுத்தும் தாய்மார்களே சற்று சிந்தித்துப் பாருங்கள் ''நீங்களும் பிள்ளைகளாய் இருந்து வந்தவர்கள் தானே.!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 ஏழைகளுக்கு உதவுங்கள்.

ஏழைகள் என்றால் உடல் பலவீனம், மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளின் காரணமாக தமது அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடியாமல் தவிப்பவர்களே.

உழைத்து பொருள் தேடுவதற்கு உடல் ரீதியான பலவீனமும், பொருளாதார சிக்கல்களும் தடையாக அமைந்துள்ளன. இத்தகைய தடைகளை அகற்றிட செல்வந்தர்கள் யாவரும் ஏழைகளுக்கு உதவி புரிய வேண்டும். மேலும் எவர்கள் பொருளாதாரக் கஷ்டங்களுக்கும், துன்பத்திற்கும், பரிதவிப்புக்கும் ஆளாகி இருக்கிறார்களோ அவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும் வகையில் அவர்களின் பொருளாதாரம் மேம்படும் வகையில் சாத்தியமான எல்லா உதவிகளையும் செய்து கொடுக்க வேண்டும். இதையே எல்ல மதங்களும் விரும்புகின்றன.

ஏழைகள், மற்றும் பொருளாதாரத் தேவைகள் உடையோருடன் நல்ல விதமாக நடவுங்கள். ஏழைகளுக்கு அவருடைய உரிமைகளை வழங்கிவிடுங்கள். இறைவனின் திருப்தியைப் பெற விரும்புகிறவர்கள் ஏழைகளுக்கு உதவி புரியுங்கள். இவர்களே வாழ்க்கையிலும் துன்பத்திலிருந்தும் வெற்றியடைவார்கள். இறைவன் ஒரு மனிதனுக்கு செல்வத்தையளிப்பது அவனை சோதிக்கவே



அன்றி வேறில்லை. தனது செல்வத்தை அவன் செலவு செய்வது எங்ஙனமென்ற கேள்வி, கணக்கு ஒவ்வொரு மனிதனுக்கும் நிச்சயமாகவுண்டு.

யாசகம் கேட்பதென்பது நிர்ப்பந்தம். அது கஷ்டநிலைக்கு அடையாளம் அல்ல. அது சிலருக்குப் பழக்கமாகி விட்டது. இப்படிப்பட்டவர்கள் ஏழைகள் அல்லர். இதற்கு மாறாக சிலர் மிகவும் தேவையுடையோராய் இருக்கிறார்கள். ஆனால் அவர்களின் தன்மானம், அவர்களின் கண்ணியம் காரணமாக பிறரிடம் கைஏந்துவதை அவர்கள் விரும்புவதில்லை. இதுபோன்ற உண்மையுடையோரைத் தேடிப்பிடித்து உதவ வேணடும். உழைக்க முடியாதவர்களாக யார் இருக்கின்றார்களோ இவர்களின் தன்னடக்கத்தைக் கண்டு தன்னிறைவு பெற்றவர்கள் என நாம் நினைக்கின்றோம். இவர்களின் முகங்களைப் பார்த்து அவர்களின் உண்மை நிலையை நாம் அறிந்து கொள்ளலாம். மக்களிடம் அவர்கள் வற்புறுத்திக் கெஞ்சிக் கேட்க மாட்டார்கள். மக்களிடம் யாசகம் கேட்டுக் கொண்டு திரிபவன் வறியவன் அல்ல. அவனுக்கு ஏதாவது கொடுத்து அனுப்பிவிடலாம். ஆனால் உண்மையில் வறியவன் என்பவனே தன்னுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள வாய்ப்பு வசதி இல்லாத போதும் தன்னுடைய இந்தநிலை பிறருக்குத் தெரியாத வண்ணம் வாழ்கிறான். இன்னும் சிலர் வசதி வாய்புக்கள் இருந்தும் ஏழைபோல தம்மிடம் இருப்பதைப் பிறரிடம் காட்டிக்கொள்ளாது வாழ்கின்றனர். இருந்தும் பிறரிடம் கையேந்துகின்றனர்.

இத்தகையவர்கள் உண்மையிலே வஞ்சகர்களாகத்தான் கருதப்படுவார்கள். இத்தகையவர்களை இறைவன் நிச்சயமாக வறுமையைக் கொண்டு சோதிப்பான். செல்வந்தர்கள் யாவரும் ஏழைகளுக்கு உதவிபுரிய வேண்டுமென மார்க்க சட்டதிட்டங்கள் வலியுறுத்துகின்றன. அவர்களின் பொருளாதாரச் சிக்கல்கள் நீங்கி கண்ணியமாக வாழ அவை வழிகாட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே வெளியே தெரியாமல் தன் கஷ்டங்களைப் பொறுத்து வாழ்கின்ற ஏழை எளியோரைத் தேடி உதவிகள் புரிந்தோமானால் எமது செல்வங்கள் சுத்தமடைந்து பொங்கிவழியும். வற்றாத நீரூற்றாக இருக்கும். ஏழைக்கு உதவுபவன் என்றுமே தான் ஏழையாக மாட்டான் மாறாக அவனுக்கே இறைவனின் அன்பும் அருளும் கிட்டும் என்பது திண்ணம்.

நாம் எவ்வளவுக்கு எவ்வளவு அடுத்தவருக்குக் கொடுக்கிறோமே அவ்வளவுக்கும் அதிகமாக எங்களுக்குத் திருப்பிக் கிடைக்கும் சக்திமிக்க கொடையாகும்.



25

# முதுமை

முதுமை என்பது வாழ்க்கையில் முற்றுப்புள்ளியை நோக்கிச் செல்லும் கேள்விக்குறியல்ல...

அதுவே ஆதியும் அந்தமும் இல்லாத புதியதொரு யுகத்துக்கு இட்டுச் செல்லும் ஆரம்பப் படிகள். அதனாலேயே முதுமைப் பருவம் குழந்தைப் பருவத்திற்கு ஒப்பிடப்படுகின்றது. ஒரு மனிதன் வயோதிபப் பருவத்தையடைந்து விட்டால் இது பெரும் சாதனையன்றி வேதனையல்ல.

ஒவ்வொரு மனிதனினதும் ஆயுட்காலம் எத்தனை வருடங்கள்.....?

அத்தனை காலமும் வாழக்கொடுத்து வைத்தவனே முழு மனிதனும், உண்மையான பலசாலியும் ஆவான். வாழ்க்கையில் நாம் சந்திக்கும் போராட்டங்கள் எத்தனை....எத்தனை? நோய் நொடிகள் எத்தனை எத்தனை? எதிரும்-புதிருமாய் உலகோடு போராடிய மனிதன் இன்றும் உயிரோடு வாழ்கிறான் என்றால் அவனது அனுபவ முதிர்ச்சிகள் எண்ணில் அடங்குமா? இத்தகைய பொக்கிஷம், அறிவுக்களஞ்சியத்தைத் தான் நாம் இழிவு படுத்தி கிழடு..கிழடு என்று தள்ளி வைக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித்துப் பார்த்தால் வயோதிபர்கள் நம் இளையவர்கள் சந்தித்த சில்லறைக்காசாகி விட்டார்கள்.இன்று தலை நரைத்து விட்டால் முதுமையா? அப்படியாயின் இளமையிலே ஒரு சிலரின் உள்ளம் நரைத்து இளமையிலேயே முதுமையடைவதை என்னவென்று கூறுவது. தலை நரைப்பது அனுபவ முதிர்ச்சி பெற்றோரின் அடையாளம். இழந்த இளமைக்காக முதுமைக் காலத்தையடைந்தவுடன் பறக்கவிடும் வெள்ளைக் கொடிகளே. தலை நரைப்பது ஒரு பெருமையேயன்றி வேறில்லை. இதை டை அடித்து மறைக்க வேண்டுமா? வயோதிபர்கள் உடலால் பலவீனப்பட்டாலும் உள்ளத்தால் பலசாலிகள். ஞானம் பிறந்தவர்கள்.

இவர்கள் கடந்து வந்த பாதையில் கற்றுக் கொண்ட அனுபவப் பாடங்கள் ஏராளம். இவைகளைக் காலத்தால் அழிந்து போகாமல் நம் இளைய தலைமுறையினர்கள் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். இன்றுயார் தான் கிழடுகளின் வார்த்தைகளுக்கு செவிமடுக்கிறார்கள்? அவர்கள் வாசித்த நூலைப் பிரித்துப்பார்க் கிறார்கள்? அவர்கள் விதைத்த நிலத்தை எட்டிப்பார்க்கிறார்கள்.? பங்கு போட்டு சண்டையிட்டுத் துண்டித்துக்கொண்டார்களே தவிர கண்ட பயன் எதுவும் இல்லை. முதியவர்கள் பழைய புராணம் ஓதத்தொடங்கினாலே இளையவர்கள் ஓடி விடுகிறார்கள். குந்தியிருந்து கேட்டால் தானே பழைய சரித்திரங்கள். புதியவர்களைப் பழுது படாது காக்கும்.

தென்னையின் கீழ்மட்டைகள் விழும் போது மேல் மட்டைகளுக் குக் கொண்டாட்டமாம்.. ஆனால் முதுமை என்பது இதற்கு நேர்-எதிராகும். மீதமுள்ள மட்டைகளே முதுமையை எய்துவனவாகும். வாழ்க்கையின் சிகரம் முதுமை. முதுமையை அடைந்தவன். பெருமைமிக்கவன், பொறுமைமிக்கவன், வரலாற்றில் தடம்பதித்தவன். இறந்தாலும் மக்கள் மத்தியில் மங்காது வாழ்பவன். இளமையில் இறந்தவனின் பெயர் மறைந்தாலும் முதுமையில் இறந்தவனின் சரித்திரம் அழியாது. அது கல்லில் செதுக்கிய எழுத்துப் போன்றது. வயோதிபர்கள் வீட்டுக்குள் இருந்தால் ஆசிரியர்



தேவையில்லை, வைத்தியர் தேவையில்லை. வறுமையில்லை, மனதில் வெறுமையி ல்லை, தனிமையில்லை. வீட்டுக்குத் தரித்திரமில்லை. இவர்களின் முனங்கல் சத்தம் வீட்டை விழித்திருக்க வைக்கின்றது. வயோதிபர்களின் கடவுள் பக்தியால் வீட்டுக்கு அருள் கிடைக்கும். முதியவர்களை இழிவுபடுத்தியவன் வாழ்க்கையில் சென்ற இடமெல்லாம் வெறுமையேயன்றி வேறில்லை.

நாம் சிறுவயதாக இருக்கும் போது எம்மை வாழ்க்கையில் அக்கரையில் இருந்து இக்கரைக்குச் சேர்க்க எவ்வளவு துன்பப் பட்டிருப்பார்கள்? அவ்வாறே நாமும் அவர்களின் துன்பங்களைச் சகித்துக் கொண்டு மனநிம்மதியோடு இறுதிக்காலத்தைச் செலவழிக்க உறுதுணையாய் இருப்பது எமது கடமை மட்டுமல்ல அதுவே நாம் அவர்களுக்குச் செய்யும் பிரதியுபகாரமுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26

# இல்லறத்தில் அமைதி நிலவ.

இல்லறம் என்பது நல்லறமாய் அமையவில்லையென்றால் அதற்குத் தன் கணவனையோ, மாமியாரையோ குற்றம் கூறுவதில் நியாயம் இல்லை.

எந்தவொரு மருமகளும் தன் கணவனின் போக்கிற்கும், மாமியாரின் குணத்திற்கும் ஏற்ப சாமர்த்தியமாகத் தன்னை மாற்றிக் கொள்வதில் தான் வெற்றி தங்கியுள்ளது.

அதே மாதிரிதான் புகுந்த வீட்டில் ஒரு மருமகள் நன்றாக வாழவேண்டும் என்றால் அங்குள்ள மாமியார் நாத்தனார் உட்பட அந்த வீட்டிலுள்ள அனைவருக்குமே நல்ல குணம் இருக்க வேண்டும். மருமகள் என்பவள் புகுந்த வீட்டுக்கு பிறந்த வீட்டில் இருந்து வரும்போது வாழ்வு பற்றிய பயிற்சியைப் பெறுவதில்லை. ஆதலால் மருமகளால் ஏற்படும் தவறுகளை மாமியார் சுட்டிக்காட்டித் திருத்துவதிலும் நியாயம் உண்டு. இதற்கெல்லாம் கோபப்பட்டுக் கொண்டு முகத்தை இருளாக்கிக் கொள்வதும் சொல்லாமல் கொள்ளாமல் பிறந்த வீட்டுக்கு ஓடிப்போவதும் பிறகு அங்கிருந்து சில நாட்களுக்கப்புறம் திரும்புவதும், இது மட்டுமல்லாது புகுந்த வீட்டில் ஏற்படும் சின்னச்சின்ன விடயங்களை அடுத்தவரிடம் கூறுவதும்



எத்தனை தவறான விடயங்கள்? இந்த இடத்தில் ஒரு கணவனால் எப்படி நடுநிலையாக இருக்க முடியும்? அங்கும் இல்லாமல் இங்கும் இல்லாமல் வீதியில் தத்தளிப்பது தான் நடுநிலையாக இருக்கும். கணவனை இரு பக்கமும் சமப்படுத்த கணவர் என்பவர் கடையில் வாங்கும் பொருள் அல்ல. ஒவ்வொரு பெண்ணும் தவமிருந்து கிடைத்த வரம்.

சில ஆண்கள் தாயின் கருத்துக்களுக்கு தலைசாய்த்தவராக இருப்பது வழக்கம், இதற்கு குறை கூற முடியாது சிலவேளை தாயின் கருத்துக்கள் நியாயமுள்ளவையாக இருக்கலாம். தன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கி தாரமும் தேடிக்கொடுத்த தாயை தன்மனைவியை விடவும் ஒருபடி உயர்த்திப் பார்ப்பதில் நன்மையே அன்றி தீமைகள் எதுவுமே விளைய மாட்டாது. மாமியார் என்பவரும் சற்றே சீர்தூக்கிப்பார்த்து சிந்திக்க வேண்டும். மருமகள் என்பவரும் உங்களில் ஒருத்திதான் என்பதை சிந்திக்க வேண்டும்.

எதற்கெடுத்தாலும் சதா குறை கூறிக்கொண்டிருப்பது தவறென்று கூறவில்லை. பிழைகளைத் திருத்தத்தான் வேண்டும் ஆனால் அதை மனம் புண்படாதவாறு கூறப் பழகிக்கொள்ள வேண்டும். எதையும் தாங்கும் உள்ளம் மகளுக்கு வரலாம். ஆனால் மருமகள் இன்னும் அதற்குப் பக்குவப்படவில்லை என்பதை உணர வேண்டும். இதனால் குடும்பத்தில் பல ஏகப்பட்ட பிரச்சினைகள் உருவாகின்றன.

திருமணத்திற்குப் பின் பல ஆண்கள் தாயா?தாரமா? எனத் திண்டாடுகிறார்கள். திருமணத்திற்குப் பின்னர் குடும்ப அமைதியே போச்சு என பல மாமியார்கள் கூறிக் கொள்கிறார்கள். எது எப்படி இருந்தாலும் குடும்பப்பிரச்சினைகள் வீதிக்கு வருவது வாழ்க்கைக்கு இழுக்கு என்பதை குடும்பத்தில் உள்ள அத்தனை பேரும் உணர்ந்து நடந்தால் இல்லற வாழ்வில் அமைதி நிலவும்.

......................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27

# திருமணம் பெற்றோர் சம்மதம் தேவையா?

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்பதால் தான் அதில் பெற்றோர்கள் தலையிடுகிறார்கள். சாப்பாடு மோசமானால் ஒரு வேளை நஷ்டம். அறுவடை மோசமானால் சில காலம் நஷ்டம். ஆனால் திருமணம் மோசமானால் உயிருள்ள வரை நஷ்டம். காலம் பூராவும் கண்ணீர் வடிக்க நேரிடும். இதனைக் கருத்திற் கொண்டுதான் ஒவ்வொரு பெற்றோரும் தன் பிள்ளையின் திருமண விடயத்தில் மிகவும் அக்கறையுடன் வரன் பார்க்கிறார்கள்.

இதனைப் புரியாத நமது இளம் தலைமுறைகள் ஏதோ மனப்பொருத்தத்தின் பேரில் துணை தேடிக் கொண்டு திருமண பந்தத்தில் புகுவதால் தான் ஏனைய பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மிகவும் கடுமையாக முகம் கொடுக்க நேரிடுகிறது.

ஒவ்வொரு பிள்ளைக்கும் சிறுவயது முதல் வாலிபவயது வரை பெற்றோரின் துணையும், பங்களிப்பும் தேவைப்படுகின்றன. ஆனால் திருமண விடயத்தில் மட்டும் பெற்றோரின் இஷ்டத்தை நஷ்டமெனக் கருதும் பல பிள்ளைகள் நம் மத்தியில் இருப்பது வேதனைக்குரிய விடயமே. ‘‘பாதை தவறிய கால்கள் விரும்பிய ஊர் சென்று சேர்வதில்லை. நல்ல பண்பு தவறிய பிள்ளையைப் பெற்றவர்கள் பெயர் சொல்லி வாழ்வதில்லை’’ திருமண விடயத்தில்



விருப்பத்தைப் புறக்கணித்த எந்தவொரு பிள்ளைக்கும் நல்ல வாழ்வு கிடைத்ததாக சரித்திரங்கள் இங்கே கூறவும் இல்லை.

பெற்றோரின் விருப்பத்தைப் புறக்கணித்து நடந்த திருமண வாழ்க்கையில் அந்த வாழ்வு அர்த்தமற்றுப் போனால் திரும்பவும் தேடி வருவது பெற்றோர்களிடமே. எமக்கு இன்பத்திலும், துன்பத்திலும் கைகொடுத்து உதவும் பெற்றோரின் சம்மதம் தான் திருமணத்தில் மிக மிக அவசியமாகின்றது. அப்போது தான் எமக்கு வரும் எந்தத் துன்பத்திற்கும் ஆறுதலுமுண்டு. அடைக்கலமும் உண்டு. பெற்றோருக்கே தெரியும் தன் பிள்ளையின் மனப்போக்கிற்கும் தகுதிக்கும் ஏற்ற துணையைத் தேடித்தருவதற்கு. தம்மை இருபது வருடத்துக்கும் மேலாக வளர்த்து ஆளாக்கிய பெற்றோருக்கு பிள்ளையின் மனப்போக்கு மற்ற எல்லோரையும் விடப்புரிந்திருக்கும்.

இதையறியாது எமது இளம் தலைமுறையினர்கள் ஏதோ இன்று நேற்று புதிதான காதல் வலையில் சிக்கிக் கொண்டு ஏதோ மனப்பொருத்தத்தை மட்டும் தான் பெரிது படுத்துகிறார்களே தவிர வாழ்க்கையில் திருமணத்துக்குப் பின் எத்தகைய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். அத்தனைக்கும் அன்பு மட்டும் இருந்தால் போதுமாகாது.

திருமண பந்தத்தில் பெற்றோர்கள் தலையிடுவது சிறியவர்களின் சிறப்பான வாழ்வுக்கேயன்றி வேறில்லையென்பதை இன்றைய இளசுகள் உணரவேண்டும். வாழ்க்கை உங்களுடையதாக இருக்கலாம். ஆனால் அதற்கு வழிகாட்டும் பொறுப்பு பெற்றோரின் கையில் தான் தங்கியுள்ளது.

எனவே பெற்றோரின் விருப்பத்திற்கு மதிப்பளிக்கும் எந்தவொரு பிள்ளையின் வாழ்வும் சிதறாது என்பது திண்ணம்.

...............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28

# வார்த்தைகளிலே வாழ்க்கை...

ஓர் அழகிய வாழ்க்கை நெறி அன்பான வார்த்தைகளில் தான் தங்கியுள்ளது. குடும்ப வாழ்க்கையில் வார்த்தை இல்லை யென்றால் வாழ்க்கை இன்மைக்குச் சமனாகிறது.

மனம் என்கின்ற பொக்கிஷத்தால் அள்ளிக் கொடுக்க முடியாதது எதுவுமே இல்லை. உண்மையான வார்த்தைகள் உதட்டில் அல்ல. உள்ளத்தால் வரவேண்டும்.

மகிழ்ச்சி, மன ஆறுதல், பாராட்டு, கண்ணியம், உணர்வுகள் போன்றவற்றை மனம் என்னும் பொக்கிஷத்தால் அள்ளிக் கொடுக்க முடியும். துன்பம், வேதனை, நிராசை, குரோதம், வெறுப்பு, கோபம், பொறாமை, திட்டல் போன்றவற்றையும் மனதால் அள்ளிக் கொடுத்து மனிதனைக் கெடுக்கவும் முடியும்.

ஞானம் அழகிய உபதேசம் என்பவற்றை விட அறிவுப் பசிக்கு அமுதூட்டுபவன் வேறு எதுவுமே இல்லை. வார்ததைகள் பல வகைப்படும்.

சில வார்த்தைகள் மனிதனை சிந்திக்க வைக்கின்றன.
சில வார்த்தைகள் மனிதனை சிரிக்க வைக்கின்றன.



சில வார்த்தைகள் மனிதனைச் சிறகிழக்க வைக்கின்றன.
சில வார்த்தைகள் மனிதனை வாழ வைக்கின்றன.

ஒரு சிலரின் வார்த்தைகளில் கடுகடுப்பும், வெறுப்பும், குரோதமும் இருக்கும். இப்படியானவர்கள் தனது வார்த்தைகளாலே வாழ்வை இழந்து நிர்க்கதியாகித் தவிக்கிறார்கள்.

வார்த்தைகளை வாழ்க்கையில் வாதங்களாகப் பயன்படுத்துவது தவறு. ஒட்டிப் பேசுவதும், வெட்டிப் பேசுவதும் வாழ்க்கைக்கு ஆகாது. நாகரிகமற்ற நட்புத்தெரியாதவர்கள் வார்த்தைகளாலே பகையை உண்டாக்கிக் கொள்கிறார்கள்.

நாவைப் பாதுகாக்கும் பற்களுக்குத் தான் வார்த்தைகளால் பாதிப்பு அதிகம். முரட்டுத் தனம், தர்க்கம், கடுமையான சொற்பிரயோகங்களால் பலரின் மனமுடைந்து போகின்றன.

கைகளினால் அடித்த அடி மங்கினாலும், வார்த்தைகளால் அடித்த வடு மறையாது. எனவே வார்த்தையை அனுசரிப்பதில் வாழ்க்கை அழகாக அமையும்.

கொடுப்பதற்கு எதுவுமே இல்லாவிட்டால் மனிதனை அன்பான அழகான வார்த்தைகளால் உபசரியுங்கள். நல்ல வார்த்தைகளை சிறு பிள்ளைகளுக்கு சிறுவயது முதலே பழக்கப்படுத்த வேண்டும். வீட்டில் ஆரம்பிக்கும் வார்த்தைகள் வீதிவரை செல்லக்கூடியன. எனவே, அளவான அன்பான வார்த்தைகளின் முன்மாதிரிகள் முதலில் பெற்றோரிடமிருந்து தான் வலிமை பெற வேண்டும்.

நாம் யார் மனதையும் வார்த்தைகளால் புண்படுத்தக் கூடாது. மனமுடைந்தால் மருந்தில்லை. எனவே அழகிய வாழ்க்கை நெறி அன்பான வார்த்தைகளால் தான் ஆரம்பமாகின்றது. வார்த்தை இல்லையென்றால் வாழ்க்கையும் இல்லை என்பது உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29

# நன்றி சொல்ல வேண்டும்.

உலகில் நடைபெறும் எல்லாவிதமான நன்மையான, தீமையான விடயங்கள் யாவுமே நன்றி கூறல் என்கின்ற வளம் பெருகும் இயற்கை விதியினூடே செல்வாக்குப் பெறுகின்றன. மனிதர்கள் ஒவ்வொருவருமே ஈடு இணையுள்ளவர்கள். ஒருவர் மீது இன்னொருவர் சார்ந்து வாழும் போது, நன்றி கூறல் என்பது உறவுகளைச் செம்மைப்படுத்தும். உன்னதமான பண்பாகும்.

மனிதர்கள் ஒவ்வொருவரும் அடுத்தவனுக்கு நன்றியுள்ளவனாக வாழ்ந்தால், வாழ்க்கையிலுள்ள விரக்திகள் மறைந்து செழிப்பும் ஒற்றுமையும் மேலோங்க வழிவகுக்கும். நன்றி கெட்டவன் தெய்வீக அருள் அற்றவன். அவனது உள்ளம் போலவே மனமும் இருளடைந்து காணப்படும். ஒருவர் நமக்குச் செய்த உதவிக்கு எப்போதுமே நன்றியுள்ள மனிதனாக வாழ்வது தெய்வீகமான பண்பாகும். நன்றி கெட்டவனை அனைவரும் வெறுப்பார்கள். இறைவனாலும் சபிக்கப்படுவான்.

விரும்பியதையெல்லாம் பெறவேண்டும் என்ற ஆசை நம் எல்லோர் மனதிலும் உத்வேகம் செலுத்தும் காரணியாகும். ஆனால் இருப்பவைகளையாவது சிந்தித்துப் பார்த்து அதற்கு நன்றி செலுத்த வேண்டும் என்கின்ற புனிதமான எழுச்சி சிலர் மனதில் இல்லை எனலாம்.



கொடுத்தால் தான் பெறமுடியும் என்கின்ற கோட்பாடே, மனித வாழ்க்கையை வளப்படுத்தும் மறைமுகமான செயலாகும். கொடுக்க எதுவுமே இல்லாவிட்டாலும் நாம் பெற்றுக்கொண்டவைகளுக்காக வெளிப்படையாக, விசுவாசமாக, ஆழமாக நன்றி கூறினால் அதுவே பெருமையையும், செல்வச் செழிப்பையும் தேடித்தரவல்லன.

மனித வாழ்க்கைக்கு இயற்கைதான் ஈடுகொடுக்கின்றது. அதன் செயல்கள்தான் அற்புதமான உங்கள் மனதையும் நிம்மதியாக வைத்திருக்கின்றது. மனத் திருப்திக்கு நன்றியுணர்வு மிகமிக அவசியமாகும். இதனை ஆழமாகச் சிந்தித்துப் பார்த்து மனிதன் மனிதனுக்கு மாத்திரமன்றி இறைவனுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டவன்.

இறைவன் இந்த உலகை எமக்குப் பல நோக்கங்களை வைத்துத்தான் முழுமையாக அர்ப்பணித்துள்ளான். பெற்றவர்கள் கூட பல எதிர்பார்ப்புகளுடன் தான்நம்மை வளர்த்து ஆளாக்கியுள் ளார்கள். இவற்றுக்கு நன்றியுள்ள நல்ல மனிதனாக நாம் வாழ வேண்டும். அப்போது தான் வாழ்க்கையில் வளம்பெருகும். உங்களுக்கு நிகழும் நன்மையான விடயங்களுக்கு மாத்திரமல்ல, தீமையான விடயங்களுக்கும் நன்றி கூற வேண்டும். தீமைகளைக் கூட நன்மைக்குத்தான் என சிந்திக்க வேண்டும்.

வெற்றி உங்களை உலகுக்கு அறிமுகப்படுத்தினாலும், தோல்விகள் யாவும் உங்களை உங்களுக்குள்ளே ஒருமுகப்படுத்தி சவாலையும், ஒழுக்கத்தையும், பக்தியையும் ஏற்படுத்தி வெற்றிக்குத் தூண்டுதலாக அமையும். தோல்விகளே நம் மனதில் பல பாடங்களைக் கற்றுத்தந்து தன்னகத்தே புகழைவிட்டுச் செல்லும். தோல்விகளுக்கும் வெற்றிகளுக்கும் நன்றி கூறும் கட்டத்தை உங்கள் மனம் அடைந்துவிட்டால் நீங்கள் எதிலுமே தோற்க மாட்டீர்கள். என்றுமே சஞ்சலமே இருக்காது உங்கள் உள்ளங்களில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30

# திறமை புறக்கணிக்கப்படுகிறதா?.

இன்று நாம் கண்டிருக்கும் நாகரிக வளர்ச்சிக்கும், தொழில்நுட்ப விஞ்ஞான முன்னேற்றத்திற்கும் திறமைசாலிகளே காரணமாக இருக்கின்றார்கள். விண்ணில் ஆராய்ச்சி முதல் ஆழ்கடல் மூழ்கிக் கப்பல் வரையிலான முன்னேற்றத்திற்கும் திறமைசாலிகளின் பங்களிப்பே காரணமென்றால் அதை யாராலும் மறுக்க முடியாது.

ஆனால் இப்படிப்பட்ட கெட்டிக்காரர்களுக்கு ஆரம்பம் முதலே புறந்தொதுக்கும் சோதனைகளாகவே அமைகின்றன. பல்வேறுபட்ட காரணங்களினால் சூழ்நிலைகளால் திறமையானவர்கள் புறக்கணிக்கப்பட்டு, திறமையில்லாதோருக்கே வாய்ப்புகள் வழங்கப்படுவதும் கண்கூடு. ஆரம்ப கட்டமாகப் பாடசாலைக்குச் சேர்க்கும்போதே ஏழையான திறமைசாலியான மாணவனிடம் பெருந்தொகையான பணம் கேட்கப்படுவதனால் அங்கே ஏழையான மாணவனுக்கு நல்ல பாடசாலையில் படிக்கும் வாய்ப்பைத் தவறவிடு கின்றான். அதே நேரம் வசதிகூடிய திறமையில்லாத மாணவனுக்கு மட்டும் நல்ல பாடசாலையில் படிக்க வாய்ப்புக் கிடைப்பதனால் அங்கே ஏழையான திறமைசாலியான மாணவனின் அறிவு வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது.

பாடசாலையில் ஒரு வகுப்பில் உள்ள எல்லா மாணவர்க ளையும் ஒரேநிலையில் நோக்க வேண்டிய ஆசிரியர். அல்லது



ஆசிரியை நிற, மத, சாதி,குடும்ப வேறுபாடுகளைக் கவனத்திற் கொண்டு பாரபட்சம் காட்டும் நிலை இன்று தொற்று நோய் போலப்பரவியுள்ளது. நான் கூற வந்தது என்னவென்றால் கறுப்பு நிற மாணவன் கெட்டிக்காரனாக இருந்தாலும், வெள்ளை நிற திறமையற்ற மாணவனையே முதன்மைப்படுத்தி முன்னுரிமை கொடுக்கும் நிலைதான் இன்று உருவாகி வருகின்றது. குடும்ப அந்தஸ்து, தனிப்பட்ட கவர்ச்சி இவைகளை மாத்திரம் 'கருத்திற் கொண்டு மாணவத் தலைவர்கள், வகுப்புத் தலைவர்களைத் தெரிவு செய்வதால் திறமையான மாணவர்கள் புறந்தொதுக்கப்படுகின்றார்கள். இதனால் ஏழை,எளிய கெட்டிக்கார மாணவர்களின் தலைமைத்துவ ஆற்றலுக்கு அங்கே தடை ஏற்படுகின்றது.

இதுதவிர பாடசாலையில் ஏற்பாடு செய்யப்படும் கலை, கலாசார நிகழ்ச்சிகளுக்குக் கூட ஆசிரியர்கள் தனது இஷ்டப்படி தனது பிள்ளையையோ அல்லது தனக்கு வேண்டிய பிள்ளையையோ தெரிவு செய்து போட்டிக்கு அமர்த்துவதால் திறமையான கெட்டிக் கார மாணவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். இறுதியில் ஏற்படும் தோல்விகளுக்குப் பல காரணங்களைச் சுட்டிக்காட்டித் தப்பித்துக் கொள்கிறார்கள். இந்நிலை பாடசாலைகளில் மட்டுமல்லாது பல்கலைக்கழக மட்டத்திலும் தொடர்வதை அவதானிக்க முடிகின்றது. பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்களின் கவனம் ஒரு சில மாணவர்களை மாத்திரமே சார்ந்திருக்கின்றது. தனிப்பட்ட கவர்ச்சியாலும், அந்தஸ்தாலும் கவரப்படும் மாணவர்களின் நலன் மட்டுமே பேணப்படுவது அதிகளவில் அவதானிக்கப்பட்டுள்ள விடயமாகும்.

இதனால் திறமையான மாணவர்களின் நிலைகள் பாதிக்கப்படுவதால் அவர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகின்றது. இவ்வாறே சமூக மட்டத்திலும் ஒருவர் பெற்றிருக்கும் சமூகநிலையைக் கருத்திற் கொண்டே அவனது திறமை புறக்கணிக்கப் படுவதும் அவதானிக்கத்தக்கது. சில காலங்களில் ஒருவன் சமூகத்தில் முன்னேறிவிட்டால் அதற்கான பின்னணியைக் குறைகூறி இழிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தி அவனைத் தாழ்வு படுத்துகிறார்கள். இதனால் சமூகத்தில் ஏழையாக இருந்து உயர்ந்தவன் தாழ்த்தப்படுகிறான். அதே நேரம் பரம்பரையான பணக்காரனுக்கு சமூகத்தில் முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

இது மட்டுமல்ல. இன்று திறமைசாலிகள் மிக முக்கியமாகப் புறக்கணிக்கப்படும் இடம் நேர்முகப்பரீட்சைகளாகும். இன்று நேர்முகப் பரீட்சைகளுக்கு எந்த மதிப்புமே இல்லை. ஏனெனில் போட்டிப் பரீட்சைகளை வைத்து திறமையானவர்களை அடையாளம் கண்டாலும் அவர்களை ஒதுக்கிவிட்டு, திறமையற்றவர்களை நேர்முகப்பரீட்சை இன்றியே அழைக்கும் நிலைகள் இன்று நடந்தேறுகின்றன. அதாவது சலுகைகளாலும், பணத்தாலும் பதவிகளை வாங்கிக் கொள்ளும் போது நியாயமான முறையில் பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் புறக்கணிக்கப்பட்டு இன்று பெரும் பாலான பட்டதாரிகள் வேலையின்றி தன்தகுதிக்குத் தாழ்ந்த வேலையில் இருப்பது பரிதாபத்துக்குரிய விடயமாகும். இந்நிலையில் திறைமைசாலிகள் தங்களது துறைசார்ந்த ஆற்றல்களை வெளிப்படுத்த முடியாமல் போகின்றது.

உண்மையில் இறைவன் எல்லோருக்கும் எல்லாத் திறமைகளையும் வழங்கி இருப்பதில்லை. அவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குரிய பாதையில் விட்டு விட்டால் சஞ்சலங்கள் எதுவுமே இருக்காது.நமது நாட்டைப் பொறுத்தவரையில் திறமைசாலிகளின் ஒதுக்கீடுகள் அதிகளவில் ஏற்படுவதால் நமது நாட்டின் எதிர்காலம் அறிவிலிகளின் புகழிடமாகவே மாற அதிகமான வாய்புகள் உள்ளது. பாடசாலைகளில் திறமையான மாணவர்களைப் புறந்தொதுக்குவதால் அப்பாடசாலைகள் வட்டார, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பின்னடைந்து போவதை ஒவ்வொரு ஆசிரியர்களும் நோக்க வேண்டும். இப்படி சுயநலன்கள் அதிகரிக்கும் போது சில வேளைகளில் சுயகௌரவத்தை இழக்க வேண்டிய நிலைக்கும் தள்ளப்படலாம்.



எனவே சமூகத்திலுள்ள திறமைசாலிகளை இனம் கண்டு அவர்களது ஆற்றல்களைக் கூர்மைப்படுத்தி மேலும் அவர்களைப் பண்படுத்தி வளப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

எந்தவொரு சமூகத்திலோ, பாடசாலைகளிலோ திறமை சாலிகள் புறந்தொதுக்கப்பட்டவர்களேயானால் அது அச்சமூகத்தின் வளர்ச்சி நிலையில் குறைபாட்டையே எடுத்துக்காட்டுகிறது.

திறமைசாலிகளாலேயே வரலாறு சிறப்புப் பெறுகின்றது. எனவே அவர்களைப் புறக்கணிக்காதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31

# இன்றைய இளைஞர்கள்...

ஒரு நாட்டின் முதுகெழும்பு அந்த நாட்டின் இளைஞர்கள் என்றால் அது மிகையில்லை...! ஆனால் நமது நாட்டைப் பொறுத்தவரையில் இந்நிலை தலைகீழாக மாறிவருவது குறிப்பிட்டுக் கூற வேண்டிய விடயம். இன்றைய சிறார்களே நாளைய தலைவர்கள். இதனைக் கருத்திற்கொண்டு பெற்றோர்களும், ஆசிரியர்களும், அரசாங்கமும் இளைஞர்கள் விடயத்தில் கூடிய கரிசனை காட்டி வந்தாலும் நமது நாட்டு இளைஞர்கள் இன்று பெரும்பாலும் நாட்டை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். இளைஞர்கள் என்பவர்கள் நமது நாட்டின் செழிப்பான மனித மூலதனம். இவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிக்கொண்டிருப்பது எமது நாட்டுக்கு வளர்ந்து வரும் பேரிழப்பாகும்.

இன்றைய சூழ்நிலையில் பாடசாலைகளை எடுத்து நோக்கினால் புதிய பாடத்திட்டத்துடன் தொழில்நுட்பக் கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்பட்டு, கல்வியில் மிகப் பின்தங்கியுள்ள பாடசாலைகளும் முன்னேறி வருகின்றன. பழைய காலங்களை விடவும் இன்றைய காலகட்டங்களில் மாணவர்களுள் பெரும்பாலான தொகையினர் பல்கலைக்கழகம் சென்று உயர்கல்வி கற்கின்றார்கள். பல்கலைக்கழக வாய்ப்புக்கிடைக்காத மாணவர்களைக் கூட அரசாங் கம் கைவிட்டுவிடவில்லை. திறந்த பல்கலைக்கழகங்களும், கல்வி



கலாசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்களின் நலனில் அதிக அக்கறை காட்டும் போது இன்றைய இளைஞர்கள் கற்பதற்காக என்று கூறி வெளிநாடுகளுக்கு வேலைதேடி வெளியேறிக்கொண்டிருக் கின்றார்கள். இவ்வாறான முறைகளில் எமது நாட்டின் இளைஞர் களான மனித மூலவளம் வெளியேறுவது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

பெற்றோர்களை எடுத்து ஆராய்ந்தால் பெற்றோர்களாலும் இன்றைய இளைஞர்கள் கைவிடப்படவில்லை. எத்தகைய தாழ்ந்த நிலையிலுள்ள குடும்பங்களிலும் பிள்ளைகளின் கல்விக்காகப் பெற்றோர்கள் தனது உழைப்பு முழுவதையும் செலவு செய்தாலும் இன்றைய இளைஞர்கள் நாட்டைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார் கள்.

இன்று நமது நாட்டின் அபிவிருத்தி நோக்கம் கருதி நிறுவப்பட்டுள்ள அரச-அரசசார்பற்ற நிறுவனங்களில் ஏராளமான இளைஞர்-யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகள் அதிகப்படியாக வழங்கப்பட்டு வருகின்றன. இன்று அநேகமாக பட்டதாரிகளுக்கு மட்டுமன்றி, தொண்டர் ஆசிரியர்களையும் நிரந்தர வேலைவாய்ப்பில் அமர்த்தியுள்ளார்கள். நமது நாட்டில் பலதரப்பட்ட புலமைப்பரிசில்கள் இளைஞர்களின் எதிர்கால நலனில் அக்கறை கொண்டு வழங்கப்படுகின்றது.

எது எப்படியிருந்தாலும் இன்றைய காலகட்டங்களில் 75 சதவீதமான இளைஞர்கள் நாட்டைவிட்டு ஆண்டொன்றுக்கு வெளியேறிக்கொண்டு வருகிறார்கள். இதில் 40வீதம் திரும்பி வந்து விட்டு வேலைக்கு முயற்சி செய்யாமல் இருக்கிறார்கள். மிகுதியானோர் அதாவது மேற்கத்திய நாடுகளுக்குச் சென்றோர்கள் அகதிகள் என்ற பெயரில் அங்கேயே பிரஜாவுரிமைபெற்று வாழ்வது வேதனைக்குரிய விடயம். இத்தகைய நடவடிக்கைகளுக்கு என்ன காரணம் என்று ஆராய்கையில் பின்வரும் உண்மைகள் பெறப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நமது நாட்டில் கற்ற கல்விக்கு ஏற்ற வேலைவாய்புக்கள் வழங்கப்படவில்லை என்றும்.
2. இளைஞர்களைக் கருத்திற் கொள்ளாது அதிகப்படியான வேலைவாய்ப்புகள் யுவதிகளுக்கு மாத்திரம் வழங்கப்படுகின்றமை.
3. பழைய இளைஞர்களின் புறக்கணிப்பும், வேலையில்லாத் திண்டாட்டமும்.
4. அதிகரித்து வரும் வறுமை.
5. சம்பள ஏற்றத்தாழ்வு

இக்காரணிகள் யாவும் இளைஞர்களின் விரக்தியான வெளியேற்றத்திற்குக் காரணமென கருத்துகள் கூறப்பட்டு வருகின்றன.

இவ்வாறான சின்னச் சின்னக் காரணங்களால் எமது நாட்டின் செழிப்பான மனிதவளம் வெளியேற்றப்படுவதால் நாட்டுக்கு அதிக அந்நியசெலவாணி கிடைத்தாலும். இளைஞர்களின் இழப்பை ஈடுசெய்ய முடியாது. அந்நிய நாட்டுக் கலாசாரங்கள் நமது நாட்டில் புகுத்தப்படுகின்றது.

இதனால் அதிகரித்துவரும் ஆட்கொல்லி நோய்கள் நாட்டை சீரழிய வைக்கின்றன. எனவே இவைகளையெல்லாம் கருத்திற் கொண்டு எமது இளைஞர்களின் நலனில் நாடு அதிகபடியான அக்கறை செலுத்துவது காலத்தின் தேவையாகும்.

இளைஞர்களின் தேவைகள் 80வீதம் வெற்றி கண்டால் எமது நாட்டின் இழப்பை ஓரளவேனும் நிவர்த்தி செய்ய முடியும் என்பது திண்ணம்.



32

## படிப்பே பாரமா....?

மெழுகுப் பலகை என வர்ணிக்கப்படும் சின்னஞ்சிறிய உள்ளங்களுக்கு படிப்பே ஒருபாரம் தான் எனப்பல தாய்மார்கள் அங்கலாய்க்கின்றார்கள்.

அதற்காகப் பாடத்திட்டத்தையும், ஆசிரியர்களையும் குறை கூறி நச்சரிக்கின்றார்கள். நம் சின்னஞ் சிறார்களுக்கு பாடத்திட்டங்களாலோ, ஆசிரியர்களாலோ சுமக்க முடியாத எச்சுமையுமே சுமத்தப் படவில்லை. முத்தான இருபத்திநான்கு மணி நேரத்தை சரியாக வகுத்துக் கொடுக்கத் தவறும் பெற்றோர்களினாலேயே அதிக திண்டாட்டம் ஏற்பட்டுள்ளது.

நம்மில் பெரும்பாலான பெற்றோருக்குக் காலையில் நேரத்திற்கு எழுந்திருக்கும் பழக்கமே இல்லை. நேரம் தாழ்த்தி எழுவதும் நேற்றைய சுமைகளோடு இன்றைய சுமையையும் அதிகப்படுத்திக் கொண்டு, வேலைப்பளு காரணமாக சதா பிள்ளைகளையும், ஆசிரியர்களையும், பாடத்திட்டத்தையும் குறை கூறிய வண்ணமே இருக்கிறார்கள்.

பாடத்திட்டங்கள் சற்று கடுமையானதாக இருக்கலாம். இன்றைய தொழில்சார் கல்விகள் யாவும் எதிர்கால நலன்கருதி ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையான திட்டங்களாகும். ஆகவே கல்வித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்திற்கமைய பெற்றோர்கள் தத்தமது பிள்ளைகளுக்கு கற்பதில் ஆர்வம் செலுத்துதல் வேண்டும்.

விடிந்தால் பாடசாலை, பிரத்தியேக நேரங்களிலும் மாணவர்கள் கற்றுக் கொள்வதால் வீணாகப் போகாது கல்வி. இன்றைய பாடத்திட்டங்கள் யாவுமே பல பொழுது போக்கு அம்சங்களையும், கலை நுட்பங்களையும் கொண்டுள்ளதால் மாணவர்களின் மன இறுக்கத்தை ஈடுசெய்ய வல்லன.

எனவே பெற்றோர்கள் தத்தமது பிள்ளைகளின் அறிவுத் திறனை வளர்க்க அவர்களை சுயமாக இயங்கவிட வேண்டும். பாடசாலை வேலைகளில் பெற்றோர் ஊக்கப்படுத்துவது தவிர, அவர்கள் அதை செய்து கொடுத்து பிள்ளைகளை சோம்பேறியாக்கக் கூடாது.

வல்லரசு நாடுகளை எடுத்து நோக்கினால், பிள்ளைகளுக்கு கருவில் இருக்கும் போதே ஊட்டப்படுவது கல்வி. எமது நாட்டைப் பொறுத்தவரையில் சின்னஞ்சிறார்கள் கஷ்டப்படுவது சொற்பம் என்றுதான் கூறமுடியும். பாடசாலை வேலைகளைச் செய்து கொடுப்பவர்கள் பெற்றோர்கள். எனவே பெற்றோருக்கு தனக்கே அதிக சுமையையாக்கிக் கொண்டு தினம் தினம் அங்கலாய்க்கிறார்கள். அபிவிருத்தியடைந்த நாடான ஜப்பானை எடுத்து நோக்கினால், அங்கு ஏழுவயது மாணவன் கற்பது மட்டுமன்றி பிரத்தியேக நேரங்களில் கைத்தொழிலிலும் ஈடுபடுவது அங்குள்ள பெற்றோர்களுக்குப் புதுமையல்ல.

பத்துப் பன்னிரண்டு வயதாகும்போது அவன் சுயமாக உழைத்து தனது வாழ்க்கைச் செலவை தானே தேடி நிறைவு செய்து கொள்வது பெற்றோருக்கு மகிழ்ச்சியே. இந்த அபிவிருத்தி எதனால் வந்தது...? கல்வியால் என்றால் அதை யாராலும் மறுக்க முடியாது.



புதிய பாடத்திட்டத்தைப் பொறுத்தவரையில் விளையாட்டு மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது. இதனைக் கருத்திற் கொண்டு இன்று எல்லாப் பாடசாலைகளிலும் விளையாட்டுக்கென்று ஒரு தனியாக இடத்தையும் வழங்கி மாணவர்களை ஊக்குவிப்பதனால் அவர்களின் உடல் நலமும் மிக மிக வலிமை பெறுகின்றது.

முத்தான நேரங்களை உல்லாசப் பயணங்களிலும், உறவினர் வீடுகளிலும் கழிக்காமல் மாணவர்களைப் பொறுப்போடு ஊக்கப்படுத்தினால் அவர்களால் வீட்டிற்கும், நாட்டிற்கும் நல்ல எதிர்காலம் அமையும்.

படிக்கும் காலம் எல்லா மாணவர்களுக்குக் கல்லும், முள்ளும் நிறைந்த பாலைவனமாகத்தான் இருக்கும். ஆனால் கல்வியால் மலரப் போகும் எதிர்காலம் பூக்கள் நிறைந்த சோலையாக மாறும்.

எனவே பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியில் கடுமையான அக்கறை செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

..................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33

# வாழ நினைத்தால் வாழலாம்.....

வாழ்க்கையின் நோக்கம் வாழ்தல் தான் என்று பதில் கூறுகிறவர்கள். யாவருமே வாழ்கிறோம் என்ற பெயரில் வாழ்ந்தும் வாழாமலும் குழப்பத்தில் ஆழ்ந்து கிடக்கிறார்கள். சிலருக்கு விரும்பியவாறு வாழ்க்கை அமைந்திருக்கிறது. ஆனால் பலருக்கு விருப்பத்திற்கு மாற்றமாய் அமைந்து விட்டால் இயந்திரம்போல கடமைக்காக வாழ்கிறார்கள்.

எப்படிப் பார்த்தாலும் வாழ்க்கையின் முழுமையும் யாருக்குமே கிடைப்பதில்லை. அதில் பகுதி தான் அனைவருக்கும் கிடைத்துள்ளது. வாழ்க்கையின் முழுமையை அடைந்து கொள்ள மனிதன் என்ன செய்ய வேண்டும்?

படிப்பு வாழ்க்கையைக் கற்றுத் தந்தாலும் அதனைப் பெற்றுத் தர மாட்டாது. உளவியல் ரீதியாக வாழ்க்கையை மனிதன் பெற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு நாம் நமது பார்வையை உள்பக்கம் திருப்ப வேண்டும். இதனால்தான் புரட்சிகரமான மாற்றத்தை வாழ்க்கையில் கொண்டுவர முடியும். அன்பும், மரணமுமே வாழ்க்கையில் முக்கிய பகுதியாகும். இவை இரண்டும் தான் வாழ்க்கையின் நோக்கத்தையே கற்றுத்தரவல்லன.



நாம் எல்லோருமே ஒரு வாழ்க்கையை விரும்பியோ, விரும்பாமலோ வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சிறிதளவில் அதன் அர்த்தம் தெரிந்தாலும் மிகுதி வாழ்க்கை அர்த்தமின்றி அலைந்தே கழிந்து விட்டது. மிகுதி வாழ்க்கையாவது அர்த்தமுள்ளதாக அமைய வேண்டுமென்றால் மனிதனின் சிந்திக்கும் முறை மாறுபட வேண்டும். உணர்வில் புதுமையான உற்சாகம் பிறக்க வேண்டும். ஆண்டுக்கணக்காய் நோக்கத்தில் இருந்த வாழ்க்கையை தேடிப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அன்றாட வாழ்க்கை மனிதனுக்கு வெறுப்பாகவே அமைகின்றது. காரணம் தனது வாழ்க்கையைப் பிறரின்வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் ஒழுங்கின்மையான மனநிலை ஏற்பட்டுள்ளமையாகும். இந்த வாழ்க்கை எப்படி இருக்கின்றது என்று நாம் பார்க்கிறதே தவிர, அது எப்படி இருக்க வேண்டும் என்று எண்ணுவதேயில்லை. வாழ்க்கையில் அன்பு ஒன்றே நிரந்தர மகிழ்ச்சி தரும். அன்பை அடைந்திருக்கும் போது தடையற்றவர்களாகி விடுகின்றோம். எதையும் சரியாகச் செய்கின்றோம். எதைச்செய்தாலும் அது சரியாகவே இருக்கும். அன்பு வழங்கக்கூடிய அழகுணர்வையும், இரக்கத்தையும் பெறுவதற்கு மனிதன் நேற்றைய துன்ப சிந்தனைகளை மறந்துவிட வேண்டும்.

மறுபிறவியிலாவது வாழ்க்கை நிம்மதியாக அமைய வேண்டுமெனப் பலரும் கூறிக்கொள்கிறார்கள். ஆனால், மரணத்துக்குப் பின் உள்ள வாழ்க்கைக்கு இம்மை தான் விளைநிலமென்பதை மறந்து விடுகின்றார்கள். மரணம் உண்மை அதன் பின்னுள்ள வாழ்வும் உண்மையானது. இதை உணர்ந்து செயற்படுவதே வாழ்தலின் நோக்கமாக அமைந்தால். இரு வாழ்க்கையையும் முழுமையாக அடைந்து கொள்ள முடியும் என்பது திண்ணம்.

.....................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34

# கசப்பா?
# துப்பி விடுங்கள்.

உடல் ரீதியான துன்பங்களை விடவும் மனரீதியான வருத்தங் களுக்கே அதிகம் ஆளாகி வருகிறார்கள். நேர்மையற்ற சமூகத்தில் வாழும்போது மனதளவில் திருப்தியோடும், மகிழ்ச்சியோடும் வாழ்வது மிகவும் பெரிய காரியமல்லவா? மனிதனின் பல பிரச்சினைகளும் துன்பங்களும் அடிமனதில் போய்ப் பதிந்து மனதை வருந்த வைக்கின்றது.

அருவருப்பான உலகில் வேதனை, துன்பம், முதுமை, மரணம் தவிர்த்து ஏனையவைகளைப் பெற்றுக்கொள்ள மனிதன் போராடித்தான் ஆகவேண்டும். மனதிலுள்ள கவலைகள் தீராமல் விவேகம் பிறப்பதில்லை. வருத்தங்களை ஒரு முடிவுக்குக் கொண்டுவராமல் மனிதனால் தூங்க முடியவில்லை. எவ்வளவு கற்றாலும் மெய்யறிவு தானாக வருவதில்லை.

பல உடல் நோய்களுக்கு முக்கிய காரணம் மனநோய்களே என்று வைத்திய நிபுணர்கள் கூறுகின்றார்கள். தேவையற்ற சில விஷயங்களை மனம் உள்வாங்கிக் கொள்ளுவதனாலேயே மன நோய்கள் வரக் காரணமாக அமைகின்றன.

அச்சம், துயரம், குழப்பம், கஷ்டம் இல்லாத வாழ்வு வேண்டு



மென்றால் நல்லதை மட்டும் உறிஞ்செடுக்கும் அன்னம் போல மனம் இருத்தல் அவசியமாகும். எனது கண்கள் வெளியுலகை நோக்குவது போல் உள்மனதையும் நோக்குதல் வேண்டும். தத்தமது மனதின் தன்மைகளை ஆராயவேண்டும். துன்பமான அனுபவங்களையும், ஏமாற்றங்களையும் மனதில் உள்வாங்காது அதன் படிப்பினைகளை மட்டும் சவாலாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மனிதர்கள் ஒவ்வொருவரும் பலவிதமானவர்கள். இவர்களோடு நம்மை நாமே ஒப்பிட்டுப் பார்த்து, தம்மைத்தானே உயர்த்தி அகம்பாவம் கொள்வதும், தன்னைத் தானே தாழ்த்திக்கொண்டு மனதைச் சிக்கல் படுத்திக் கொள்வதும் தவறு.

மனதுக்கு நிறைவு வேண்டுமென்றால் ஒப்பிட்டுப் பார்ப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். மனம் எப்போதும் எளிமையாக இருந்தால் நிறைந்ததாகவே தோன்றும். எளிமை தான் எப்போதுமே வலிமையானது என்பதை மறந்துவிடாதீர்கள். வீணான ஆசைகள், நிறைவேறாத இலட்சியங்கள், கிடைக்காத ஒன்றுக்காக ஏங்குதல், வீண் பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ளல் போன்றன யாவுமே மனதில் ஜீரணிக்க முடியாத கற்பாறைகள். இவற்றை விழுங்கிக் கொண்டு விக்கித் தவிக்காதீர்கள். இதனால் தான் எமது இளைய தலைமுறையினர்கள் போதைவஸ்துகளுக்கே அடிமையாகக் காரணமாக அமைகின்றது.

ருசியற்றவைகளை எதற்காக விழுங்க முயற்சிக்கின்றீர்கள்.... அவைகளைத் துப்பி விட்டால் நிம்மதியாக வாழலாம்.

......................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35

# நட்பு ஏன்?

நம்மில் பலருக்கு நண்பனோ அல்லது நண்பியோ தேவைப்படுவது எதற்காக....? சார்ந்திருக்க வேண்டும் என்பதற்காகவா? அல்லது எல்லா வேளைகளிலும் இன்பம், துன்பம் இரண்டிலும் பங்கு கொள்வதற்காகவா? அதுவும் இல்லையேல் உங்களுடைய தனிமை காரணமாக உருவாகும் வெறுமையை நிரப்பிக் கொள்வதற்காகவா அடுத்தவரை நீங்கள் பயன் படுத்திக்கொள்கிறீர்கள்? உங்கள் மனதில் தேவைக்குக் குறைவாக இருப்பதை மூடி மறைக்க நீங்கள் உபயோகிக்கின்ற மனிதனே நட்பாகின்றது. இவர்களை நண்பன் அல்லது நண்பி என அறிவுபூர்வமாக ஏற்றுக்கொண்டு விட்ட சில நாளிலே துரோகி என்றும் விரோதியென்றும் கூறி ஒதுக்கித் தள்ளி விட்டு அந்தத் தனிமையை நிவர்த்தி செய்துகொள்ள இன்னுமொரு நபரைப் பயன்படுத்தி வெறுமையைப் போக்கி ஆறுதல் அடைகின்றீர்கள். இதற்குப் பெயர்தான் நட்பா...?

முக்கியமாக நம் இளைய தலைமுறையினருக்கு மட்டுமே நட்பு அதிகம் தேவைப்படுகின்றது. தனிமையின் கொடுமை இளையவர்களுக்கு மட்டும் உள்ளதா? நம் மூத்தோர்கள், வயோதிபர்கள், பிள்ளைகள் வெளியில் சென்றால் நம்பெற்றோர்கள் கூட தனிமையில்தான் வாழ்கிறார்கள். ஆனால் அவர்கள் நட்பில் அலட்சியமாக இருக்கிறார்கள். வயது முதிர்ந்தோரை எவருமே



மதித்து நட்புக் கொள்வதும் இல்லை. அவர்களின் தனிமையும், வெறுமையும் அவர்களுக்குள்ளேயே அடங்கிப் போகின்றது. நம் இளைய தலைமுறையினர்கள் நட்புகளால் சாதித்தது எதுவுமே இல்லை. சீரழிந்து போனதுதான் மிகுதி. ஒன்றை மட்டும் நம் இளைய தலைமுறையினர்கள் சிந்திக்க வேண்டும். மற்றவர்களை நாம் சார்ந்திருப்பதனாலோ, அவர்களைப் பயன்படுத்தி எமது தனிமையைப் போக்கிக் கொள்வதனாலோ, யாருமே நமது உண்மையான நண்பன் ஆகிவிட முடியாது. நட்பு என்பது ஒரு சந்தர்ப்பம். இதைப்பயன்படுத்திக் கொண்ட பலருமே சந்தர்ப்பவாதிகளாக நெறி தவறிவிட்டார்கள்.

உண்மையான நட்பு இதயத்தை மட்டுமல்ல. மனித உணர்வுக ளையும் நேசிப்பதுதான். இதற்கு விதி விலக்குகளாக சரித்திரத்தில் யாருமே இல்லை. காலம் மாற நட்பும் மாறுகின்றது. இதுதான் உண்மை. ஒரு நல்ல நண்பன் பிரிகிறபோது வேதனைப்படுகின்றோம். காலப்போக்கில் புதிய நண்பனை உருவாக்கிக் கொள்கின்றோம். எல்லோர் வாழ்க்கையிலும் நட்புக்கு இதுதான் கதி. ஏன் நட்பை நம்புகிறீர். அதற்காக ஏங்குகிறீர். தனிமையில் வாழ முடியாதா? அது முடியும். வாழ்ந்து பாருங்கள். அதிலிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிக்க வேண்டாம். மனோரீதியாக நிம்மதி, அமைதி என்பவற்றைக் காண்பீர்கள். நான் யாரையுமே சார்ந்து வாழமாட்டேன் என்கின்ற மனவலிமையையும், நம்பிக்கையையும் சவாலாகக் கொள்வீர்கள். நட்புக்கள் யாவும் வேஷங்கள், கூடுவிட்டுக் கூடுதாவும் கோஷங்கள். உண்மையான நட்பு இறைவன் மீதும், பெற்றோர்கள் மீதும் கொள்ளும் நட்பு ஒன்றுதான். எல்லோருமே நம்மை விட்டுப் பிரிந்தாலும் எப்போதும் நம்கூடவே இருப்பவன் ஆண்டவன் ஒருவன் மட்டுமே. சிலரின் நட்புக்கள் வசதி இருக்கும் போது மட்டும் தேடிவரும். ஆனால் ஏழையாக இருந்தாலும் நமக்கு கருணையும், ஆறுதலும் அளிப்பது பெற்றோரின் நட்புத்தான். நட்புக்காக எதையுமே தியாகம் செய்ய முற்படுபவர்கள் யாரோ அவனே உண்மையான நண்பன். ஆனால் எல்லா நட்புகளுமே காலப்போக்கில் ஒரு முடிவுக்கு வந்து விடும். சுயநலமான நட்பு பகையை உண்டாக்கி வேடிக்கை பார்க்கும் என்பது தான் உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36 எங்கே தேடுகிறீர்கள்?

இன்றுள்ள பெரும்பாலான பெண்களின் வார்த்தை ஜாலங்களைக் கேட்டு, பல சமூகத்தவர்களும் வெட்கித் தலைகுனிந்து நிற்கிறார்கள். என்னாலும் சாதிக்க முடியும், எனது ஆற்றலையும் சமூகம் போற்றத்தான் போகின்றது. நான் யாரென சமூகத்திற்குக் காட்டத்தான் போகின்றேன் என்று பல பெண்களின் கோஷங்கள் சமூகங்களில் ஒலித்தவண்ணமே இருக்கின்றன. இது பலரையும் சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கின்றது.

இப்படித் தன்னைத்தானே புகழ்ந்துகொண்டு சமூக அந்தஸ்தை உத்தியோகத்தில் தேடி அலைந்து கொண்டிருப்பவர்கள் பெரிதாக எதைத் தான் சாதித்து விட்டார்கள். யாரோ ஒருத்தி விமான ஓட்டியாக இருப்பதைவைத்தும், ஜனாதிபதியாக இருப்பதை வைத்தும் சாதனை புரிந்ததாகக் கூறிவிட முடியாது. இதன் மறுபக்கத்தையும் தவறாது ஆராய வேண்டும். நான் சுயமாக உழைப்பேன். நான் யாரிலும் தங்கிவாழவோ, யாருக்கும் அடிமையாய் வாழவோ மாட்டேன் என்று கூறி வெளிக்கிட்டுச் சென்ற அமெரிக்கப் பெண்களின் வாழ்க்கை இன்று உத்தரவாதமற்றதாக அல்லல்படுகின்றது. உத்தியோகத்தால் தனது அந்தஸ்து உயர்ந்துவிடும் என்று பல பெண்கள் நினைக்கிறார்கள். இதற்கான காரணங்களை மனோ தத்துவ நிபுணர்கள் கூறுகையில் உத்தியோகம் தனது அந்தஸ்தை



மட்டுமன்றி, சுதந்திரத்தையும் தரவல்லது என்று பெண்கள் தவறாகப் புரிந்து நடந்து கொள்கிறார்கள் என்று கூறுகிறார்கள். பெண்களுக்கு உத்தியோகம் எதற்காக? பொருளாதார செலவுகளைச் சீர் செய்வதற்கு அதே உத்தியோகத்தால் தன்னுடைய வாழ்வு சீரழிந்து போவதைப் பெண்கள் அந்தஸ்தாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

எத்தகைய நோக்கம் என்றாலும் அதன் தேவையை உணர்ந்து செயற்படாவிட்டால் மனிதனின் செயற்கோலமே அற்பமாக மாறிவிடும் என்பதே உண்மை. பெண்ணின் அந்தஸ்தின் பாதி வீடு, கணவர், பிள்ளைகளில் தங்கியிருப்பதைப் பல பெண்கள் மறந்தே விடுகிறார்கள். தனது முக்கியமான கடமைகளை விட்டு விடுகிறார்கள். இத்தகைய பிற்போக்கான சிந்தனைகள் பல பெண்களின் குடும்ப வாழ்வை சீரழிய வைத்து விட்டது.

சமுதாயத்தின் கண்கள் பெண்கள். பெண் தடுமாறினால் வாழ்க்கை வண்டி தடம்புரண்டு விடும். குழந்தை வளர்ப்பு, கணவனின் கடமைகளில் இருந்து தவறும் பெண்களுக்கு வாழ்க்கையின் அந்தஸ்து கைசேதமாகிவிடும். இத்தகைய பெண்களால் வீடுகளில் பணிப்பெண்கள் அதிகரித்து பொருளாதாரத்தில் வரவுக்குப் பதிலாக செலவுகளே அதிகரிக்கும். தாய்மார்கள் குறைந்து விடுகிறார்கள். பிள்ளைகளுக்கு அன்பு என்பது புதிராகவே அமைகின்றது.

கணவனுக்கும், மனைவிக்கும் அந்தஸ்தில் ஏற்படும் போட்டிகள் வாழ்க்கையில் சுனாமியையே ஏற்படுத்திவிடும். அந்தஸ்து உயரும் போது பெண்களின் நடை, உடை பாவனையில் ஏற்படும் மாற்றம்.சமுதாய சீர்கேடுகளையும், பாலியல் வன்முறைகளையும் ஏற்படுத்த தூண்டுகோலாக அமையும். குழந்தைகளுக்குச் சீரிய வழிகாட்டல்கள் இன்றி அவர்கள் சீரழிவது மட்டுமன்றி குழந்தைகளின் ஆளுமை குன்றி தாழ்வுச் சிக்கல்களை ஏற்படுத்திவிடும். உத்தியோகத்தில் மட்டும் உத்வேகமாக வளரும் பெண்களுக்குப் பெரும்பாலும் வாழ்க்கையில் தோல்வி என்றே சரித்திரங்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் பெண்கள் அந்தஸ்தை எங்கு தேடுகிறார்களோ, அங்கேயே அழித்தும் கொள்கிறார்கள். பெற்றால் மட்டும் தாயாகிவிட முடியாது. அந்தஸ்தால் மட்டும் உயர்ந்து விடவும் முடியாது. தன் மகன் சான்றோர் எனக் கேட்ட தாயே கண்ணீர் வடிப்பாள். உண்மையில் இத்தகைய பெண்கள் தான் சமூகத்தால் போற்றக் கூடிய அந்தஸ்து மிக்கவர்கள்.



37

## விதியை நம்பாதீர்கள்.

புது யுகம் ஒன்று புறப்பட்டு வருகிறது! அதற்கு முதலில் உங்கள் மனதை நீங்கள் தயார்படுத்திக் கொள்ளுங்கள். தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும். உங்கள் மனம் என்றுமே பழையதை எண்ணி வருந்தும் நிலையில் இருந்தால் என்றுமே மனதுக்கு மகிழ்வு இருக்காது.

விதியை என்றுமே நம்பாதீர்கள் அது வாழ்க்கையில் தோல்வியைத் தான் வரவழைக்கும். மதியைத் தான் எப்போதும் நம்ப வேண்டும். அப்போது தான் மனிதனின் மனம் என்கின்ற சொத்து மகோன்னத நிலையை எய்தி மனதுக்கு மகிழ்வைத்தரும்.

எல்லா மனிதர்களுக்கும் நல்ல உழைப்பு வேண்டும். உழைக்க முடியாதவன் உலகில் வாழத்தகுதியற்றவன் மாத்திரமன்றி உள்ளத்தாலும் பலவீனமானவன். உழைப்பவர்களுக்கு ஓய்வும், அமைதியும், சரியான உறக்கமும் வேண்டும். அப்போது தான் மனதின் சிக்கல்கள் நீங்கி மகிழ்ச்சி ஏற்படும்.

வாழ்க்கையில் முன்னர் நிகழ்ந்த கசப்பான சம்பவங்களையெல்லாம் நினைத்து வருந்துவதனால் உள்ளத்தின் இன்ப உணர்வுகள் அற்றுப் போகின்றன. என்றுமே பழையவைகளை மறந்து புதியவைகளை அனுபவிப்பதில் தான் மன மகிழ்ச்சி தங்கியுள்ளது. சிலர் சுயநலத்தை மட்டுமே எண்ணிக்கொண்டு பிறர் நலம் நோக்காது வாழ்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய மகிழ்ச்சிகள் யாவும் நிரந்தரமானவையல்ல. மனம் என்பது பூரண மகிழ்ச்சி பெற வேண்டுமென்றால், தன்னைப்போல பிறர் மனதையும் நோக்க வேண்டும் குறுகிய கண்ணோட்டத்தை விட பரந்த கண்ணோட்டமே மனதுக்கு நிச்சயமாக மகிழ்வு தரும். பலருக்கும் உதவக் கூடிய மனம் வேண்டும். இத்தகைய மனப்பான்மை கூட மனதுக்கு மகிழ்வு தரும்.

வாழ்வில் ஏற்படும் சின்னச் சின்னப் பிரச்சினைகளையும் பெரிதுபடுத்திக் கொண்டு அங்கலாய்ப்பதால் மனம் குறுகி அதன் செழிப்புகள் அற்றுப் போய்விடுகின்றன. நல்ல பண்புகளை முதலில் தன்னிடம் உருவாக்கிக் கொண்ட பின்பு தான் அதைப் பிறரிடமும் எதிர்பார்க்க முடியும். என்றுமே மனமானது கொடுத்துப் பெறும் பண்புடையதாக இருந்தால் மனம் எப்போதும் மகிழ்வாகவே இருக்கும்.

தன்னைச் சார்ந்தோரை மாத்திரமன்றி எதிரிகளின் நல்ல பண்புகளைக் கூட போற்றுதல் வேண்டும். எதிரிக்குக் கூட துன்பம் வர வேண்டாம் எனப் பிரார்த்திக்கும் மனிதர்களுக்கு வாழ்க்கையில் துன்பமே இன்றி இன்பமாக வாழலாம்.

எத்தகைய விமர்சனங்களுக்காகவும் மன மகிழ்ச்சியை குழப்பிக் கொள்ள அவசியமில்லை. விமர்சனங்கள் உங்களை உலகுக்கு அறிமுகப்படுத்தும் விளம்பரங்களாக எண்ணிக் கொண்டு மனதை ஒரு முகப்படுத்தி சவாலை சமாளிக்க முற்படுவோமேயானால் மனம் என்றுமே மகிழ்வைத்தரும்.

கவலை தரும் சிந்தனைகளை விட்டு விடுங்கள். பிறருடைய பட்டம்,பதவி, பணம் இவைகளை எண்ணித் தன்னைத் தானே தாழ்வுபடுத்திக் கொள்ளாது தன்மன சிக்கல்கள் நீங்க சிந்தித்துச் செயல்பட்டால் மனம் என்றுமே நிரந்தர மகிழ்வை அடையும். அத்தோடு சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொண்டு, எல்லோருக்கும் நல்லவராக வாழ்ந்தால் மனதில் சஞ்சலமே இருக்காது.



## 38 மனம் விட்டுப் பேசுதல்.

தன்னைத் தானே மட்டும் நேசித்து வாழப்பக்குவம் கொண்ட மனமானது பிறரையம் நேசிக்க ஆரம்பிக்கும் போது மனம் விட்டுப் பேசும் கலை ஆரம்பமாகின்றது. தன்னைத் தானே நேசித்து வாழ்ந்த மனிதன் பிறரையும் நேசித்து வாழ்வதில் மனதளவில் பெரிதும் ஆறுதலடைகின்றான். துன்பத்தையும் இன்பத்தையும் ஒரு தனி மனிதனே அனுபவிப்பதை விட கலந்து அனுபவிப்பது இனிய ஒளிமய மான நட்புறவுகளுக்கு சாதகமாக அமையும். நட்புறவுகளில் மிக முக்கிய இடத்தை வகிப்பது மனம்விட்டுப் பேசும் அம்சமாகும். எங்கு மனம் விட்டுப் பேசுவது இல்லையோ அங்கு நட்புறவுகள் ஸ்திரமற்றதாக இருக்கும். மனம் விட்டுப் பேசுவதனாது கணவன்-மனைவி என்கின்ற முறையான உறவு முறைகளிலிருந்து ஆரம்பிக்கின்றது. குடும்பவாழ்வில் கணவன் மனைவிக்கு இடையில் மனம் விட்டுப் பேசுதல் என்பது மிகமிக அவசியமாகின்றது. மனம் விட்டும் பேசுவது குறையும் போது தான் குடும்ப வாழ்வில் பிரச்சினைகள் ஆரம்பமாக மூலகாரணியாக அமைகின்றது. மனம் விட்டுப் பேசாத கணவன் மனைவிக்கு இடையில் மனதளவில் பாரிய இடைவெளி ஒன்று இருப்பதைக் காணலாம். தம் வாழ்வு பற்றி ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாமல் வாழ்ந்தால் அந்த வாழ்க்கை உண்மையில் அர்த்தமற்றது. பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் மனம் விட்டுப் பேசுவது மிக மிக அவசியமாகின்றது. பெற்றோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கிடையேயுள்ள இனிய நட்புறவுகளானது மனம் விட்டுப் பேசுவதால் உறுதியாகின்றது. பெற்றோர் பிள்ளைகளின் தேவை, எதிர்பார்ப்புகளை அறிந்து கொள்ளவும் இது உதவுகின்றது பெற்றோரின் விருப்பு வெறுப்புக்களை பிள்ளைகளிடம் அன்பான அணுகுமுறை மூலம் மனம் விட்டுக்கூறுவதால் பிள்ளைகளுக்குப் பெற்றோர் ஒரு பாலமாக இருப்பார்கள். இரத்த உறவுகளுக்கு அப்பால் உள்ள நட் புள்ளங்களுடன் மனம் விட்டுப் பேசுவது என்பது நிதானம் காக்கப்பட வேண்டிய அம்சமாகும். ஏனென்றால் நட்புகளும் சில உறவு முறைகளும் எவ்வளவு உறுதியாக இருந்தாலும் நிலையானதல்ல. .நாம் எந்த மனிதனையும் நம்ப நடப்பதல்லாமல் நம்பி நடக்கக் கூடாது.

உடனே மனிதர்களை நம்பி நம்பிக்கையான விடயங்களை நாம் மனந்திறந்து பேசினால் நட்புக்கள் துண்டிக்கப்பட நேர்ந்தால் எமது அந்தரங்கங்கள் வெளிப்பட்டு பல மனஸ்தாபங்களை ஏற்படுத்திவிடும். இதனால் ஏற்படும் தகாத விளைவுகள் பல. பூவின் நடுவே விஷ நாகமும் அன்பின் நடுவே துரோகமும் தங்கியிருக்கும். என்று கவிஞன் கூறிய கருத்துக்கள் பொய்யானவையல்ல. சில மனிதர்கள் இருக்கிறார்கள் மிகவும் நல்லவர்கள் போல நடித்து எம் விடயங்களையெல்லாம் கக்க வைப்பார்கள், நாம் யாருடன் பேசினாலும் பேச்சில் நிதானம், வரம்பு அவசியம். மனம் திறந்து பேசுபவன் மனதில் எதுவும் தங்காது. ஆனால் அதைச் சேகரிக்கும் மனமானது பாம்பை விடவும் விஷமுள்ளது.மனதில் ஒன்றுமே இல்லாமல் பலரையும் உண்மையாக நேசிப்பவனுக்கே விரோதிகள் அதிகம். நாம் சிரித்தால் எம்முடன் சேர்ந்து சிரிக்கப்பலர் இருக்கிறார்கள். ஆனால் நாம் அழும் போது சேர்ந்து அழ ஒரே ஒருவர் மாத்திரம் இருந்தாலும் அவரையும் சீக்கிரமாக நம்பிவிடக்கூடாது. மனம் என்பது காண்பவர் வாசித்து விட்டுச் செல்லும் திறந்த புத்தகமாக இருப்பதை விட மூடிய பொக்கிஷமாக இருப்பது மேல். நம் மனதை நாம் பாதுகாத்தால் இன்னொருவர் மனம் தானாக பாதுகாக்கப்படும்.



# 39 காலம் கடந்த கை சேதம்.

காலம் அன்று நமக்கொரு கதை சொன்னது ''காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்று. அரத்தமுள்ள இப்பழமொழியை அன்றிருந்த வாத்தியார் கூட புரிய வைக்காததை சிந்திக்க உள்ளமே கலங்குகின்றது. காலம் பொன்னானது என்று மற்றுமொருவர் கூறினார் ஆனால் காலம் பொன்னிலும் மேலானது என்று நாம் கூறினால் அது மிகையில்லை. பொன்னை பணம் கொடுத்து வாங்கலாம் ஆனால் காலத்தை எதைக்கொடுத்தும் வாங்க முடியாதது தான் வேதனை. நாம் நடந்து வந்த பாதையில் கடந்து போன காலம் தொலைவில் இருந்து நம்மைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கின்றது. தொடர்ந்துசெல்லும் பாதையில் நாம் நடந்து செல்லாமல் அமர்ந்து கொண்டது காலம் செய்த குற்றமா? ஒவ்வொரு மனிதனினதும் இளமைக்காலம் அன்று ஓடிச்செல்லும் தெளிந்த நீரோடையாக இருந்தது. இதில் நீந்திச் செல்லாது மனிதன் சாக்கடையில் போய் தேங்கிக் கிடந்தது காலம் செய்த குற்றமா? துள்ளிக்குதித்தே காலத்தைத் தள்ளிக்களித்த இளசுகள் இன்று ஆமை போல உலாவித்திரிவது வேதனைக்குரிய விடயம்.

படிக்கின்ற காலம் படிக்க மறந்ததால் உழைக்கின்ற காலம் உழைப்பை வெறுக்கிறான். காதலித்தகாலம் கை பிடிக்க மறந்ததால் காலத்தின் கைசேதம் வாழ்வு கைதவறிப் போனது. இது விதியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதியென்று கூறி விதியை நொந்து கொள்ளும் மனிதர்கள் மதியிருந்தும் தோற்றுப் போனது காலம் செய்த குற்றமா? விதியை வரைந்தவனே மதியைக் கொடுத்திருக்கிறான், காலம் மனிதர்களுக்குக் கைகொடுக்கும் பாலம். அதைப் பற்றிப்பிடிக்காதது மனிதன் செய்த பாவம்.

கண்ணைக் கொடுத்தும் காட்சிகள் மறைத்தன. எண்ணம் இருந்தும் ஏவல்கள் தடுத்தன. நட்பு என்று கூறிக்கொண்டு நான்கு பேருடன் இருந்த மனிதனுக்கு வாழ்க்கையில் நல்லது எதுவும் நடக்கவுமில்லை. போலி உறவுகளும் பொய்யான மனிதர்களும் காலப் போக்கில் திசை மாறினர். சொந்தம் என்று பலர் இருந்தும் சொன்னது கேட்கவில்லை என்று கைவிட்டு விட்டார்கள்.

அறிந்த முகங்கள் பல இருந்தும். அறியாதவர்கள் போல கடந்து செல்கிறார்கள். உதவாக்கரை என்ற உபசரிப்பு உள்ளத்தை உலுக்கிவிடும். வாழ்க்கையையே நசுக்கிவிடும். ஆறுதல் தேடி மனிதன் மதுவிடம் தஞ்சமாகிறான் மனிதன் மனிதனுக்குக் கைகொடுக்க மாட்டான். பிறர்வாழ்வில் பொறாமைப்படும் மனிதர்கள் பிறர் தாழ்வில் இன்பம் காண்கின்றார்கள்.

தெய்வத்தைக் குறைகூறும் மனிதர்களுக்கு, தெய்வம் எதைத்தான் கொடுக்காமல் விட்டது உலகம் முழுவதும் அவன் வசமிருந்தும் நிறைவு இல்லாத மனசு மனிதனுக்கு. சென்றதெல்லாம் வருமோ அதைச்சிந்தனை தான் தருமோ? காலம் கடந்த கைசேதம் சுமக்கவேண்டிய மனிதன் இன்று சுமையாகக் கிடக்கின்றான். அன்று மனிதன் காலத்தை வரைந்த கோலம் தனக்குத் தானே வட்டமிட்டுக் கொண்டு அதிலேயே சுவரும் எழுப்பிவிட்டான். அதனால் மனிதனின் வாழ்க்கை ஒரே இடத்தில் குவிந்து கிடக்கும் மணற்றரையாகிவிட்டது. வாழ்ந்து வாழ்வளிக்க வேண்டிய மனிதன் தானும் வாழாது சூழவுள்ளவர்களையும் வாழவிடாது ஆட்டிப்படைக்கின்றான். இதுதான் காலம் கடந்த கைசேதம். காலத்தை மனிதன் கைவிட்டதால் மனிதனைக் கடந்து காலம் போய்விட்டது.



40

# வாழ்க்கைக்கு ஒரு ஏவுகணை...!

நீங்கள் எத்தகைய இலட்சியமோ, ஆசையோ திட்டமோ இல்லாமல் அலைந்து கொண்டிருப்பவர் அல்ல.

தொழிலில் இன்னும் பல படிகள் முன்னேற வேண்டும். இன்னும் அதிகமாக சம்பாதிக்க வேண்டும். வீட்டிற்கும் நாட்டிற்கும் நல்ல மதிப்புள்ள மனிதனாக வளர வேண்டும். என்கின்ற ஆசை நம் எல்லோர் மனதிலும் குறிக்கோளாக இருக்கும்.

நடைமுறை வாழ்க்கையிலுள்ள பணிகளை வெற்றிகரமாகத் திட்டமிடுதலின் மூலம்தான் மனிதனால் இந்தக் குறிக்கோளை அடைய முடியும். அன்றாடம் பகலிலும், இரவிலும் செய்து முடிக்க உங்கள் மனதில் பல பணிகள் ஞாபகமாக இருக்கலாம். அவைகளை மறந்து போகாது தினமும் ஒரு டயரியில் எழுதிவைத்துக் கொண்டு, அதைப்பற்றி சில நிமிடங்கள் அறிவுபூர்வமாக சிந்திக்க வேண்டும்.

உங்களுடைய லட்சியத்திற்கோ, வளர்ச்சிக்கோ, அன்றாட நடவடிக்கைகளுக்கோ சிக்கலைக் கொடுக்கும் பயனற்ற பணிகளை அதிலிருந்து அகற்றிவிட வேண்டும். இது மிக மிக கண்டிப்பான ஒழுங்குமுறையாகும். இதை சரியாகச் செய்து வந்தால் வாழ்க்கையில் என்றுமே வெற்றிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தப்பணி அவசியமில்லை என்று தவிர்க்க விரும்புகிறீர்களோ, அதை விட்டு விடுவதனால் உங்களுக்கு அதிக காலமும்,நேரமும், பணமும் மனவலிமையும் மிகுதியாகும். அவசியமற்ற தேவைகளிலிருந்து கண்டிப்பாக இருந்தால் உங்களுடைய வாழ்க்கை உங்களுக்கு மட்டுமே அடிமையாக இருக்கும்.

இத்தகைய கட்டுப்பாடுகள் கடுமையானவை என்று நீங்கள் நினைத்தால் நீங்கள் அடுத்தவனுக்கு அடிமையாக நேரிடும்.பயனற்ற நட்பு, போக்குவரத்து, விருந்துபசாரம், இவைகளால் இன்னும் பல பிரச்சினைகள் உருவாகுமே அன்றி வேறில்லை.

உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் மதிப்புள்ளவராகவும், பயன்மிக்கவராகவும் உங்களை ஆக்கிக்கொள்ள வேண்டும் என்றால் அன்றாட வாழ்க்கைத் திட்டமானது அவசியமான பணிகளில் மட்டும் இருத்தல் அவசியமாகும். பயனற்ற காரியங்களை ஏவுவதற்கு பலர் கூட வரலாம். அவர்கள் யாவருமே வெற்றிப்பாதையிலுள்ள தடைகளாக எண்ணிக் கொள்ளுங்கள். நாம் சிரிக்கும் போது கூடிச் சிரித்தவர்கள் கூட நாம் அழும்போது சேர்ந்து அழ மாட்டார்கள். இந்த உலகில் உறவுகள் வெறும் குலவுவதற்கும் விலகுவதற்கும் மட்டும்தான்.

மனிதனாகப் பிறந்தவன் பணத்தை மட்டுமல்ல பண்பான வாழ்க்கை நெறிகளையும் கற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான ஒரு வாழ்க்கைத்திட்டம் அவசியமாகும். வரவிற்கு ஏற்ப செலவுசெய்வது போல நாம் இந்த உலகில் பிறந்து இறப்பதிலும் ஒரு அர்த்தம் இருக்க வேண்டும். எதற்காக நாம் பிறந்தோமோ அந்தப் பணிகளை மட்டும் நாம் செய்தால் தான் வாழ்க்கையில் வெற்றி. வாழ்க்கையில் எமது செயல்களே அதன் மதிப்பை நிர்ணயிக்கின்றன. செயல்கள் யாவும் எண்ணங்களைப் பொறுத்து அமைவன. எண்ணங்களைத் திட்டமிட்டு செயல்களை கண்டிப்பாகச் செய்தால் நீங்களே உண்மையான மனிதன்.



41

# வேலை செய்யும் பெண்களின் பிரச்சினைகள் !

இன்றைய காலகட்டத்தில் ஆணும் பெண்ணும் தொழில் செய்தால் தான் ஓரளவேனும் பொருளாதார நெருக்கடியை ஈடு செய்ய முடியும்.

எந்தவொரு அரச, அரசசார்பற்ற நிறுவனத்தை எடுத்து நோக்கினாலும் வேலைகளில் ஆணுக்கும், பெண்ணுக்கும் தனியான இடம் ஒதுக்கப்படவில்லை. எங்குமே பரவலாக ஆண்களும், பெண்களும் சேர்ந்தே வேலை செய்வதால் பெண்கள் பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றார்கள்.

பல தனியார் நிறுவனங்களிலும் சரி, அரச நிறுவனங்களிலும் சரி பல மேலதிகாரிகளின் சிபாரிசின் பேரில் தகுதியற்றோரை வேலைக்கு அமர்த்துவதால் அங்கே தகுதியுடையோர் புறக்கணிக்கப்பட்டு பல பெண்கள் மன சஞ்சலங்களுக்கு ஆளாகி வருகிறார்கள்.

தொழில் புரியும் எந்த நிறுவனமானாலும் சரி, அங்கே இருக்கும் மேலதிகாரி கைம்பொம்மை போல அமர்ந்திருப்பாராயின் அந்த இடத்தில் ஏனையோரின் ஆதிக்கம் ஆட்சி புரிவதால் பல பெண்களின் வேலைகள் நசுக்கப்படுகின்றன. வேலை செய்யும் இடங்களில் பெண்களின் நடை, உடை பாவனைகளில் ஒரு கட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடு, கண்ணியம் இருக்க வேண்டும். இது பல பெண்களிடம் அறவே இல்லாததனால் ஆள்பாதி ஆடைபாதி என்று உடையணிந்து கொண்டு பெண் இனத்தின் கௌரவத்திற்கே இழுக்கைத் தேடி வைப்பது மட்டுமன்றி பலரின் தகாத விமர்சனங்களுக்கும் நச்சரிப்புக்கும் ஆளாகி வருகிறார்கள் பெண்கள்.

பல பெண்களின் பாசாங்கிற்கும், தரம்கெட்ட கொள்கைகளுக்கும் அடிமையாகும் ஆண் வர்க்கத்தினரால் ஏனைய பெண்களின் பதவிக்கே இழுக்காக அமைகின்றது.

எந்த நிறுவனங்களிலும் பழையவர்களுக்கு அவர்கள் அனுபவசாலிகள் என்பதால் கூடுதலான சலுகைகளும், மதிப்பும், மரியாதையும் வழங்கப்படுவது வழக்கம். ஆனால் சில நிறுவனங்களில் புதியவர்களின் வருகையால் பழையவர்களின் தரமும் தகுதியும் முகவரியின்றியே தொலைந்து போவது சகிக்க முடியாத விடயம்.

இன்று எங்குமே ஆணுக்குப் பெண் சரிநிகராக வேலை செய்தாலும் சம்பள விடயத்தில் மட்டும் பாரியதொரு ஏற்றத்தாழ்வு இருப்பது நியாயமற்ற விடயம் ஆகும்.

.....................



42

# தோல்விகளுக்கு நியாயம் இல்லை.

பரீட்சையில் தோல்வி என்றால் பாடங்கள் கஷ்டம், அல்லது ஆசிரியர் சரியில்லையென்ற நியாயம்.

தொழிலில் தோல்வி என்றால் கடன் என்ற நியாயம்! வாழ்க்கையில் தோல்வி என்றால் மனைவி சரியில்லை அல்லது கணவர் சரியில்லை என்ற நியாயம்! இப்படி அத்தனை தோல்விகளுக்கும் அத்தனை நியாயங்களையும் அநியாயமாக உருவாக்கிக் கொண்டு சதா உளறித் திரிந்து கொண்டிருக்கிறார்கள் பலர். உண்மை அதுவல்ல. வெற்றிக்கான பாதை என்பது தடைகள் நிரம்பியது, அத்துடன் யாவும் தோல்விகளுக்கான நியாயங்களல்ல.

வெற்றிபெற்ற எல்லா மனிதர்களையும் நோக்குங்கள். அனைவருமே தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்றி வெற்றிபெற்றவர்களாகும். தடைகள் எவ்வளவு பெரியவைகளோ வெற்றியும் பெரியதாகவே அமையும். இன்றுள்ள மனிதர்கள் இலட்சியத்தை நினைக்க முதலே அதிலுள்ள தடைகளை நினைத்துப் பயந்து விடுகின்றார்கள். பல நியாயங்களைக் கூறி அதைவிட்டு நகர்ந்து விடுகிறார்கள்.

கஷ்டமான ஒன்றை சகிப்பது தான் வெற்றி. தடைகள் தான் வெற்றி எனும் சக்தியை உற்பத்தி செய்யும் இயந்திரமாகும். உதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரணமாக ''ஒரு ஆறு மெதுவாக ஓடிக்கொண்டிருக்கிறது. அதனை மறித்து ஒரு தடையைக் கட்டினால் என்ன நடக்கும்? நீர் தேங்கி சமுத்திரமாகிவிடும். இந்த சமுத்திர நீர்தேக்கத்தினால் தான் அதி உயரிய மின்சக்தி பெறப்பட்டு நாட்டுக்கே வெளிச்சம் கிடைக்கின்றது." ஒரு குழந்தையைக் கூட நல்ல கட்டுப்பாட்டுடன் வளர்த்தால் அதுவே நாட்டுக்கு நல்ல பிரஜையாக அமையும். எமது வெற்றிப் பாதையிலுள்ள பலம், பலவீனம், வாய்ப்பு, ஆபத்து இவைகளை நாம் முன்கூட்டியே வரும் என்று அறிந்திராவிட்டாலும் வரும் என்கின்ற முன் எச்சரிக் கையுடன் நடந்து கொண்டால் தோல்விகளை எதிர்கொள்ள முடியும்.

வெற்றி என்பது அதிஷ்டத்தால் கிடைப்பதல்ல. ஆர்வத்தால் அவதிப்பட்டுக் கிடைப்பதாகும். எதுவந்தாலும் நாம் அதை எதிர் கொள்ளாது நியாயங்களை கூறுவது முறையல்ல.

சவால்கள் ஆகட்டும், தடைகள் ஆகட்டும் நீங்கள் எதிர்பார்ப் பதை விடவும் நஷ்டமாகட்டும். குறைகளும் தடைகளும் வருவது தான் வாழ்க்கையில் யாதார்த்தம். மனிதனுடைய உடலில் 60 லட்சம் உயிரணுக்கள் இருப்பது அளவற்ற சக்தியை உற்பத்தி செய்யத்தான். இவ்வாறான அளவற்ற சக்தி நமக்குள் உற்பத்தியாவது தோற்றுப் போகவா? தோல்வியை எதிர்கொள்வதற்கே.

வெற்றிப் பாதையில் பிடிவாதமாக இருப்பவனுக்குத் தான் தவிர்க்க முடியாத வெற்றி. தடைகளை மீறி உயர்வது, குறைபாடுகளை வென்று காட்டுவது, விமர்சனங்களை ஒழிப்பது இவைகள் உன்னதமான இலட்சியங்களாகும்.

தடைகளும், கறைகளும் இல்லாதிருந்தால் நீங்கள் பெறும் வெற்றி மிகச் சிறியதாகும். எனவே தோல்விகளுக்கு நியாயம் கூறாது வெற்றிக்கு வழியைத் தேடுங்கள்.

.......................



43

# நாம் நமக்குள் முழுமையானால்...

அன்பு என்பது ஓர் அற்புதமான தெய்வீகமானதொரு பண்பாக இருந்தாலும் இது சிலர் மனங்களில் தீராத வடுக்களை ஏற்படுத்தி விட்டுச்செல்கின்றது. அன்பு என்கின்ற சக்தியால் பலரின் வாழ்க்கையில் வீணான பிரச்சினைகள் ஏற்படுவது மட்டுமன்றி மனசுக்குள் ஓயாத புலம்பொலியுடன் உடற்சக்தியையும் விரயம் ஆக்குகின்றது.

அன்பு காதலாக மாறும்போதே மனித மனங்களில் இத்தகைய குழப்ப நிலை ஏற்படுகின்றது. மனித வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு மூளை இருக்கின்றது. அந்த இடம் ஒழுங்கற்றிருந்தால் ஒட்டுமொத்தமாக முழுவாழ்க்கையையுமே தாறுமாறாக அமைந்துவிடும். நாம் நமக்குள் வைத்திருப்பது தான் அன்பு. அதைக்காதலாக பிறருக்கு வழங்கும் போதுதான் துண்டாகிவிடுகின்றோம். எமது மனம் துண்டான பிறகு எம்மால் காதல் இன்றித் தனித்து வாழ முடியாத நிலை ஏற்படுகின்றது.

ஒவ்வொரு மனித மனங்களிலும் சின்னதாய் ஒரு சந்தேகம் இருக்கும். நாம் நமது வாழ்க்கையில் என்னதான் சந்தோஷத்தைக் காண்கிறோம் என்று அந்த சந்தோஷத்திற்காகவே பலர் காதலில் விழுகின்றனர். அதனால் இருக்கும் சந்தோஷமும் இல்லாத நிலையே மனித மனங்களுக்கு ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலுக்கு உத்தரவாதமில்லை என்று அறிந்த மனிதனும் காதலிக்கிறான். காதலில் பல முறை தோற்று அவஸ்தைப்பட்ட மனிதனும் மீண்டும் மீண்டும் காதலைத் தேடுகிறான். தனக்குள் உள்ள தனிமைக்கு அஞ்சியே அவ்வாறு செய்கின்றான். உண்மையில் மனிதன் காதலிக்க முன்னர் இத்தகைய தனிமை இருந்தது. ஆனால் அதை அவன் அனுபவிப்பது, காதலித்துக் கைவிட்ட பின்புதான். எனவே காதலிக்க முன்னர் தனக்குள் தான் முழுமையாக இருந்தால் இத்தகைய வெறுமையை அவன் அனுபவிக்கவில்லை. அவனின் மனம் துண்டான பிறகுதான் தனிமையையும், வெறுமையையும் அனுபவிக்கின்றான்.

உண்மையில் மனிதன் எதைக் காதலென்று கருதி தனிமையைத் தகர்க்கிறானோ அப்போதே அவனின் வாழ்வு வெறும் கிளர்ச்சியாக மாறுகின்றன. அது தற்காலிகமாக அவன் தனிமையைப் போக்கினாலும் இறுதியில் தனக்குள் தானே வெறுமையை ஏற்படுத்தி விடும்.

ஒரு நபரால் இன்னொருவரின் தனிமை மூடப்படும் என்பது அறிவீனம். இதுதான் தனிமையை விடவும் ஆபத்தானது. தனிமைக்குத் துணை ஒரு மருந்தல்ல. அதுவே விஷமாகவும் மாறுகின்றது.

அன்பு வெளியிலிருந்து வந்து உங்களை நிரப்புவதல்ல. உங்களின் மன இருப்பில் உள்ளதுதான் அன்பு. அது துண்டான பிறகுதான் துடிக்கிறீர்கள். உங்களுக்குள் நீங்கள்துண்டாவதுதான் காதலின் விபரீதம். அதுவே சில சமயங்களில் பலரை தற் கொலைக்கும் இட்டுச்செல்கின்றது. நமக்குள் இருக்கும் மகிழ்ச்சியே நமக்கு பாதி பலம். நாம் நமக்குள் முழுமையாக இருந்தால் எமது மனம் என்றுமே வெறுமையாகாது என்பது திண்ணம்.

.........................



44

# வாழ்க்கை என்பது அருமை...

வாழ்க்கை என்பது அருமை. அருமையில்லாத வாழ்வு அற்பமானது! அர்த்தமற்றது! ஆழமற்றது இந்த அருமையில் தான் கணவன் மனைவி இருவருக்குமிடைய புரிதலும், நேசமும், இதுமட்டுமன்றி இவற்றுக்கும் அப்பாற்பட்ட ஏதோ ஒன்றை வாழ்க்கை கொண்டிருக்கிறது.

நாம் நம்மில் பல தம்பதிகளைப் பார்க்கிறோம். அவர்களில் சிலர் பார்ப்பவர்களுக்கு அழகான நேசமுடையவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சிலரின் முகங்களின் சந்தோஷக் களையையே காணமுடியாதவாறு சலிப்படைந்தவர்களாக இருக்கிறார்கள். இதில் வியப்பதற்கு என்ன இருக்கிறது? சில தம்பதிகள் தம்மையே மையமாகக் கொண்டு சுயநல வாதிகளாக இருக்கிறார்கள். இதுவும் ஒரு வாழ்க்கைதான். சில கணவன் மனைவிக்கு இடையே உடல் ரீதியான உறவுகள் இருந்தாலும் மனரீதியான எந்தத்தொடர்பும் அற்றதாக இருக்கும்.

எடுத்ததற்கெல்லாம் சந்தேகப்படுகின்ற ஒரு கணவனிடம் மனைவிக்கு எப்படி இணக்கமான உறவுவரும்....? அதே போல தான் செய்வதே சரி என்று சாதிக்கும் ஒரு கணவரோடு ஒரு மனைவிக்கு எப்படி இணக்கம் வரும். மாறாக எடுத்ததற்கெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபப்படும் ஒரு மனைவியுடன் கணவனுக்கு எப்படி அன்பு வரும்? இருவருமே சித்தப்பிரமை பிடித்த தம்பதிகளாக வாழும்போது வீட்டிற்குள் மகிழ்ச்சியைக் காண்பது அரிது.

உண்மையான புருஷன் - மனைவி இணக்கத்தில் துன்பம், துயரம், தோல்விகள், இலாபம், நஷ்டம், சோகம் இவைகள் ஒட்டுமொத்தமாகப் பரிமாறப்படல் வேண்டும். ஒருவர் பற்றி ஒருவர் புரிந்துகொள்ள வேண்டும். அது தான் உண்மையான வாழ்க்கை.

அன்புக்கு என்றும் வயதாவதில்லை. சில தம்பதிகள் வயதான போதும் கூட ஒருவரில் ஒருவர் கரைந்து விடுகிறார்கள். இன்னும் சிலரோ நாம் இத்தனை காலம் வாழ்ந்தும் இன்னும் சந்தோஷமாக வாழவே இல்லை என்று அங்கலாய்கின்றார்கள். எத்தனை வருடங்கள் வாழ்ந்த போதும் ஆவல், கோபம், ஏமாற்றம், சந்தேகம், சொத்தாசை போட்டி இவைகள் இருக்கும் வாழ்க்கையில் உயிர் உள்ளவரை நிம்மதி இருக்காது.

வாழ்வை மனிதன் ரசிக்கவேண்டும், அதைருசிக்க வேண்டும். இரண்டும் இல்லாத விடத்தில் அதை மதிக்கவாவது வேண்டும். தானும் வாழ்ந்து மற்றவர்களையும் கலக்கமின்றி வாழ வைக்க வேண்டும். இது தான் வாழ்க்கை, மற்றவையாவும் மாயை.மரத்தின் வளர்ச்சி அழகானது. அதன் அழகு தென்படுவது பக்கத்தில் செழிப்பான மரங்கள் காட்சியளிப்பதனால்தான். அதே போன்று மனிதனின் வளர்ச்சி அழகாக இருக்கும், உறவுகள் பக்கத்தில் இருக்கும்வரை தான். வயதான போது கூட சில விவாகரத்துக்கள் சமூகத்தில் தலைவிரித்தாடுவது வியக்கத்தக்க விடயமல்ல. வயதானாலும் கூட கணவன் மனைவிக்கு இடையே பற்றுதல் ஏற்படவில்லை என்பது தான் இதற்குக் காரணம். வாழ்க்கை இன்பமாக அமைய வேண்டுமென்றால்.. கணவன் - மனைவி இருவரின் மனதிலும் நாம் ஒருவர் என்கின்ற எண்ணம் இருக்க வேண்டும். அந்த புனிதமான எண்ணமே குடும்ப வாழ்வை இன்பமாக்கும் ஆணிவேர் ஆகும்.

..................



45

# அந்த நாள் ஞாபகம்.

இன்று பெரும்பாலான மனிதர்கள் கடந்தகாலத்தில் தனக்கு ஏற்பட்ட துக்கமான நிகழ்வுகளையே ஞாபகப்படுத்திக்கொண்டு சதா அதிலே காலத்தைக் கழிக்கிறார்கள். அந்த நிகழ்வுகளின் தொடர்புகள் தான் நாம் இன்று வாழும் வாழ்க்கையென்று அங்கலாய்க்கின்றார்கள். அந்த சூழ்நிலைகள் தான் இன்றும் எம்மை பழிவாங்கிறது என்றும் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. அவைகளை நினைக்க வேண்டிய அவசியமும் இல்லை. அவைகளைக் கதைப்பதாலும், நினைப்பதாலும் காலமும், நேரமும், சக்தியும் வீணாவது மட்டுமன்றி மனக்குழப்பங்களும் ஏற்படுகின்றது.

அன்றைய பாரம்பரியமும், சுற்றுச்சூழலும் வழங்கியது தான் நமக்கு வாழ்க்கையென்று எண்ணிப் புலம்பாதீர்கள். அவை நமக்கு வழங்கிய வளங்களை நாம் பயன்படுத்திய விதத்தில்தான் எமது வாழ்வு அடங்கியிருக்கின்றது. அதன் படிதான் எமது இறந்தகாலம் அமைந்தது. ஆனால் எமது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் முற்றிலும் மாற்றியமைக்க எம்மால் முடியும். பழைய சம்பவங்களும், சூழ்நிலைகளும் உங்களைக் கட்டுப்படுத்தியது. அதற்கு கட்டுப்பட்டது உங்கள் தவறன்றி காலத்தின் தவறல்ல. உங்களுக்கு நிகழ்ந்த துன்பங்களைக் காரணம் காட்டியே எதிர்காலத்தை மாற்ற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லவா? எப்படித் தெரியுமா? வாழ்க்கையமைவது எமது செயல்களைப் பொறுத்தது. நீங்கள் உங்களுடைய செயல்களால் சூழ்நிலைகளை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளலாம்.

நீங்கள் நடந்துவந்த பாதையே வருத்தத்துடன் திரும்பிப் பார்த்துக்கொண்டே இருந்தால் வருங்காலப் பாதையில் உங்களால் பாதுகாப்புடனும் வேகத்துடனும் செல்ல முடியாது. கடந்த கால கரடு முரடான பாதையைத் திரும்பிப் பார்ப்பதால் எமது மனமும் கரடு முரடாகிப் போகின்றது. எனவே பழைய பாதையில் இருந்து நீங்கள் தொலைந்து விடுங்கள். அது அனுபவத்தில் மட்டுமே இருந்தால் அதுவே மிகுதி. நீங்கள் நிகழ்காலப்பாதையில் எவ்வளவு வேகமாகச் செல்கிறீர்களோ? அவ்வளவு வேகமாக பழைய பாதை மறைந்துவிடும்.

மனிதன் ஒரு இலட்சியத்தை நோக்கிச் செல்வதென்பது மலையுச்சியை எட்டுவது போன்றது . மலையுச்சியை நோக்கிச் செல்பவன் பாதி மலையில் இருந்து பள்ளத்தாக்கை நோக்குவது மிகவும் ஆபத்தானது. அதேபோன்றுதான் நிகழ்காலத்தில் இருந்து கொண்டு இறந்த காலத்தை நோக்குவதாகும். உங்களது பழைய அழியாச்சுவடுகளை ஊர் பேசட்டும். ஆனால் நீங்கள் அதை மறந்து விடுங்கள். உங்கள் அன்றைய நிலையை பலர் பேசட்டும் ஆனால் நீங்கள் நாளைய நிலையை மனதால் எண்ணிக்கொள்ளுங்கள். உங்கள் புகழை ஊர் பேசட்டும். ஆனால் நீங்கள் பேசாதீர்கள். நீங்கள் கடந்து வந்த பாதையை நீங்களே பார்த்துக் கொண்டிருப்பது தவறு.

அடுத்தவர் பார்த்து பிரமிக்கும் அளவு எதிர்காலத்தை நோக்கிச் செல்லுங்கள் கவலை தீரும். பழையவைகள் மறைந்து போகும்.



## 46 ஆசை அலைபோல..

நம்மில் வயதேறிப் போனவர்கள் நமக்காக வியக்கத்தக்க ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கிவிட்டுச் செல்லவில்லை. மாறாக அச்சமும், கொடுமையும் நிரம்பிய பயங்கர உலகையே உருவாக்கி விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

இங்கு யாராவது இன்னொருவருடன் சண்டையின்றி சமாதானமாகச் சொல்லவில்லை. மனிதர்கள் மட்டுமல்ல அவர்களின் கொள்கைகள் கூட ஒன்றுக்கொன்று எதிரானது. அடக்கியாளப் பார்ப் பவர்கள் பின்னே நமது வாழ்க்கை தொடர வேண்டும் என்பதால் எமது வாழ்க்கையும் அர்த்தமற்றதாகி விட்டது. திகைப்பூட்டுமளவு பாழ்பட்ட உலகில் நாம் பிறந்து வாழ்கிறோம்.

தேர்வுகளுக்கு தயார் செய்கின்ற வேலையை மட்டும் ஆசிரியர் கள் கற்றுத்தந்துவிட்டார்கள். வாழ்க்கை இதற்கு மாறாக வெறுப்பை யும், பிணி,பசி, அன்பு, வருத்தம், மரணம் இவைகளைக் கொண்டு வருகின்றது. இதனால் மனிதன் மனித அடையாளத்தையே தொலைத்து நிற்கின்றான்.

மனிதனின் அச்சத்துக்கான காரணம் ஆசைதான். உச்சாணிக் கொப்பில் உட்கார்ந்துகொள்ள எல்லோருக்குமே ஆசை தான்.ஒவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொருவருமே அதற்காகப் போராடி மடிகிறார்கள். ஆசை கொண்ட மனிதனிடம் அச்சம் இருக்கும். தான் என்னவாக ஆசைப்படுகிறோமோ அது கிடைக்காமலே போகும் என்கின்ற அச்சம் தான். எதைப்பெற்றிருந்த போதிலும் ஒரு நாள் எதுவுமே இல்லாததாகிவிடுவது இயற்கையின் நியதி. இந்த வார்த்தையின் அர்த்தத்தை யாருமே உணர்ந்து செயற்பட்டால் ஆசை வராது, அச்சமும் துழையாது. சமூகத்தில் பேசத்தெரிந்தவரும் அதிகாரம் பண்ணி மடிந்தவரும் வியக்கத்தக்கவர். சமைப்பவரும், தோட்டத்தொழிலாளரும் இழிவானவரா? இத்தகையவர்களைப் பார்க்கும் போது மனிதனின் உணர்வுகளும் கீழ்த்தரமாகிப் போவதை ஏன் உணருவதில்லை. தன்னுடைய மாணவர்களில் யாருக்கு எது சாத்தியம் என்பதைக் கண்டு பிடிக்க எவ்வளவு கடினமோ அதைவிடவும் இன்னொரு மனிதனின் நிலையை இன்னொரு மனிதனால் கண்டறிவது கடினம். விரும்பிச் செய்வது எதுவோ அது கூலி ஆயினும் மனதுக்கு நிம்மதியைத்தான் கொடுக்கும். விரும்பாமல் செய்வது மனதையே அழித்து விடும்.

நாம் செய்வதை நாம் நேசிக்க வேண்டும். அடுத்தவர் செய்வதை அல்ல. அங்கே போட்டி இருக்காது சண்டையும் இருக்காது. ஒரு புதிய உலகை நம்மால் தொற்றுவிக்க முடியும். பழைமையை ஒதுக்கித் தள்ளிவிடவும் முடியும். நம் மூத்தவர்களை விடவும் இளையவர்களின் பொறுப்பு மிகப் பெரியதாகும். ஒவ்வொரு வரிடமும் ஒவ்வொரு குறிக்கோள் இருக்க வேண்டும். குறிதவறினால் வாழ்க்கை தவறிவிடும். குறிக்கோளோடு மனிதன் பரீட்சயமடைந்தால் முழுமையின் ஒரு பகுதியாக மனிதன் ஆகிவிட முடியும்.

சுத்தமான காற்றை சுவாசிக்க வேண்டுமானால் நம் அறைகளைத் திறந்து அதற்கள் இருக்கும் அசுத்தமான காற்றை வெளியேற்ற வேண்டும். அதேபோன்று மனதுக்குள் இருக்கும் அசுத்தங் களை வெளியேற்றிவிட்டு சுத்தமான சுகமான இடத்திற்கு ஒதுங்கி விட வேண்டும். அதிக ஆசைதான் மனிதனின் அழுக்காகும். ஆசை துறந்தால் நிச்சயமாக அகிலம் சிறக்கும்.



47

# மன்னிப்பும், மருந்தாகும்.

இந்த உலகைக் கூர்ந்து கவனித்தால் இறைவனின் கருணையும் - நீதியும் சமனாக இருப்பதை அவதானிக்கலாம். காற்று மனிதனுக்கு சுவாசிக்க அத்தியவசியமாகின்றது என்பதற்காகவே இறைவன் உலகெங்கும் தென்றல் காற்றை உலாவ விட்டிருக்கின்றான். அதேபோல நீர் மனிதனுக்கு அத்திய வசியமானது. அதே நீரால் வரும் அழிவுகள் எத்தகையது? இவைகள் யாவுமே இறைவனின் சோதனைகள். இந்த உலகமே ஆக்கத்திலும் அழிவிலும் மிகுதியான சொற்பம் என்றுதான் கூற வேண்டும்.மனிதன் வாழ்க்கை கூட ஆக்கமும் அழிவும் சேர்ந்தது தான் ஒன்றை ஆக்கும் மனிதனாலே அதனை அழிக்கவும் முடிகிறது. வரவின் வழியில் தான் செலவும் வருகின்றது.

இந்த உலகில் துன்பம் மட்டுமல்ல மனிதனுக்கு இன்பமும் உண்டு இரண்டும் சேர்ந்தது தான் உலகவாழ்க்கை. இதை உணராது மீண்டும் மீண்டும் மனிதன் தப்பும் - தவறும் செய்கின்றான். தெரியாமல் செய்த தவறுக்காக அச்சுறுத்தி எச்சரிக்கை செய்து மன்னிக்கலாம். ஆனால் அதையே திரும்பத் திரும்பச் செய்தால் அது தப்பாக மாறுகின்றது. எனவே கருணையுள்ள மனிதனிடம் நீதி சரிசமனாக அமைவதே முறையாகும். எனவே மன்னிப்புதண்டனையாக மாறியது யார் செய்த குற்றம்? இந்த உலகில் மன்னிப்பும் - தண்டனையும் சமனாக இருந்தால் தான் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகை அழிவின் பாதையில் இருந்து ஓரளவேனும் காப்பாற்ற முடியும். இதுவே நியாயமான முறையாகும். மன்னிப்பது மாண்பு மிகு மனிதப் பண்பு மட்டுமல்ல தெய்வீகக் கோட்பாடும் கூட ஆனால இறைவன் கூட ஒருவன் தான் செய்த தவறை உணர்ந்து திருந்தி மன்றாடி மன்னிப்புக் கோருபவனுக்கே மன்னிப்புக் கொடுக்கிறான். எல்லோருக்குமல்ல.

தன் தவறை உணர்ந்து திருந்தும் மனிதனுக்கு மட்டும் தான் மன்னிப்பு மருந்தாகின்றது. ஆனால் தன்தவறை ஒத்துக்கொள்ளாத மனிதனை மன்னிப்பதால் யாருக்கு லாபம்? மென்மேலும் உலகில் சமூகவிரோதச் செயல்கள் ஆக்கிரமித்து குற்றங்களால் உலகம் வடிவமைக்கப்படுகின்றது. தவறு செய்பவர்களின் தொகையும் அதிகரித்து விடுகின்றது. உலகில் ஒருவனுக்கு வழங்கப்படும் இக்கட்டான தண்டனைகள் உலக சரித்திரத்திற்கே ஒரு பாடமாக அமையும். ஆனால் இன்று மனிதன் தவறுகளுக்கும் தண்டனைகளுக்கும் இயைபாக்கமடைந்தவனாக தற்கொலைப்படையில் சங்கமமாகி விட்டான். தவறுகளும்-தண்டனைகளும் வாழ்வின் பெறுமதியையே மறைத்துவிட்டது. தன்குற்றத்தால் தனக்குத்தானே மரணத்தைத் தழுவினாலும் ஈற்றில் எந்த மனிதனும் இறைவனிடமே சங்கமம் என்றவகையில் மனிதன் இறைவனால் தண்டிக்கப்படலாம். சிலர் பெருந்தன்மையுடன் பலரை மன்னித்து விடுவார்கள் தண்டனையை இறைவனுக்குச் சாட்டிவிட்டு இது பெரும்பாலும் சாபமேயன்றி வேறில்லை. மன்னிப்பு என்பது மனப்பூர்வமாக வழங்கப்படல் வேண்டும். அது தவறை உணர்ந்து திருந்துபவனுக்கு மட்டும். மனிதனை மனிதன் மன்னிப்பதால் பெருமை குறைந்து விடாது. அதே போல தண்டிப்பதால் சிறுமை வந்து விடாது. சிறுமையும், பெருமையும் மனதால் உருவாவதேயன்றி வேறில்லை. இறைவனின் கருணையும் - நீதியும் சமன் என்பது போல மனிதன்-மனிதனுடன் அன்புடனும் நீதியுடனும் இருந்தால் மன்னிப்பும்-தண்டனையும் எதற்கு? உங்கள் குற்றங்கள் மிக அருகில் இருக்கலாம். ஆனால் மன்னிப்பு இருப்பது வெகுதூரத்தில் அதைத் தேடியே அடைவதல்லாமல் தானாக வரமாட்டாது என்பது உறுதி.



48

# மன நிம்மதிக்கு என்ன விலை?

மன நிம்மதிக்காக மனிதன் எந்த விலையையும் கொடுக்கத் தயார். ஆனால், விலை கொடுத்தும் வாங்க முடியாதது மன நிம்மதி ஒன்றுதான். விலையால் மதிப்பிட முடியாதது மன அமைதி, மன நிம்மதி மட்டும் தான்.

மனம் என்பது எல்லைகள் அற்ற ஒரு உலகம். அது விழிப்புடன் இருந்தால் தான் எல்லை மீறாது நிதானத்துடனும், நிம்மதியுடனும், அமைதியுடனும் இருக்கும்.

நம்மில் சிலர் இருக்கிறார்கள். மன நிம்மதியையும், அமைதியையும் வேண்டி தனியாக வாழ ஆசைப்படுகிறார்கள். இன்னும் பலர் தன்னைச் சுற்றி மதில்கள் அமைத்துக் கொண்டு நிம்மதியாக வாழ்பவர்கள் போல வாழ்கிறார்கள். இருந்தாலும் அவர்களின் மனம் நிம்மதியோ, அமைதியோ காண மறுக்கின்றது.

கண்களுறங்கிய போதும் மனிதனது மனம் உறங்குவதில்லை. சிந்தனைக்கும், எண்ணங்களுக்கும் மனித மனதால் சுவர் எழுப்ப முடியவில்லை.

தியானத்தின் போது மனிதன் அமைதியாக இருப்பது போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றமளிக்கின்றான். ஆனால், தியானத்திலும் மனம் அமைதி காண மறுக்கின்றது. உள்ளக் குமுறல்களும், தேவைகளும், துன்பங்களும், மன்னிப்பின் மன்றாட்டங்களும் தியானத்தின் போதுதான் குமுறி எழுகின்றன. ஆனால், தியானத்தின் பின்னர் மனம் அமைதி, நிம்மதி காணும் என்பது தான் உண்மை. காரணம் தனது எல்லாப் பாரங்களையும் இறைவனிடமே இறக்கிவிட்டதென்ற பிரமிப்பில் மனம் நிம்மதியையும், அமைதியையும் தானாக வரவழைத்துக் கொள்ளும். அமைதி என்பது இதயத்துக்குரியது. மனதிற்கு அல்ல. இதயம் அமைதியானால் அதனூடாக மனம் அமைதி காண்பது திண்ணம்.

மன நிம்மதிக்காக பலர் தனிமையை விரும்புகிறார்கள். அவர்களின் இதயம் அமைதி பெறுகின்றது. ஆனால், மனதின் குமுறல்களை அதை சுமந்திருக்கும் மனிதனுக்கு மாத்திரமே தெரியும்.

தனிமையில் நேற்றைய நிலை அவ்வாறிருந்தது. ஆனால், இன்றைய நிலை இவ்வாறு இருக்கிறது. நாளைய நிலை எப்படி இருக்குமென கால அளவுகளால் சிந்திக்கும் போது தன் நிலையை தானே வெறுத்துப்போகும் சூழ்நிலை ஏற்பட்டு மனம் அமைதியையும், நிம்மதியையும் இழந்துவிடும்.

மனம் என்பது எதிலுமே அமைதியையும், நிம்மதியையும் காண மறுக்கின்றது. மனம் அறிவைத் தேடுவதில் அமைதி காணாது. அன்பைத் தேடுவதில் அமைதி காணாது. பணத்தைத் தேடுவதில் அமைதி காணாது. பிறரைப் பின்பற்றுவதில் மாத்திரமன்றி பிறரைத் தூற்றுவதிலும் அமைதி காணாது.

நிஜமான மன அமைதியும் மன நிம்மதியும் மிகவும் தூயதாக இருக்கும். அதற்கு மனமும், சூழலும் தனக்கு ஏற்றவாறு பக்குவப்பட வேண்டும். அதற்குப்பக்குவப்படுவது எப்படியென்றால் தன்னை அழகாய்க் காண்பவனுக்கு இந்த உலகமே அமைதி யாகவும்,



அழகாகவும் இருக்கும். தன்னைக் குறையாய்க் நினைப்பவ னுக்கு இந்த உலகமே நிம்மதியற்றதாய், அமைதியற்றதாய் இருக்கும்.

உன்னை நீ அறிந்தால் உனக்குள் நிம்மதி தானாக வரும். ஆதாரமற்ற கருத்துக்களும், இழிவு தரும் தொல்லைகளும் மனிதனின் மன நிம்மதியையும், அமைதியையும் குழைத்து விடுகின்றன.

அன்பு இருக்கும் இடத்தில் மன அமைதியிருக்கும். பணமும், பத்திரம், பதவியும் மன அமைதியைத் தர மாட்டாது. அறிவுரைகளும், அச்சமூட்டும் எச்சரிக்கைகளும் மனதைப் பக்குவப்படுத்தும். உங்கள் மனம் உங்களுக்குள் திட்டமிட்டுக் கொள்வதால் வருவதே மன அமைதி.

மனம் என்பது வாழ்க்கையின் தோல்விகளை ஏற்றுக்கொண்டு அமைதி காணும் அற்பப் பொருளல்ல. மாறாக வாழ்க்கையில் வரும் ஏற்றத்தாழ்வுகளில் மனம் சமநிலையற்றுப்போவதால் மனம் அமைதியையும், நிம்மதியையும் இழந்துவிடுகின்றது.

மனிதனின் புலன்கள் யாவும் மனிதனுக்கு நிரந்தரமற்ற அமைதியையே கொடுக்கின்றன. மனமானது நிரந்தர அமைதியை வேண்டியே நிம்மதியை இழந்து தவிக்கின்றது.

உண்மையான மன நிம்மதி இன்பத்திலும், துன்பத்திலும் வாழ்வுண்டு என எண்ணிக் கொண்டு திருப்தி காண்பதால் வரும் மன அமைதியாகும்.

வாழ்வின் மீதுள்ள பற்றுதலே மன அமைதியை வரவழைக்கும் தன்மை வாய்ந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக நாம் நமது வாழ்க்கையின் நோக்கம் பற்றியும், நம்மை நாமே உணர்ந்து செயற்பட்டால் மனம் எப்போதுமே அமைதியாகவும், நிம்மதியாகவும், நிதானமாகவும் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 49 ஆளுமை இன்றேல் தாழ்மை தான்!

ஆளுமை என்பது ஒவ்வொரு மனிதனிடமும் வெளிப்ப டையாகக் காணப்படும் விருப்பு வெறுப்புக்கள், மன எழுச்சிகள், திறமைகள், ஊக்கங்கள், சமூக நடத்தைகள், மனப்பான்மை என்பவற்றின் முழுமையான இயல்பே 'ஆளுமை' எனப்படுகிறது.

அதாவது உள்ளார்ந்த உடல், உள அமைப்பே ஆளுமை என அழைக்கப்படுகின்றது. சூழலுக்கு ஏற்ற வகையில் மனிதனின் ஆளுமை மாறுபடுகின்றது.

வீட்டிலும், பாடசாலையிலுமே ஆளுமைக்கு முதல் அத்திவாரம் இடப்படுகின்றது. வீட்டிலும், பாடசாலையிலும் பிள்ளைகள் செய்கின்ற குற்றச் செயல்களே ஆளுமையின் தாக்கத்தை விளைவிப்பனவாகும்.

ஒருவரின் மனம் கலவரமடையும் போதும், நெருக்கடிகள் ஏற்படும் போதும் அவன் குற்றச் செயல்களைச் செய்கின்றான்.

அளவுக்கு மிஞ்சிய கட்டுப்பாடற்ற சுதந்திரம் வழங்குதல் அல்லது அளவுக்கு மிஞ்சிய கண்டிப்பு; பிள்ளைகள் மீது அக்கரை அற்றிருத்தல், பிளளைகளின் உளவியல் தேவைகளைக் கண்டு



கொண்டு நிறைவேற்றாதிருத்தல் போன்ற இன்னோரன்ன காரணங்களால் சிறு வயது முதலே மனமுறிவுகளும், மன எழுச்சியும் ஏற்பட்டு மனிதனின் ஆளுமை குன்றி விடுகின்றது.

மேலும், மிதமான இயல்பூக்கங்களான பாலியலூாக்கம், திருட்டுக்கம், தன்னெடுப்பூக்கம் போன்றவற்றாலும் மனிதனின் ஆளுமை குன்றி விடுகின்றது.

தாழ்ந்து செல்லும் நுண்மதியும், செம்மதியும், கல்வியில் பின்னடைவு, திறமைகள் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்படுவதால் ஏற்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தாலும் மனிதனின் ஆளுமை குன்றி விடுகின்றது.

குற்றம் செய்யும் பெற்றோருக்குப் பிறந்த குழந்தைகளும் அவ்வாறே தனது ஆளுமையின் தாக்கத்தை தானாக உருவாக்கிக் கொள்ளும்.

மனித ஆளுமையானது பரம்பரைப் பண்பாகும். அதாவது தகப்பன் ஆளுமையுள்ளவராக இருந்தால் அதுவே பிள்ளையின் வாழ்க்கையிலும் ஆளுமையைத் தோற்றுவிக்கும். அல்லது தகப்பன் குற்றவாளியாக இருந்தால் அந்தப் பரம்பரையே குற்ற இயல்புகளைச் சார்ந்திருக்கும் தன்மை வாய்ந்ததாக அமையும்.

பெற்றோர், ஆசிரியர்கள் காட்டும் பாரபட்சங்கள், பிரிவுத் துயரங்கள் சிலவேளைகளில் மனவெழுச்சியை ஏற்படுத்தி ஆளுமையை நெறிபிரழ வைக்கும் என்பது உறுதி.

பின்வரும் இயல்புகள் ஆளுமை குன்றியதன் அடையாளங்களாகும். பாடசாலைக்கு வரவில் ஏற்படும் தளம்பல், பாடசாலையில் இருந்து விலகல், சகமாணவர்களிடம் இருந்து ஒதுங்குதல், முகமலர்ச்சி அற்ற நிலை, உள்ளத்தில் கலவரம், மன இறுக்கம், முரட்டுத்தனம், கோபம் வருதல், ஆசிரியரை வெறுத்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரை வெறுத்தல், கல்வியில் மந்த நிலை, பிறருடன் கதைக்காதிருத்தல், வீட்டைவிட்டு ஓடுதல், சகோதரங்களை வெறுத்தல் போன்றன ஆளுமையற்றவர்களின் குண அடையாளங்களாகும்.

இத்தகையவர்களை ஒதுக்கி விடாது மிகவும் கண்காணிப் புடனும், அனுசரணையுடனும் இருப்பது மிக மிக அவசியமாகும். ஆளுமையற்றவர்களை ஒதுக்கி விடுவது ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும். குற்ற உணர்வுகளை படிப்படியாக தளர்த்த முற்படல் அவசியமாகும்.

அன்பு, கணிப்பு, காப்பு, தேவைகளைக் கேட்டு நிறை வேற்றுதல், நல்லொழுக்கங்களைக் கற்றுக் கொடுத்தல் சிறந்த ஆளுமைக்கு சிறந்த பயிற்சிகளாகும்.

ஆளுமையற்றவர்களாலேயே இன்றைய சமுதாயம் சீரழிந்து வருகின்றது. இதை சமூகம் உணர்ந்து செயற்பட வேண்டும். குடும்பத்திலும், பாடசாலையிலும் ஆளுமையற்ற பிள்ளைகளை இனம்கண்டு அவர்களை ஊக்கப்படுத்தி சிறந்த சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

பிள்ளைகளைப் பேரறிஞர்களாகவோ, பெருங்குற்றவாளியா கவோ மாற்றியமைப்பது சூழலாகும். ஆளுமையற்ற சூழலை விட்டு ஒதுங்கி நடந்தால் சூழலின் தாக்கத்தை மாற்றியமைக்க முடியும்.

குற்றங்குறைகளை அவமானமின்றி மறைமுகமாக நிதானமாக எடுத்தக் கூறுவது மட்டுமன்றி அதன் பின்விளைவுகளையும் எடுத்துக் கூறினால் நிச்சயமாக அவர்களின் வாழ்வை சீரழிந்து போகாமல் சீராக்க முடியும்.



50

# படித்தால் மட்டும் போதுமா?

எல்லா மாணவர்களுக்கும் உள்ள பொதுவான பிரச்சினை சில பாடங்களை எத்தனை முறைகள் படித்தாலும் அவை சரியாக மனதில் பதிவதில்லை என்பது தான். இதன் பின்னணி மாணவர்கள் அப்பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் எழுதாமல் விட்டுவிடுவது தான். இதற்கான காரணம் என்ன என்பதை மாணவர்களாகிய நீங்கள் கண்டு கொண்டு கிரகிக்கும் ஆற்றலுக்கு குறுக்கே வருகின்ற காரணிகளை இனம் கண்டு கொண்டு அதனைத் தவிர்த்து நடந்தால் படிக்கும் பாடங்கள் ஒரு முறை கற்றாலே மனதில் பதியும்.

பாடங்களை ஆசிரியர்கள் கற்பிக்கும் போது அதை நினைவில் ஆழமாகப் பதிவதும், அலட்சியமாகப் பதியாமல் அதை விட்டு விடுவதும் மாணவர்களின் கையில் தான் தங்கியுள்ளது. மாணவர்களாகிய நீங்கள் பாடங்களில் வைத்திருக்கும் ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் பொறுத்து மனமும், மூளையும் 'பதிதல்' என்கின்ற செயற்பாட்டுக்கு ஈடுகொடுக்கின்றன.

உதாரணமாக, படம் ஒன்றை நாம் ஒருமுறை பார்க்கும் போதே அதன் முழுக்கதையும் மனதில் உடனே பதிவாகிவிடுகின்றது. திரும்பவும் அந்தக் காட்சிகளை எடுத்துக் கூற முடிகின்றது. ஆனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்த பாடங்களை அவ்வாறே மீட்டல் செய்வது கடினம் என்றால் படத்திற்குக் கொடுத்த ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் மாணவர்கள் படிப்பிற்குக் கொடுக்காததால் படிப்பு மனதில் பதியவில்லை.

நாம் கண்டு கேட்டு ரசிப்பவைகளைப் போலவே பாடங்களில் மனதை ஒருமுகப்படுத்துவதோடு, விரும்பிக் கற்கின்ற போது அது மனதில் பதியும். சில மாணவர்களுக்கு சில ஆசிரியர்களைக் கண்டாலே ஒரு வகையான வெறுப்பு. காரணம் கடுமையான கண்டிப்புக்கள் அல்லது வேறு தனிப்பட்ட காரணமாக இருக்கலாம். இத்தகைய ஆசிரியர்கள் கற்பிக்கும் போது மாணவர்களின் கவனம் வேறு திசைக்குப் போகின்றது. இன்னும் சில ஆசிரியர்கள் சதா குறிப்புக்களை எழுதக்கொடுப்பதன்றி, விளங்கப்படுத்துவதில் சோம்பேறித்தனம். இத்தகைய காரணங்களினால் மாணவர்களுக்குப் பாடங்கள் மீதான ஈர்ப்பும், ஆசையும் குறைகின்றது. ஆதனால் அப்பாடங்களில் பதிதல் குறைகின்றது.

அதிகமாக வாசித்தல், வாசிப்பதைக் கேட்டல், கற்றதில் தினமும் குறிப்பு எடுத்துக் கொள்ளுதல், பாடம் சம்பந்தப்பட்ட விடயங்களை தேடிக்கற்றுக் கொள்வது, அது பற்றி கலந்துரையாடுவது, சிந்தித்தல், சந்தேகங்களையும், கேள்விகளையும் கேட்டுக் கொண்டு விடைதேடுவது, செயல்படுத்தல் என்பன போன்றன ஈடுபாடுகளை ஏற்படுத்த வல்லன. அதன் மூலமாக பாடங்கள் ஆழமாகப்பதிகின்றன. மாணவர்களின் சிந்தனைகள் தெளிவாக இருக்க வேண்டும். உள்ளம் தூய்மையாக அமைய வேண்டும். மனம் படிப்புக்காக மட்டும் ஒருமுகப்பட வேண்டும். ஏனைய பிரச்சினைகள் பற்றி படிக்கின்ற போது கவனம் எடுக்காமல் இருந்தால் படிப்பது உடனே பதிந்துவிடும்.

சொல், செயல், சிந்தனை, நடத்தை இவைகளில் தெளிவிருந்தால் பதிதல் தெளிவாக அமையும்.



51

## யார் பரிபூரணவாதி?

எதைச் செய்தாலும் அதில் நூறு சதவீதம் வெற்றிபெற வேண்டுமென நினைப்பது, எவ்வளவு முயற்சித்தாலும் அதில் திருப்தி காணாமல் தவிப்பது, அடுத்தவர் தன் குறைகளைச் சுட்டிக் காட்டினால் அதை ஏற்றுக் கொள்ள மறுப்பது, நினைப்பது போல் காரியங்கள் நடக்காத சமயத்தில் தன்னைத்தானே பழிகூறி இழிவுபடுத்திக் கொள்வது, எக்காரியத்தையும் தானே தனியாக வெற்றிகரமாகச் செய்ய நினைப்பது தொட்டால் தோல்வி ஏற்படுமோ என்ற அச்சத்தில் எக்காரியத்தையும் தள்ளிப்போடுதல், மற்றவர்களின் பிழைகண்டு எதிர்ப்பவர்கள் இத்தகையோரையே பரிபூரணவாதி என அழைக்கப்படுவர்.

இத்தகைய மனோபாவம் பெரும்பாலானவர்களுக்கு இருப்பது சகஜம். அதிலும் கெட்டித்தனமான மனிதர்களிடமே இருப்பது அதிகம்.

முயற்சித்தவைகளில் தோல்வி ஏற்பட்டால் தன்னைத்தானே தேற்றிக் கொள்வது தவறு. ஆனால், குறையற்றவராக சிறந்து விளங்குவதில் எந்தத் தவறுமே இல்லை.

குடும்ப அழுத்தம், சமுதாய அழுத்தம், கல்வி அழுத்தம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரை அழுத்தம், மீடியா அழுத்தம், போட்டி அழுத்தம், பொறாமை அழுத்தம் காரணமாக மனிதனின் மனதில் பரிபூரணவாதம் உந்தப்படுகிறது.

முயன்று தோல்வி காணும் போதும், சில விடயங்களை தோல்வி வருமா என்ற அச்சத்தில் விட்டு விடும் போதும் மனதில் மன எழுச்சி ஏற்பட்டுத் தீராத கவலையையும், குற்ற உணர்வையும் தன்னகத்தே தோற்றுவிக்கின்றன.

சிலர் ஓய்வின்றி உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து வரும் நஷ்டங்கள் மன உழைச்சலை ஏற்படுத்தி விடுகின்றன. சிலர் அயராது கண்விழித்துப் படிக்கிறார்கள். எதிர்பார்த்த பெறுபேறு இல்லாவிட்டால் துன்பத்தில் தவிக்கிறார்கள். இறுதியில் எதிர்பார்புகள் வாழ்க்கையையே சீரழிந்து விடுகின்றது பரிபூரணவாதம் சிலவேளை எதிர்பாராத எதிர்வினைகளையே ஏற்படுத்திவிடும்.

அடுத்தவரைவிட தன்னை நிகரற்றவராக உருவாக்கிக் கொள்ள ஒப்பிடும் பரிபூரணவாதமானது இன்னும் பல அர்த்தங்களை சுமந்து கொண்டுள்ளது.

இத்தகைய பரிபூரணம் வாழ்க்கைக்கு நியாயமற்றது. எட்ட முடியாத இலக்கு வைப்பதும், எட்ட முடியாத போது தன்னைத்தானே நொந்து கொள்வதும், ஏமாற்றத்தில் மன அழுத்தத்தை ஏற்படுத்திக் கொண்டு ஆளுமையை இழந்துவிடுவதும் தவறு.

எதிலும் நூறு சதவீதம் நாம் நினைப்பது நடக்க வேண்டும் என எதிர்பார்ப்பது தவறு. நாம் செய்யும் எக்காரியமானாலும் அதில் தவறின்றி, பிழையின்றி, முரண்பாடில்லாமல் செய்ய எவராலும் முடியாது.

இறைவன் மாத்திரமே பரிபூரண சக்தியுள்ளவனாக இருப்பதைப் போல வேறு யாராலும் இருக்க முடியாது. சில



பரிபூரணவாதிகள் தனக்கு வழங்கப்படும் பொறுப்புக்களை ஏற்பதில்லை. காரணம் அதை கச்சிதமாக செய்து முடிக்க முடியுமோ என்ற அச்சத்தில் மறுத்துவிடுகிறார்கள்.

பரிபூரணவாதியாய் இருக்கும் ஒருவருக்கு கோபம் விரைவாக ஏற்படும். தாழ்வு மனப்பான்மை குற்ற உணர்வு ஏற்படும். தன் மீது தனக்குள்ள விசுவாசம் தானாகக் குன்றிவிடும்.

எனவே, எதிலும் நூறு சதவீதம் கரெக்ட்டாக இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பது கேட்டையே விளைவிக்கும். அது மனதிலும் உடலிலும் உள்ள ஆரோக்கியத்தை இடிக்க வைக்கும். பற்பல மன வியாதிகளைத் தோற்றுவிக்கும்.

எனவே, பரிபூரணவாதியாக மனிதன் தன்னைத் தானே பிறருக்கு நிகரற்றவராக ஆக்கிக் கொள்ள முயற்சிக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52

## மாசற்ற மனமே

உலகில் பிறந்திருக்கும் ஒவ்வொரு மனிதனதும் அன்றாட வாழ்க்கையில் பூரணத்துவம் அடையாத மன நிலையுடன் ஜீவிப்பதைக் காண முடிகின்றது.

எல்லோர் மனதிலும் பல துன்பங்களும், துயரங்களும், தேவைகளும், மோதல்களும் ஒட்டியே இருக்கின்றன. இவைகளிலிருந்து ஆழ்ந்த மாற்றம் பெற வேண்டும் என்று ஒவ்வொரு மனிதனும் பிரார்த்திப்பது சகஜம்.

ஒவ்வொரு மனிதனும் உலகில் மன சஞ்சலங்களின்றி அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழ வேண்டும் என்றால் அவர்களின் மனங்களில் நம்பிக்கையூட்டக்கூடிய வகையில் மனம் சார்ந்த மாற்றமும் உணர்வு சார்ந்த மாற்றமும் அடைய வேண்டும்.

மனிதனின் வேதனைகள் யாவுமே அவனது மூளையையும், இதயத்தையும் அழுத்திக்கொண்டேயிருக்கும் மிகவும் கொடூரமான பொறியாகும்.

இவ்வாறு மூளையும், மனமும் தொடர்ந்து அழுத்தப்படுமாயின் அது தனது இயல்பு நிலையை சீர்குலைத்துவிடும். எனவே, ஒவ்வொரு



மனிதனும் மனமாற்றத்தையும், சிந்தனைமாற்றத்தையும் அடைய முற்படவேண்டும்.

மனிதனின் வயது ஏற ஏற மூளையில் அழுத்தத்தால் ஏற்படும் சிதைவுகளையும், அழிவுகளையும் தவிர்க்க முடியாததாகும்.

இவ்வாறு துன்பம், துயரங்களால் சிதைவுபட்ட மூளை மாயையில் சிக்கிக் கொள்ளும். அப்போது அந்த மனிதனால் உற்சாகமாகவும், அசலாகவும், தெளிவாகவும் வாழ முடியாது. வாழ்வு இருண்டதாக மாறிவிடும். மனித மூளையும் மனமுமானது மாற்றம் பெற முடியுமாக அமைந்தால் தான் மாசற்றதாக அமையும். உடனுக்குடன் துன்பங்களை மனிதன் மறந்துவிட வேண்டும்.

இந்த உலகை ஒவ்வொரு மனிதனும் கூர்ந்து கவனித்துப் பார்க்க வேண்டும். உள்ளுக்குள் உங்கள் மனமும், மூளையும் என்ன சொல்கிறது என அவதானிக்க வேண்டும். உள்ளம் கூறுபவைகள் யாவும் செயலில் சாத்தியமாகக் கூடியதா என்பதை சிந்திக்க வேண்டும்.

ஒரு முகப்பட்ட சிந்தனைகளே மனித மூளைக்கு அவசியமாகின்றன. ஏற்பதும், மறுப்பதும், நிந்திப்பதுமாக இருக்கக் கூடாது.

மனதிலுள்ள ஆசைகள், கோபங்கள், உணர்ச்சிகள், பேராசை, பொறாமை இவைகள் யாவும் மனதில் நிலைத்திருப்பவையல்ல. நிலைக்கவும் கூடாது. இவைகள் மாறவேண்டும். அதனால் மனிதன் மாறுகின்றான். உள்ளமும் பரிசுத்தமடைகின்றது. மனிதனின் உள்ளமும், மூளையுமானது கற்கும் திறன் மூலமும், நல்ல விடயங்களைக் கேட்டறிதல் மூலமும் தூய்மையடைகின்றது.

வாழ்க்கையில் ஏற்படும் பல குறைபாடுகளால் மனம் குழம்பி அதனால் மூளை சிதைவடைந்து போகின்றது. வாழ்வென்பது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களமாகும். அதில் ஒவ்வொரு மனிதனும் போராடித்தான் ஜெயிக்க முடியும். போராட்டத்தில் மனமோ, மூளையோ ஓய்வுபெறுவதில்லை.

தியானத்தில் மட்டும்தான் மனமும் மூளையும் ஓய்வு பெறுகின்றது.

எனவே, மனம் மாசற்றதாக அமைய வேண்டுமென்றால் ஒவ்வொரு நாளும் தியானம் அவசியமாகும். தியானத்தின் மூலமே மனதின் இயக்கமும், மூளையின் இயக்கமும் ஒரு முடிவுக்கு வந்துவிடும்.

மனதிலுறுதியும், கட்டுப்பாடும் இல்லாமல் வாழ்க்கையை மனிதனால் வாழ முடியாது. கட்டுப்படுவதும், கட்டுப்படுத்தப்படுகிறதும் மனமும், மூளையும் செய்யும் விந்தையாகும். ஒவ்வொரு மனிதனிடமும் தான் விரும்பியதை தேர்ந்தெடுக்கும் ஆசை இருக்கும். ஆனால், ஆசைகளில் தெளிவாக இருந்தால் இதுவா? அதுவா என்ற தெரிவு இருக்க இடமில்லை.

எனவே, மனிதன் தனது தேர்வு முறையில் கட்டுப்பாடாக இருந்தால் மனக்குழப்பங்கள் ஏற்பட வாய்ப்பே இல்லை. எனவே மனிதனது மூளையானது ஒரு மெசின் போன்றது. அது சதா இயங்கிக்கொண்டேயிருக்கும். சிந்தனைகளைப் பதிவு செய்வதும், பிறகு அழிப்பதுமே அதன் இயக்கச் சக்தியாகும். அதன் வேலைகளில் ஒழுங்குமுறை இருந்தால் தான் மனிதனால் மனிதனாக வாழ முடியும்.

மனித மூளையின் ஒழுங்கு முறையானது ரயில் தண்டவாளம் போன்றது. எத்தகைய தழம்பல்கள் வந்த போதும் ரயில் தண்டவாளத்தைவிட்டு அகலாது. மூளையின் ஒழுங்குமுறை என்பது தீய சிந்தனைகளை எதிர்த்து நிற்பதாகும்.

நீங்கள் கேட்பதில், கற்பதில், காண்பதில் கவனம் இருந்தால்



- அங்கே தீய சிந்தனைகளுக்கு இடமில்லாதிருக்கும்.
- மனம் மாசற்றதாக இருக்கும்.
- மனிதனிடமே அமைதி இருக்கும்.
- அன்பு, இரக்கம் இருக்கும்.
- பரந்த மனப்பான்மையிருக்கும்.

அன்பு என்பது உணர்ச்சியல்ல. புலன்களால் உணரப்படுவதுமல்ல. உங்களால் உயிருள்ள, உயிரற்ற பொருள் மீதும் அன்பு வைக்கலாம்.

பேராவல் கொண்டு பணம், பதவி என்று அழையும் மனிதனிடம் அன்பு இருப்பதில்லை. அன்பு இல்லாதவனிடத்தில் இரக்கமும் இருப்பதில்லை. இரக்கம் இருந்தால் மனதில் தெளிவு இருக்கும். இரக்கத்தினாலே உள்ளம் மெய்ப்பொருளையறியும். ஒவ்வொரு செயலிலும் தெளிவு இருக்கும்.

இத்தகைய மனிதர்களே உலகில் சகலராலும் ஆசிர்வதிக்கப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53

# பலமும், பலவீனமும்!

மனிதர்கள் பலவிதம் என்பது போல மனித மனங்களும் பலவிதம். தனக்கென்று ஓர் மனதை சுமந்திருக்கும் ஒரு மனிதனின் மனதில் கூட பல ரகங்கள் உண்டு.

காரணம் மனித சிந்தனைகள் இருவகைப்படுகின்றன. சிலநேரங்களில் அறிவுபூர்வமாக சிந்திக்கும் மனிதன், பல நேரங்களில் உணர்வுபூர்வமாகவும் சிந்திக்கிறான்.

இவ்வாறு மனிதனது சிந்தனையின் பாங்கு உணர்வுபூர்வமாகவும், அறிவுபூர்வமாகவும் மாறுபட மாறுபட மனித உள்ளத்தில் பலமும், பலவீனமும் மாறி மாறி மனிதனின் போக்கையே நேரத்துக்கும் காலத்துக்கும் தகுந்த மாதிரி மாற்றியமைக்கின்றது.

எந்தவொரு மனிதனுக்கும் இரண்டு பக்கங்கள். ஒன்று அவனது பலம், இன்னொன்று பலவீனம். எத்தகைய அறிவாளி, பலசாலியிடமும் ஒரு 'வீக் பொயின்ட்' உண்டு. அது தான் அவனது பலவீனம்.

எந்தவொரு பெண்ணும் தன்னை பலசாலி எனக் கூறினாலும், சில போது உள்ளத்தாலும், உடலாலும் பலவீனம் ஆகின்றாள்.



இவ்வாறு பலத்துக்கும், பலவீனத்திற்கும் ஆளாகாத மனிதனே இல்லை எனலாம். எந்த விடயமானாலும் சரி மனிதன் உணர்வு பூர்வமாக சிந்திப்பதே மனிதனிடமுள்ள பலவீனமாகும். மனித உள்ளங்கள் அன்பு, பாசம், நேசம், காதல், காமம், பணம் போன்றவைகளுக்கு அடிமையாகும் தன்மை வாய்ந்ததாகும்.

"பாறையிலும் நீர் சுரக்கும்" என்கிறார்கள். இந்தக் கருத்துக் கூட மனிதர்களின் பலவீனத்தை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. எப்படியான மனிதர்கள் கூட அன்புக்கு அடிமையாகி விடுகின்றார்கள். பெண்ணுக்கும், பொன்னுக்கும் அடிமையாகி விடுகின்றார்கள்.ஏன் பணத்துக்கும் கூட அடிமையாகி விடுகின்றார்கள். இது அம்மனிதனிடமுள்ள பலவீனமாகும்.

குடும்பம். மனைவி, மக்கள் என்றால் பாசம் இல்லாமலா போகும்.?இந்த வீக்னஸ்தான் நீதியையும் தடுமாற வைக்கின்றது. அசைக்க முடியாத எதையும் மனிதனிடமுள்ள பலவீனம் அசைத்து விடுகின்றது.

ஒரு பெண்ணின் ஒரு சொட்டுக் கண்ணீர் நூறு சொற்களை விட வலிமையானது என்கிறார்கள். இதன் கருத்து என்னவென்றால் பெண்களிடமுள்ள இந்த வீக்பொயின்ட் அதாவது அழுகையால் எதையுமே சாதிக்க முடியும் என்பதுதான்.

பெண்களுக்கு அழுகை பலவீனம் என்பது போல ஆண்களின் பலவீனம் பெண்ணாகும். பெண்களைக் கண்டவுடன் எப்படியான உயர்ந்த மனிதனுடனும் சற்றேனும் இழிந்து போகும் தன்மை இருக்கின்றது. இவ்வாறு ஒவ்வொரு மனிதனிடமும் ஒவ்வொரு அல்லது பற்பல பலவீனங்கள் இருக்கின்றன.

உண்மையான பலசாலியார் என்றால்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை பலசாலி என்று கூறிக் கொள்ளாதவன், இலைமறைக்காய் போல வாழும் திறமைசாலி, தோல்விகளைக் கண்டு துள்ளிப்பாயாது அந்தத் தோல்விகளால் பாடம் கற்றுக் கொள்பவன். தனக்கு வரும் சோதனைகளை சாதனையாக்கி கொள்பவன்.

அறிவுபூர்வமாக சிந்திப்பவனிடத்தே பலவீனம் இருப்பது அறிது. அன்பு, பாசம் இவைகளுக்கும் பட்டம், பதவி, பணம் இவைகளுக்கும் அப்பாற்பட்டது. ஒரு பலசாலியின் மனசு தன்னிடமுள்ள பலவீனம் எதுவோ அதை எதிராளி அறிந்து கொண்டால் அது தனக்கே வேட்டாக அமையும்.

இயற்கையிலே மனிதனுக்கு இறைவன் பலத்தையும், பலவீனத்தையும் கொடுத்திருக்கின்றார். ஆதலால் ஒவ்வொரு மனிதனும் சிந்தித்துச் செயற்பட்டால் பலமாக வாழலாம் என்பது திண்ணம்.



54

# அன்பான பேச்சு

மனிதனின் மனம் ஒரு விசித்திரமான கலவை. அதில் தான் மன ஆறுதல், அன்பு, கண்ணியம் போன்றவை குவிந்து காணப்படுவதுடன் அதில் துன்பம், மன உளைச்சல், வெறுப்பு, குரோதம் போன்றவையும் குவிந்து காணப்படுகின்றன.

இந்த மனதிலிருந்து மேற்குறிப்பிட்ட அத்தனையும் இன்னொரு மனிதனுக்குக் கொடுக்க முடியும். ஓர் அழகிய வாழ்க்கை நெறியானது மனதிலிருந்து உருவாகி நாவினால் வெளியாகும் அழகிய அன்பான வார்த்தைகளில் புலப்படுகிறது.

ஒரு மனிதனது மனதால் உண்டாகும் தூய்மையான வார்த்தைகளைவிட உலகில் வேறு எதுவுமே உயர்ந்தாக இல்லை. ஞானம், அழகிய உபதேசங்களை விட அறிவின் பசிக்கு ஆர்வம் ஊட்டக் கூடியவை வேறு எவ்வழியும் இல்லை. மனிதனுக்கு மனிதன் அழகான முறையில் உரையாடுவது மனிதனை சிந்திக்க வைக்கின்றன. வார்த்தைகளில் கடுகடுப்பும், கர்வமும் முகத்தில் இருளை உண்டுபண்ணுவதோடு வெறுப்பையும் ஏற்படுத்துகின்றன.

மனிதர்களிடத்தில் பரவலான சிந்தனை மாற்றத்தைத் தருவது இன்முகமும், இனிமையான வார்தைகளும் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பவாழ்க்கையில் கணவன், மனைவி, பிள்ளைகளுக் கிடையில் கடுமையான வார்த்தைகளின் ஆற்றாமை காரணமாக வாழ்வு வெறுப்படைகிறது. விரக்தியடைகிறது. மனிதனின் உணர்ச்சியும் அன்பும் அற்றுப் போய் விடுகின்றது. ஆவேசம் ஆட்சி செய்யத் தொடங்குவதால் கடமைக்காக வாழ்வார்கள்.

எந்தவொரு மனிதனுக்கும் அழகிய வார்த்தைகளால் பதில் கூற வேண்டும். அன்பான அணுகுமுறையான பேச்சுக்களால் தான் பகைவனும் நண்பன் ஆகிவிடுகின்றான். உள்ளத்தில் பகைமையை யும், வெறுப்புணர்வையும் இல்லாமல் செய்வது இனிய சொல்லும், இன்முகமுமேயாகும்.

இந்த அழகான பேச்சானது ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவன் அருளியுள்ள அருட்கொடையாகும். இதை மனிதன் உணர்ந்து பயன்படுத்தவேண்டும். நல்ல மனிதர்களிடமும் பொறுமைசாலிகளிடமும், அறிஞர்களிடமுமே அழகிய அன்பான வார்ததைகளின் முன்மாதிரிகள் காணப்படுகின்றன. வார்த்தைகளே ஒரு மனிதனின் ஆளுமையையும், மனதையும் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. வார்த்தைகளால் முரண்டுபண்ணி, தர்க்கித்து, அடுத்தவரின் பேச்சுக்கு மதிப்பளியாது சத்தத்துடன் பேசுபவனே அநேகரது வெறுப்புக்குள்ளாகிப் போகிறான். இப்படி வார்த்தைகளில் கடுகடுப்பு உள்ளவர்களில் வாழ்க்கைமுறையும் குழந்தை வளர்ப்புகளும் மிகவும் மோசமானதாக இருக்கும்.

ஒருவரில் முரட்டுத்தனமான வாழ்க்கையானது பலரை சிந்திக்க வைப்பதோடு சிரிக்கவும் வைக்கின்றது. இப்படியான குன முள்ளவர்களை உலகம் மட்டம் தட்டி விடுகின்றது. சொன்ன சொல்லையும் எறிந்த கல்லையும் திருப்பி எடுக்க முடியாது. நெருப்பினால் சுட்டவடுவை விட நாவினால் சுட்டவடு ஆறாது. எனவே வார்த்தைகளில் அழகு அவசியமாகும். சிந்தித்து பேசுங்கள் பேசிவிட்டுச் சிந்திக்காதீர்கள்.



## 55 பெற்றோரின் நலன் பேணல்.

மனிதர்கள் எவரும் பெற்றோரின்றிப் பிரசவிக்கப்படவில்லை. குடும்பத்தின் முன்னோடி பெற்றோர்கள் என்றால் அது மிகையாகாது.

ஒரு நல்ல குடும்பத்தின் மிகச் சிறந்த அடையாளங்களில் ஒன்று பெற்ற பிள்ளைகள் யாவரும் பெற்றோரின் நலனில் அக்கறை கொண்டு அவர்கள் இருக்கும் வரை அவர்களுக்கு உதவிகள் ஒத்தாசைகள் புரிவதாகும்.

இத்தகைய நலன் பேணல் எந்தக் குடும்பத்தில் அற்றுப் போகுமோ அந்தக் குடும்பத்தின் நிம்மதியும், சாந்தமும் அற்றுப்போய் விடும். எந்த ஒரு மனிதனும் தனது வாழ்க்கையில் பூரணமாக நகரும் போது அவனில் செயற்கோலத்தையும், உளப்பாங்கையும் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுவது பெற்றோரின் நலன் பேணல் என்ற அம்சமாகும்.

ஒரு மனிதனுக்குக் கிடைக்கின்ற மனைவி, மக்கள், நண்பர்கள், உறவினர்கள் இவர்கள் யாவரையும் விட மரியாதைக்கு உரியவர்களும், மதிப்பளிக்கக் கூடியவர்களும் பெற்றோர்கள் தான்.

இந்த தாய் தந்தை இருவரினதும் நலனில் அக்கறை கொள்ளாது தான்தோன்றித்தனமாக நடந்து கொள்பவன் எவனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் இறைவனால் தன்பிள்ளைகளாலே இழிவு படுத்தப்பட்டு இம்சிக்கப்படுவான். பாலூட்டி, சீராட்டி, தூங்காது தன்னை வளர்த்து ஒரு முழு மனிதனாக தன்னை இந்த உலகத்திற்கு அரப்பணித்த தாயின் உள்ளம் நோகாது நடந்து கொள்ள வேண்டும்.

ஒரு தாய் தன்பிள்ளைக்கு சாபமிடத்தேவையில்லை. அவளின் மனம் நொந்தாலே நாம் வாழமாட்டோம். அத்தகைய பெறுமதி வாய்ந்தது பெற்ற தாயின் உள்ளம்.

பெற்றோர் வயோதிபத்தையடையும் போது அவர்களின் இயலாமை, பலவீனம் காரணமாக முணுமுணுப்புடன் எரிந்து விழுந்து கொண்டும், துருவித்துருவி கேள்விகள் கேட்டுக்கொண்டும், குறை கூறிக்கொண்டும் சிலர் இருப்பார்கள். இது இவர்களின் முதுமையின் மனக்குமுறலின் அடையாளமாகும்.

இதை உணர்ந்து பிள்ளைகள் தான் கனிவுடனும், பணிவுடனும் பதில் கூற வேண்டும். பெற்றோர் விடயத்தில் என்றுமே பிள்ளைகள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நாம் அவர்களின் முகத்தில் எரிந்து விழவோ அவர்களை நச்சரிக்கவோ, சனியன் எனத் திட்டவோ கூடாது.

இந்த நவீன உலகில் இத்தகைய தொல்லைகளைத் தாங்க முடியாமல் அநேகமான வயோதிப் பெற்றோர்கள் மனம் நொந்து வயோதிபப் பராமரிப்பு இல்லங்களில் போய் இருக்கிறார்கள்.

படாதபாடு பட்டு பிள்ளைகளை உலகுக்கு அளித்த பெற்றோர்களின் மனதை நோகடிக்கும் எந்தவொரு பிள்ளைக்கும் இறைவனிடத்தில் ஈடேற்றம் இல்லை. இதே நோவினைகளைத் தானும் தன்பிள்ளைகளால் அனுபவிக்க நேரிடும்.

பெற்றோரை தன் கண்மணிபோல காப்பாற்ற வேண்டியது ஆண் பெண் இரு சாராருக்கும் கட்டாயக் கடமையாகும். இத்தகைய



பிள்ளைகளுக்கே இறைவனின் திருப்தியும் நற்கூலியும் கிடைக்கும் பெற்றோருக்கு கொடுமைகள் செய்யும் ஒருவன் செய்கிற எந்தவெரு நன்மையும், பெறுமானங்கள் அற்றவையே.

சிறுவயது முதல் வாலிப வயதுவரை பெற்றோரின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் இருந்த பிள்ளை பருவவயதை அடைந்த பின்னர் ஆணோ,பெண்ணோ இன்னொரு ஆணுக்கு அல்லது பெண்ணுக்கு துணையாக நேரிடுகிறது. இக்காலகட்டத்தையடைந்ததும் தான் பெற்றோரின் தலையெழுத்து தலைகீழாக மாறிவிடுகின்றது. பெற்றோரின் கட்டளைக்கு மதிப்பளிப்பது புதியதொரு பரிமாணத்தையடைகிறது.

திருமணத்திற்குப் பின்னர் பிள்ளைகள் தமது போக்கை மாற்றிக்கொள்கிறார்கள். ஏதோ ஒருவகையில் பெற்றோர் மீதிருந்த பாசம் அற்றுப் போய்விடுகிறது. திருமணத்திற்குப் பின்னர் சில பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் அந்நியரைப் போல ஆகிவிடுகிறார்கள்.

திருமணத்தின் பின்னால் எந்தவொரு பிள்ளையும் பெற்றோர் விடயத்தில் மிகக் கவனமாகவும் புத்திசாலித்தனத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். தான் ஒரு நல்ல பிள்ளை என்பதை சொல்லாலும் செயலாலும் நிரூபிக்க வேண்டும். ஒரு போதும் ஒரு மனிதனுக்கு தனது பெற்றோரை விட மனைவி மேலாகக் கூடாது.

மனைவி அன்புக்குரியவள் தான். மரியாதைக்குரியவள் தான். ஆனால் ஒரு தாயின் ஸ்தானத்தை மனைவிக்குக் கொடுக்க முடியாது. தாயும், தாரமும் ஒன்றாக முடியாது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் தான் குடும்பச் சண்டைகள் தலைவிரித்தாடத் துவங்குகின்றன.

பல்வேறு பட்ட சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் மனைவியின் போக்கை விமர்சிக்கத் துவங்குகிறார்கள். இது அன்பிற்கான போட்டியே அன்றி வேறில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் மனைவிபற்றி சுட்டிக்காட்டும் தவறுகளை பெரிதுபடுத்தாது மிகப்பொறுமையுடன் செவிதாழ்த்திக் கேட்டு அவர்களின் அன்புக்கான போட்டியை உணர்ந்து செயற்படுவது பிள்ளைகளின் கடமையாகும்.

திருத்தவேண்டியவற்றை பொறுமையுடன் திருத்திக் கொள்ளுங்கள். தப்பித் தவறியேனும் மனக் கசப்புக்கள் நிகழ்ந்து விட்டால் பெற்றோரிடம் மன்னிப்புக்கேட்பதில் பாரிய நன்மைகள் உண்டு.

இப்படிப் பொறுமையுடன் வாழும் குடும்பங்கள் தான் ஒளிமயமானதாக இருக்கின்றன. இது தான் இறைவனை அஞ்சும் நல்ல மனிதனின் மனப்பாங்கு ஆகும்.

எதிலுமே பெற்றோரின் விருப்பத்திற்கும், கட்டளைக்கும் முன்னுரிமை கொடுங்கள். அவர்களது ஆலோசனைகளுக்கு செவி சாயுங்கள்.

இது புறக்கணிக்கப்பட்டால் உங்களது வாழ்க்கை பல கூறுகளாக சிதறிவிடுவது திண்ணம்

.......................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையின் கலை இலக்கியத்துறையில் பெண் எழுத்தாளர்களில் ஒரு சிலரே நம்பிக்கை ஏற்படும் வகையில் செயல்படுகின்றனர். அந்த வரிசையில் ஒருவர் தான் இந்த தாரிக்கா மர்ஸுக்.

மாவனெல்லையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தற்போது குருனாகலையை வசிப்பிடமாகக் கொண்டுள்ளார். அவ்வா உம்மா, சித்தீக் ஹாஜியார் தம்பதிகளின் ஏகபுதல்வி இவர். மாவனெல்லை தெல்கஹாகொட மு.ம.வி. திலும் பத்ரியா ம.கல்லூரியிலும் கற்ற இவர் அதி கூடிய விசேட சித்திகளுடன் கொழும்பு பல்கலைக்கழகச் சட்டபீடத்திற்கு தெரிவானார். இடையில் கல்விக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு தொழில் அதிபர் மர்ஸுக் உடன் இல்லறத்தில் இணைந்தார்.

தற்போது இரு பிள்ளைகளுக்குத் தாயான தாரிக்கா மர்ஸுக் ஆளுமையும், சிந்தனையாற்றலும் கொண்டவர். பழகுவதற்கு இனிமையான உள்ளம் கொண்ட இவரது ஆக்கங்கள் இலங்கையின் சகல தினசரிகளிலும், வார ஏடுகளிலும், சிற்றேடுகளிலும் கதை, கவிதை, கட்டுரை, நாடகம் என்று வெளிவருகின்றன. சில தரமான ஆக்கங்கள் சிங்கள மொழியிலும் வெளிவருவது குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலான இலக்கியப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசில்களை தனதாக்கிக் கொண்டு இவர் குருனாகல் மாவட்டத்தில் முதன் முதலில் ரூபவாஹினிக் கவியரங்கில் பங்கு கொண்ட முஸ்லிம் பெண் கவிஞர் என்ற பெருமையையும் தட்டிக் கொண்டார். கிழக்கிலங்கை தடாகம் கலை இலக்கிய வட்டத்தின் முக்கிய உறுப்பினரான தாரிக்காவின் ஏராளமான ஆக்கங்கள் இலங்கை வானொலியில் பல நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பாகி வருகின்றன. சில தரமான கட்டுரைகள் செந்தூரத்திலும் பிரசுரமாகி வருகின்றன.

இந்த பைந்தமிழ் பாவையின் நறுந் தமிழ் பூக்கள் இன்னும்... இன்னும்... கலையுலகில் மணம் வீச இதயம் பிழிந்த வாழ்த்துக்கள் தென்றலாய் தடவிச் செல்லட்டும்.

கலைமகள் ஹிதாயா ரிஸ்வி
சாய்ந்தமருது

ISBN : 955-8913-18-9
Cover Design By : P. Dilip Kumar
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org